3040.

தமிழ்ப் பொழில்

Vol 62. No. 6

ஜூ. ஆக. 1988

JL
031m, N27TP
N88.62
127043

3040

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

25 அக் 1988

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் : 6

127043

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2019

துணர்: 62 விபவ — புரட்டாசி மலர்: 6

செப்டம்பர் — அக்டோபர் — 1988

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

JL
O3:180, N27TP
N88.62 ...

உள்ளுறை பக்கம்

1. 'மான்' சாரியையா ? 242
டாக்டர். எஸ். கிருஷ்ணமூர்த்தி

2. குறுந்தொகைப் பதிப்புகள் சில பார்வைகள் ... 248
(ஆகஸ்டு இதழ் தொடர்ச்சி)
செல்வி. ந. விசாலாட்சி, எம். ஏ., எம். பில்.,

3. ஓம்படைக் கிளவி ஓர் ஒப்பியல் கண்ணோட்டம் 253
பேராசிரியர். கோ. வேங்கடாஜலம்

4. சங்கச் சமுதாயச் சூழலில் தண்ணடை நல்கலும் பிள்ளையாட்டும் ... 257
டாக்டர். பெ. மாதையன்

5. இலக்கியங்களில் விடுகதைகள் 272
மா. மீனாட்சிசுந்தரம் எம். ஏ. எம். பில்.,

6. மதிப்புரை 277
செயராணி ராசதுரை, எம். ஏ., எம்.ஃபில்.,

7. கதையாசிரியர்களும் உத்திகளும் 279
டாக்டர். இரா. சண்முகவேலன்

8. கீழ்நிலையாக்கம் 287
டாக்டர். ஏ. ஆதிததன்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர். தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
இயக்குநர். தமிழ்வளர்ச்சித்துறை, சென்னை.

,, முனைவர்சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, முனைவர். மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ. முத்துப்பிள்ளை, B.A.,
சென்னை.

,, முனைவர். ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர். தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.
புலவர் ஆ. பாலன், எம்.ஏ., ஏ.எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி

‘மான்’ சாரியையா ?

டாக்டர். எஸ். கிருஷ்ணமூர்த்தி,
விரிவுரையாளர்,
சுவடிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

சாரியை எழுத்துச் சாரியை, பதச்சாரியை என இருவகைப் படும். உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் ஆகிய எழுத்துகளை மொழியின் ·· பல்வேறு செயற்பாடுகளுக்கு உட்படுத்துதற்கு ஏதுவாகப் பயன்படுத்தப் பெறுவது எழுத்துச் சாரியையாகும். சொற்களோடு உருபுகள் புணருமிடத்தும் (உருபு புணர்ச்சி) சொற்களோடு சொற்கள் புணருமிடத்தும் பயன்படுத்தப்பெறுவது பதச்சாரியையாகும். இவ்விருவகைச் சாரியைகளும் பண்டை இலக்கண நூல்கள் வரையறுத்துக் கூறியதோடு நில்லாமல் மொழியின் வளர்நிலைகளுக்கேற்பப் புதிய சாரியைகளைப் பெற்றுப் பெருகி வருகின்றன.

சாரியை என்றால் என்ன ?

சாரியையென்பது சொற்களைச் சார்ந்து நிற்பதாகும் தான் சார்ந்து நிற்பதோடு, உருபுகள் அதனோடு சேர்வதற்குச் சார்பாகவும் நிற்கின்றது. எனவே நிலைமொழியைச் சார்ந்து நிற்பதும் வருமொழிக்குச் சார்பாக நிற்பதும் சாரியை எனலாம். இன்னின்ன ஈறுடைய சொற்கள் இன்னின்ன சாரியைகளைப் பெற்றுவரும் என்பதும், குறிப்பிட்ட சொற்கள் குறித்த சாரியை களைப் பெற்றுவரும் என்புதும் பண்டைய விதிகளாக அமைந்தன. எனினும் இவ்விதிகள் எல்லாம் மொழிவளர்ச்சியில் த்கர்த்தெறியப்பட்டுச் சாரியைகள் இன்றி உருபுகளைப் புணர்ப்பதும், வேறுசாரியைகளைப் புணர்ப்பதுமாகிய இலக்கண நெகிழ்வுகள் மொழிக்கண் தோன்றலாயின.

சாரியை பொருளுணர்த்துமா ?

இச் சாரியை பொருள் தரும் என்றும், பொருள் தராது என்றும் இரு நிலைகளை இலக்கண ஆசிரியர்கள் கொண்டுள்ளனர் ‘வேறாகி நின்ற இருமொழி தம்மிற் சார்தற்பொருட்டு இயைந்து நிற்பது’ என்பார். நச்சினார்க்கினியர் (தொல்.

எழுத். 118). ‘விகுதி முதலிய புணர்ப்பைச் சார்ந்து ஆண்டைக்கு இயைந்து நிற்றலின் சாரியை யாம்’ என்பார் சிவஞானமுனிவர் (நன். 133) இக் கூற்றுகளால் சாரியை வெறும் சார்தல் தொழிலை மட்டுமே கொண்டது என்பது புலனாகும். இவற்றிற்கு மாறாகச் ‘சொல் தொடர்ந்து செல்லும் நெற்றிக்கண் நின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள் பயந்ததும் பயவாததுமாய் நிற்பது’ என்று கூறுகிறார் அடியார்க்கு நல்லார் (சிலப். பதி. 61-62). அதனால் சாரியை பொருள் பயக்கும் தன்மையுடையது என உணரலாம். சேனாவரையர் இக் கருத்திற்கு அரண்செய்யும் வகையில், ‘தாம் சார்ந்து வரும் மொழிப்பொருட்கு உபகாரமுடையவாய் வருமாறோர்ந்து கொள்ளப் படும், அல்லாக்கால் சாரியை மொழியாகா’ (தொல், சொல். 250) என்று கூறுகிறார். அவ்வாறு பொருள் தராத சாரியை அசைநிலை என்று கொள்ளவேண்டும் என்பர் பதிற்றுப்பத்து உரைகாரர். இதனைச் ‘சாரியை பொருண்மையைச் செய்யாமையின் அசை நிலை’ எனப்படும்’ (பதிற் 51,13-14) என்ற உரைத்தொடரால் அறியலாம். சாரியைகளுள் பலவும் வேற்றுமைப்பொருளைத் தருதலை இயைபுநோக்கிக் காணமுடியும். அத்துச்சாரியை ஆறன் பொருள், ஏழன் பொருள்களைத் தருதலையும் இன்சாரியை ஆறன்பொருள் தருதலையும் பல சான்றுகள் கொண்டு உணரலாம் சான்றாக ‘அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்’ என்பதில் ‘அத்து ஏழனுருபின்கண் வந்த சாரியை’ (சிலப். 4, 3-4) என அடியார்க்குநல்லார் சுட்டுதலைக் காணலாம்.

சாரியைகளைப் பொறுத்தவரை, சொல்லோடு தனித்து நிற்றல், உருபோடு சேர்ந்து நிற்றல் என இருநிலைகள் உண்டு. தனித்துநிற்றலைச் ‘சாரியைநிற்க உருபு தொக்கது என்பர்’ அடியார்க்கு நல்லார். சாரியை சொற்களோடு தனித்து நிற்கும் போது மட்டுமே பொருளுணர்த்தும் தன்மையப் பெறும். உரு போடும் சேர்ந்து நிற்கும்பொழுது பொருளுணர்த்தும் தன்மையைப் பெறுதலில்லை.

இலக்கண நூல்கள் கூறும் சாரியைகள்

தொல்காப்பியம் முதல் இலக்கண நூல்கள் பலவும் சாரியை களைத் தொகுத்துரைக்கின்றன.

“இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்பட பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே” (எழுத்து.120)

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இந்நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர் 'பிறவும்' என்றதனால் தம், நும், எம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்பனவற்றையும் சேர்த்துக் கூறுவார். இதனைப் பின்வந்த நன்னூலார் எடுத்து மொழிந்துள்ளதை அவர்தம் நூற்பாவால் (நன்.மயிலை.243) அறியலாம். வீரசோழியம் சாரியைகளைத் தொகுத்துரைக்கவில்லை. தன், தான், தாம், ஆம் ஆ என்னும் சாரியைகளை நன்னூல் விருத்தி கூறுகின்றது (நன்.244), அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன எனப்பதினேழு சாரியைகளை நூற்பாவினுள்ளும் உம், ஞான்று, கெழு என்பனவற்றை உரையினுள்ளும இலக்கண விளக்கம் எடுத்துரைக்கின்றது (நூ. 59). சுவாமிநாதம் புதிய சாரியைகள் பலவற்றை எடுத்துரைக்கின்றது. இச்சு, ம, இ, ஞ, ட, ய, அள், அவ், அண், ஓ, ஏல், ஆல் போன்றவற்றை (நூற்.26)ப் புதிய சாரியைகளாக அறிமுகப் படுத்துகின்றது. முத்துவீரியம்

> "அத்தம் மானக் கின்னன் னொன்னிக்
> கற்றுத் தந்நம் நம்மு மாம்பிற" (நூ.174)

எனச் சாரியைகளைத் தொகுத்துக் கூறுகின்றது. இந்நூலுக்கு உரைகண்ட திருப்பாற்கடனாதன் கவிராயர் 'அத்து, அம், மான், அக்கு, இன், அன், ஒன், இக்கு, அற்று, தம், நம், நும் ஆமெனலறிக' என உரைவகுத்துள்ளார். 1889ஆம் ஆண்டில் வெளியான பதிப்பிலும் இவ்வாறே சாரியைகள் வகைப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளன.

'மான்' சாரியை

பெரும்பான்மையும் தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் அடியொற்றிச் செல்லுகின்ற நூல் முத்துவீரியமாகும். இந்நூலுள் கூறப்பட்டுள்ள சாரியைகளுள் 'மான்' என்னும் சாரியை நீங்கலாக ஏனையவை பண்டைய இலக்கண நூல்களுள்ளும் உரைகளுள்ளும் கூறப்பட்டவையாகும். 1972 ஆம் ஆண்டில் வெளியான முத்துவீரிய நூலின் பதிப்பாசிரியரும் இம் 'மான்' சாரியை முத்துவீரிய ஆசிரியரின் புதிய சாரியை என்றே முகவுரையிலும், குறிப்புரையிலும் சுட்டியுள்ளார். இந்நூலுள் அனைத்துச் சாரியைகளுக்கும் அவை புணரும் சொற்கள், அவற்றின் திரிபுகள் போன்ற இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் புதிதாகக் கூறப்பட்ட 'மான்' சாரியைக்கு மட்டும் இத்தகு இலக்கணங்கள் கூறப்படவில்லை. மேலும் இதற்குரிய அரிய

எடுத்துக்காட்டை, உரையாசிரியரோ பிறரோ எடுத்துக் கூறவும் இல்லை. இந்நிலை சிந்தித்தற்குரியதாய் உள்ளது.

ஒட்டுகள்

சாரியைகள் ஒட்டுகளாகவே கருதத்தக்கன. அவை எந்நிலையிலும் தனித்துப் பொருள் தராது சொற்களோடு சேர்ந்த பின்னரே பொருள் தரும் இயல்பின. அவ்வகையில் இம் 'மான்' என்னும் சாரியை எச்சொல்லோடு சேர்ந்து என்ன பொருளைப் பயக்கிறது என்பதும் எவ்வுருபை ஏற்பதற்கு இது சார்பாகிறது என்பதும் விளங்கா நிலையிலேயே உள்ளது. பகுதிப்பொருள் விகுதி என்ற ஒரு விகுதியை உரையாசிரியர்கள் சுட்டுகின்றனர் முறையுளி என்பதில் உளி பகுதிப்பொருள் விகுதி என்பர் நச்சினார்க்கினியர் (பெரும், 462), அவ்வகையில்தான் இந்த 'மான்' என்பது பயன்படுகின்றது. இதனை உடைமைப் பொருள் விகுதியென்றும் (புத்திமான்), மகன் என்னும் பொருள் தரும் விகுதியென்றும் (வேண்மான்), தமிழகராதி கூறுகின்றது. 'பன்மான்' என்பதில் உள்ள 'மான்' என்பது பலபடியும் என்னும் பொருட்டாய் வந்த இடைச்சொல் என்பார் நச்சினார்க்கினியர் (தொல். எழுத்து. 483) எனவே இவையன்றி 'மான்' என்பது வேறு நிலையில் மொழியில் நிலவுவதைக் காண்பது அரிதாகும்.

சாரியை ஆகுமா ?

சாரியை பயிலுமிடமும், எடுத்துக்காட்டும் கூறப்பெறாமல் 'மான்' என்பது எங்ஙனம் சாரியையாகச் சுட்டப்பட்டிருக்கும் எனச் சிந்தித்தல் முறையுடையதாகும். ஒவ்வொரு சாரியையும் பெறும் ஈறுகள் இந்நூலுள் (முத்துவீரியம்) குறிக்கப்பெறுகின்றன. அவற்றுள் 'ஆன்' என்னும் சாரியை எவ்வெச் சொற்களுக்கு வருமென்பதும் சுட்டப்பட்டுள்ளது ஒன்று முதல் எட்டுவரையுள்ள எண்களை ஊர்ந்துவரும் பத்து என்னும் எண்ணும், ஒன்பது என்னும் எண்ணும் வேற்றுமையுருபுகளைப் பெறும்பொழுது 'ஆன்' சாரியை பெறும் என்று கூறப்படுகின்றது (230, 231), நாளென்னும் சொல்லுக்கு முன் தொழிற் பெயர் வரும்பொழுதும் (பரணியாற்கொண்டான்) 'ஆன்' சாரியைப் பெறும் என்று சுட்டப்பட்டுள்ளது.

ஆயினும் இவ் 'ஆன்' என்னும் சாரியை தொகை கூறும் நூற்பாவில் கொள்ளப்பெறவில்லை என்பது குறிக்கத்தக்கதாகும். தொகை நூற்பாவில் கொள்ளப்பெறாத ஒன்றிற்குச் சிறப்புவிதி கூறுதல் என்பது இலக்கண மாறுகோளாகும். இவ் 'ஆன்' சாரியையை முன்னைய இலக்கண நூலார் அனைவரும் கூறியிருக்கவும், முத்துவீரிய ஆசிரியர் கூறவில்லை என்று

கருதுவதும் குற்றம் பயப்பதாகும். எனவே 'மான்' சாரியை என்று கொண்டது பொருத்தமுடையதன்று என்று கூறலாம். இச்சாரியைக்குப் பதிலாக 'ஆன்' என்று கொள்வதே பொருந்துவதாகும்.

பொருந்துவது எவ்வாறு ?

சாரியை கூறும் அந்நூற்பா,

"அத்தம் மானக் கின்னன் னொன்னிக்
சற்றுத் தந்நம் நும்மு மாம்பிற" (முத்துவீ. 174)

என்பதாகும், இந்நூற்பாவைப் பிரித்துப் பொருள் கொண்டவர்கள் அத்து, அர், மான், அக்கு, இன், அய், ஒன், இக்கு, அற்று, தம், நம், நும் என்று கண்டனர். ஆனால் இவை அத்து, அம், ஆன், அக்கு ... என்றுதான் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

புணர்ச்சி விதிகளுள்,

"நெடியதன் முன்னர் ஒன்றுமெய் கெடுதலுங்
குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப"
(தொல். எழுத்து. 161)

என்பதும்;

"குறிற்பின்பு மெய்கள் ஏறா உயிர்பின்வர இரண்டாகும்?" (வீரசோ. 14 என்பதும் உயிர் மொழிமுதல் வருகின்றபொழுது நிலைமொழி ஈற்று மெய்கள் இரட்டிக்கும் என்பதற்குரிய விதிகளாகும். இவ்வாறாயின் 'அத்து அம், ஆன்' என்பவை புணரும்பொழுது 'அத்தம் மான்' என்றுதானே புணர வேண்டும். அந்நூற்பாவின் மூன்று நான்காம் சீர்களின் புணர்நிலையும் அவ்வாறுதானே அமைந்திருக்கின்றது (கின்னன் னொன்னிக்கு இன் அன் ஒன் இக்). இந் நிலைகளை ஊன்றி நோக்குகிற பொழுது நூற்பாவில் மூன்றாவதாகக் கூறப்பட்ட சாரியை 'ஆன்' என்பதாகும் என உய்த்துணரலாம். 'மான்' என்பது பிழையாகக் கொள்ளப்பட்ட சொற்பிரிப்பால் நேர்ந்த விளைவாகும். இவ்விளைவு இலக்கண நூல்களில் காணப்பெறாததாக 'மான்' என்னும் சாரியையைத் தவறாகக் கொள்ளவைத்தது.

சொற்பிரிப்பில் ஏற்பட்ட பிழையும், 'ஆன்' சாரியை பெறும் இடங்கள் பின்னே கூறப்பட்டிருப்பதும், பிழையாகக் காட்டப் பெற்ற 'மான்' சாரியைக்கு எடுத்துக்காட்டு கூறப்படாததும் இச் சாரியை பெறும் இடங்கள் சுட்டப்படாததும் ஆகிய இக் காரணங்களால் முத்துவீரியத்துள் கூறப்பட்ட (நூ. 174) 'மான்' என்பது சாரியை அன்று என்றும், அது 'ஆன்' சாரியையாகவே கொள்ளப்பெற வேண்டுமென்றும் கருதப்பெறும்.

பதிப்பாசிரியர் குறிப்பு :

புணர்மொழிகளை நெறியாகப் பிரித்தறிய இயலா உரையாளரும் பதிப்பாளரும் இலக்கண ஆசிரியராகத் திகழும் நிலையைக் கட்டுரையாசிரியர் மிகவிரிவாகக் கூறியுள்ளார். புத்திமான் கல்விமான் என்பவற்றுள் உள்ள மான் என்பது மகன் என்பதன் மரூஉ என்று கொள்ளலாமாயினும் அஃது ஆடவன் (புருடன்) எனப் பொருள்படும் வடமொழிச் சொல்லாகும். பன்மான் என்பதில் வரும் மான் என்பது, ஆக்கப் பொருள்தரும் 'மன்'னென்பது நீண்டு முறைமை வரை என்னும் பொருளில் அருகிவழங்கும் இடைச்சொல்லாகும்.

— ச. பா.

பிழை திருத்தம்

துணர் 62 மலர் 4 ஆவது இதழ் பக்கம் 160இல் எழுத்து இதழ் பற்றிய செய்தியின் தொடக்கத்தில் சி. சு. செல்லப்பா என்பதற்கு மாறாகச் சிலம்பொலி சு. செல்லப்பா என அச்சாகியுள்ளது.

மேலும் பக்கம் 161 இல் 15 ஆவது மேற்கோள் குறிப்பில் சி. சு. செல்லப்பா என்பதற்கு மாறாகச் சி. சு. செல்லப்பன் என அச்சாகியுள்ளது.

பிழை பொறுத்துத் திருத்திக் கொள்க.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

குறுந்தொகைப் பதிப்புகள் — சில பார்வைகள்

செல்வி. ந. விசாலாட்சி, எம். ஏ., எம். பில்.,
ஆய்வாளர்,
தமிழ்மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

பதிப்பில் அமைந்த கூறுகள் :-

இப்பதிப்பில் முன்னதாக அமைந்துள்ள 64 பக்க ஆராய்ச்சிக் குறிப்புகளும், பதிப்பாசிரியர் நுண்மாண் நுழைபுலத்தையும், கடுமையான உழைப்பையும் காட்டுவன. ஒவ்வொரு பதிப்பாசிரியரின் பாடவேறுபாடுகளையும் இப்பதிப்பில் தொகுத்துச் சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் சாமிநாதயருடையபதிப்புக்கும், சங்கஇலக்கியப் பதிப்புக்கும் (சமாஜ பதிப்பு) 234 பாடவேறுபாடுகள் இருப்பதையும் உ. வே. சாமிநாதையர் பதிப்புக்கும், தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு (மு.சண்முகம்பிள்ளை)க்குமிடையே 260 பாடவேறுபாடுகள் இருப்பதையும் சுட்டிப் பட்டியலிட்டுத்' தந்திருப்பது பதிப்பாசிரியரின் கடுமையான உழைப்புக்குச் சான்றாகும். அவ்வாறே சங்க இலக்கியப்பதிப்புக்கும், தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புக்கும் 225 பாடவேறுபாடுகள் இருப்பதையும் உட்பதிப்புகளோடு 131 பாடவேறுபாடுகள் இருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். 'குறுந்தொகை சில புள்ளி விவரங்கள்' என்ற தலைப்பின் கீழ் பதிப்பாசிரியர் தொகுத்துத் தந்திருக்கும் அரிய செய்திகள் ஆய்வாளர் மேன்மேலும் அது குறித்துத் தொடர்ந்து ஆய்வதற்குத் துணை நிற்பனவாம்.

குறுந்தொகை தொகுக்கப்பட்டிருப்பதைக் குறித்து இப்பதிப்பாசிரியர் கூறும் கருத்து வருமாறு : 'இத்தொகை தொகுக்கப்பட்ட பாடல் வரிசைமுறை விளங்கவில்லை. தலைவன், தலைவி, தோழி போன்ற கிளவிக்குரிய முறையிலோ, குறிஞ்சி, பாலை, முல்லை, போன்ற திணை முறைகளிலோ கால அடைவிலோ கூற்றை விளக்கும் துறைகளின் முறைகளிலோ பிற ஏதுக்களின் முறையிலோ முறைப்படி தொகுக்கப்பட்டதாகத் தோன்றவில்லை'' யென்று பதிப்பாசிரியர் கூறுவது பதிப்பாசிரியரின் நேரிய முடிவாக விளங்குகின்றது எனலாம். இப்பதிப்பில் அமைந்த உள்ளுறை விவரங்களினால்

பதிப்பாசிரியருடைய உழைப்பும், ஆய்வுப் போக்கும் நன்கு புலனாகின்றன. அவ்விவரங்கள் வருமாறு :

	க. சா சு
முகவுரை	
குறுந்தொகை — மூலமும் உரையும்	1—350
பாட்டு முதற்குறிப்பு அகராதி	351—358
பாடவேறுபாடு — ஏடுகள் ஒற்றுமை வேற்றுமை	359—362
பாடவேறுபாடு ஒப்பு நோக்கு அட்டவணை	363 - 561
பாடினோரும் பாடற்குறிப்பும்	562—566
பாடலில் சுட்டப்பெற்றோர்	567
திணைமுறை	568—569
கூற்றுவகை	569—570
தொடரடைவு	571 - 672
சொல்லடைவு	673—792
பிழைதிருத்தம்	793

புதிய பாடல்கள் :-

இப்பதிப்பில் மொத்தம் 131 புதிய பாடல்களைத் தேர்வு செய்துள்ளதாகப் பதிப்பாசிரியர் குறிக்கின்றார். பாடல்களின் அமைப்புநோக்கியும் அவற்றின் பொருட்போக்கினை உட்கொண்டும், இலக்கிய இலக்கணம் மரபு கருதியும் ஏனைய பதிப்புகளில் உள்ளவாறு இப்பதிப்பில் புதியனவாய்த் தேர்ந்து கொள்ளப்பட்டன என்பார்.

சான்றாக, கடவுள் வாழ்த்துப்பாடலில் 'அஞ்சுடர் நெடுவேல்' என்பது முந்தைய பாடமாகும். ஆனால் இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட பாடம் செஞ்சுடர் நெடுவேலாகும் சேவடி, மேனி, உடுக்கை என்பன செந்நிறமாக வருணிக்கப்படுதலின் வேலும் 'செஞ்சுடர் நெடுவேல்' என்று கொள்வது பொருத்தம். 'குன்றின் நெஞ்சுபக எறிந்தவேல்' என்பதனாலும் முதற்பாட்டில் 'செங்கோல் அம்பு' என முருகனது அம்பு குறிக்கப்படுதலினாலும் இப்பாடமும் ஏற்புடைத்து எனத் துணியப் பெற்றது. பிற சங்க நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப் படையில் 'செவ்வேற் சேஎய்' என முருகன் சிறப்பிக்கப்பட்டுள்ளார். சூர் கொன்ற செவ்வேலாற்பாடி என்பது கலித்தொகை (93 :26) மன்னரின் வேலையும் 'செவ்வேல்' எனக் குறிப்பிடும் மரபே சங்க நூல்களில் காணப்படுகிறது. செவ்வேல் வயவன் (நற். 260) செவ்வேல் மலையன் (குறுந் 312) செவ்வேல் மன்னன் (அகம்209). இவற்றையும் ஒப்பு நோக்கினால் மேற்கூறிய உண்மை புலனாகும்.

எனவே பொருள் பொருத்தம், இலக்கணப் பொருத்தம், இலக்கிய ஆட்சி, முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய பாடல்களை நிறுவிய பான்மை புலனாகின்றது.

எழுகுளிறு மிதித்த என்னும் பாடம் குறித்த ஆசிரியர் ஆய்வு கருத்து வருமாறு :

> ''24 ஆம் பாடலில் ''எழுகுளிறு மிதித்த 'எழுகுளிர் மிதித்த எனப்பாடல் கொள்வாரும் உளர். குளிறு, குளிர் பொருள்களைக் கால்களால் பற்றி உருட்டுமே யல்லாது மிதித்தல் இல்லை. ஆகவே, 'நண்டு மிதித்த' என்பது மரபன்று, யானை முதலிய விலங்கு கள் பொருள்களைக் காலால் நசுக்குவதை மிதித்தல் என்று கூறுவதே பெருவழக்கு. எழுகளிறு என்பதற்கு ஏழு களிறு என்று பொருள் கொள்ளு தலும் பொருந்தாது. ஒரு களிறு மிதித்தாலே அத்திப் பழம் குழைந்து விடும். ஆகவே இங்கு எழுகளிறு எனபதற்கு எழுந்து வருகின்ற ஆண்யானை என்று கொள்வதே பொருத்தமாம். முதற் பதிப்பாசிரியர் 'எழுகின்றகளிறு' என்றும் கலாநிலைய உரைகாரரும் இப்பாடமே கொண்டு 'ஆற்று நீராடி எழுந்த ஆண்யானை என்றும் பொருள் தருகின்றனர். எனவே, 'எழுகளிறு மிதித்த' என்பதே இங்குச் சிறப்பான பாடமாகும்.''[5]

இக்குறிப்பினால் 'எழுகளிறு' என்ற பாடம் பல்வேறு பொருள் களைத் தந்து நின்று எழுகின்ற 'களிறு' என பொருள் கொள்ளுதலைச் சிறந்ததாக அமையும், என்பதனைச் சுட்டுகின்றார். இங்ஙனம் 131 புதிய பாடங்களையும் பொருள் இலக்கணமரபு நெறி அடிப்படையில் சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுத்திருப்பது பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விடுபட்ட அடிகள்

குறுந்தொகை பாடல் எண் 266, பாடல் எண் 394 ஆகிய வற்றில் உ.வே.சா பதிப்பில் விடுபட்டிருந்த அடிகளும் இப்பதிப்பில் நிரப்பபட்டுள்ளன. முதற் பதிப்பாசிரியரான சௌரிப்பெருமாள் 266 ஆம் பாடல் குறைப் பகுதியாக உள்ளது என்று எழுதியுள் ளார். ஆனால் அதற்கு பின் வந்த பதிப்பாசிரியர் இப்பாடல் குறை

5. குறுந்தொகை, மு. சண்முகம்பிள்ளை (பக் ஆ) பக் 24

பற்றிய செய்தியைக் குறிப்பிடாமலே சென்றுள்ளனர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தன்னுடைய பதிப்பில் அக்குறைப் பகுதியைப் பற்றி ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார். அவருடைய பதிப்பிலும் இக்குறைப்பகுதிக்குரிய அவ்வடியை அப்பாடலில் சேர்ந்துள்ளார். இச்செய்திகளோடு பதிப்பாசிரியர் சண்முகம் பிள்ளையவர்களுக்கு கிடைத்த பழம் சுவடியில் இக்குறைப்பகுதி அமைந்துள்ளதைச் சுட்டியுள்ளார். இப்பதிப்பிலும் பழஞ்சுவடி களில் அமைந்துள்ள பாடங்களைச் சேர்த்துப்பதிப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இங்ஙனம் முந்தைய பதிப்பாசிரியர் சேர்க்காது விடுத்த குறிப்பினைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் ஆய்ந்து சேர்ந்ததைக் குறிப்பிட்டு அதற்குச் சான்றாகப் பழம் சுவடிகளைச் சுட்டிக் காட்டுவதும் பதிப்பாசிரி யரின் ஆய்வு அணுகுமுறையை நன்குகாட்டும் பதிப்பில் அமைந்த அகராதிகள் :- ஒரு நூலைப் பதிப்பிக்கும் போது அந்நூலில் சொல் லப்பட்டுள்ள பல்வேறு செய்திகளையும் தொகுத்துக்காண்பதற்குப் பல்வேறு அடைவுகள் துணை நிற்கின்றன. இப்பதிப்பில் அமைந்துள்ள அகராதி விவரங்கள் வருமாறு; பாடவேறுபாடு ஒப்பு நோக்கு அட்டவணை (361-561) ஏறத்தாழ 200 பக்க அளவில் அமைந்துள்ளது. இது வரையிலும் குறுந்தொகைப் பதிப்பில் பயன்படுத்தப்பெறாத இலண்டன் நூலகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மகாவித்துவான் ரா. இராகவையங்கார் கையெழுத்துப்படி, மதுரைப் புலவர் இளங்குமரன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பூண்டியப்ப புலவரின் ஏட்டுக்குறிப்பு அடிகளாசிரியர் அவர்களின் வழிகிடைத்த 826 பாடல்களின் சாகிதச்சுவடி ஆகிய இந்நான்கும் இதுவரைக்கும் பதிப்பிற்குப் பயன்படுத்தப் பெறாதவை, என்பது குறிப்பிடத்தக்கது. இவையும் இக்குறுந்தொகைப் பதிப்புப் பணிக்குத் துணையாக அமைந்தமை, குறிப்பிடத்தக்கதாகும். விரிவாக அமைந்த பாட வேறுபாடு ஒப்புநோக்கு அட்டவணையில் இவை நான்குமேயன்றிச் சௌரிப்பெருமாள், கலாநிலையம், அருணாசல தேசிகர், உ. வே. சா. சங்க இலக்கியப்பதிப்பு (சமாஜப்பதிப்பு) ஆகியவற்றையும் வைத்து பாடல் நிரலில் பாட வேறுபாடு தந்திருப்பது பதிப்பாசிரியரின் பொறுமையையும் கடுமையான உழைப்பையும் காட்டும். அதனைத் தொடர்ந்து பாடினோரும் பாடற் குறிப்பும் (562-566) அகரவரிசையில் அமைந்துள்ளது. பாடலில் சுட்டப்பட்டோரையும் பதிப்பாசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். (567) திணைமுறை, கூற்றுவகை, ஆகியவற்றின் கீழும் அமைந்துள்ள பாடல்களுக்குரிய எண்கள் தொகுப்பட்டுள்ளன.

அடுத்து குறுந்தொகை நூலில் அமைந்துள்ள தொடரடைவு, தொகுக்கப்பட்டுள்ளது (571-672) இத்தொடரடைவினால் குறுந்தொகையின் பாடற் பொருளையும் சங்க இலக்கிய நடையையும், அறிந்து கொள்ள முடியும். வருணணையழகும், கற்பனைத்திறனும், தொடை நயமும் வாய்ந்த தொடர்களை தொகுத்துக் காணும் போது மொழி நடையும் மரபு மொழிகளும் அமைந்துள்ள திறம் குறித்து அறிய முடிகின்றது. ஒப்புமைநயம், சிறு தொடர் அமைப்பு, இனிய சொல்லாட்சிகள், சங்க இலக்கிய மொழி நடையின் சிறப்புக் கூறுகள், முதலியவற்றை அறிந்து கொள்வதற்கு இத்தொடரடைவு பெரிதும் பயன்படும். அவ்வாறே மதிப்பின் இறுதியில் தரப்பட்டுள்ள சொல்லடைவு (673-792) ஆய்வாளருக்கும் நூலின் செய்திகளை எளிமையாகவும் விரிவாகவும் உணர்வதற்குப் பெரிதும் பயன் தரும்

மொத்தத்தில் அழகிய அமைப்பில் நுன்மதிப்பாக அமைந்துள்ள குறுந்தொகைப்பதிப்பு பதிப்பு வரலாற்றில் குறிப்பிடக்தக்கதாக விளங்குகின்றது. பதிப்பாசிரியரின் பல்வேறு நூல்களைப் பதிப்பித்த பட்டறிவும், இவ்வழகிய பதிப்பு வெளிவருவதற்குப் பெரிதும் காரணமாய் அமைந்துள்ளது. எல்லா வகை விவரங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற இப்பதிப்பு ஆய்வாளருக்குப் பல்வேறு நிலைகளில் பயன்தரத் தக்கது. நல்ல அழகிய அமைப்போடு ஒரு திருத்தப் பதிப்பை உருவாக்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தினரும் பதிப்பாசிரியரும் பெரிதும் பாராட்டிற்குரியவராவர்.

துணைநூற்பட்டியல்

1. சண்முகம்பிள்ளை, மு. ,குறுந்தொகை, தமிழ்ப்பல்கலைக் கழகம் தஞ்சாவூர், 1985.
2. சௌரிப் பெருமாள், குறுந்தொகை, வித்யாரத்னாகர அச்சுக் கூடம் வேலூர்,1915
3. சோமசுந்தரனார், பொ. வே. , குறுந்தொகை, சைவ சி. நூ. ப கழகம், சென்னை, 1972.
4. குறுந்தொகை , மர்ரே பதிப்பு, 1981.
5. லீலாவதி 'குறுந்தொகை-முதற்பதிப்பு' ஆய்வுக்கோவை, தொகுதி 1-1975.

ஓம்படைக் கிளவி ஓர் ஒப்பியல் கண்ணோட்டம்

பேராசிரியர். கோ. வேங்கடாசலம்,
மேனாள். முதல்வர். ஈ. வெ.ரா. கல்லூரி திருச்சி,
பூக்கார விளார் சாலை, தஞ்சாவூர்.

சங்க அகத்துறைகளுள், தலைவன் தலை மகளை உடன் கொண்டு தன்னூர் போதலும் ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த உடன் போக்குத் தோழியின் உதவியுடன் நிகழ்வதாகும். இந் நிகழ்ச்சியில், தோழியின் பொறுப்பு மிகப்பெரிதாம் பெற்றோர், உற்றோர் இசைவு பெறாது ஒருவனை நம்பி, தன்னுயிர்த் தலைமகளைக் கையடை செய்து, உடன் போக்குக்கு ஒருப்படுத்துங்காலத்துத் தலைமகளின் எதிர்கால வாழ்க்கையை நினைந்து கலங்குதல் தோழிக்கு இயல்பாக ஏற்படும் உணர்ச்சியே யாகும். இந்நிலையில் தலைமகனை, தன்னுயிர்த் தலைமகளை எக்காலத்தும் கவவுக்கை நெகிழாமல் காத்தருள வேண்டும் என வேண்டிக் கொள்வதாகச் சான்றோர் செய்யுள் செய்துளர். இதற்கு ஓம்படைக்கிளவி எனப் பெயர் கூறுதல் புலனெறி வழக்கம்.

எடுத்துக்காட்டாக, நற்றிணையில் இருந்து ஓர் செய்யுள் காட்டுதும் :

"அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனியில் மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடுமுடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர !
... ... நின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே."[1]

இத்தகையதொரு காட்சியை மாபெருங் கவிஞன் காளிதாசன் வடமொழியில் இயற்றிய "சாகுந்தலம்" என்னும் நாடகத்தில் காணலாம்.

கண்வ முனிவரின் வளர்ப்பு மகளான சகுந்தலை என்பாள், முனிவர் உறையுளுக்கு வந்த அத்தினபுரத்தரசனான துஷ்யந்தனைக் கண்டு காதல் கொண்டனள். அரசனும் அவளிடத்தில் காதல் கொண்டனன். தங்கள் காதலை ஒருவருக்கொருவர் புலப்படுத்திக் கொள்ளாத நிலையில் இருவரும் உடல்நலம் இழந்து மெலிந்து வருந்தினர்,

சகுந்தலையின் தோழியரான பிரியம்வதையும், அநுசுயாவும் தங்கள் தோழியின் காதல் நோயை உய்த்துணர்ந்து கொண்டனர். தக்க வாய்ப்பு நேர்ந்ததும், அவளைத் துஷ்யந்தனோடு தனியிடத்து உய்த்துச் செல்லும் அளவில் தங்கள் தோழியின் எதிர்கால வாழ்க்கை நன் முறையில் அமைய வேண்டும் என்ற எண்ணம் தங்கள் நெஞ்சைக் கவற்ற அரசனிடம் சகுந்தலையை எக்காலத்தும் ஒரு படித்தாய்த் தலையளி செய்க என வேண்டு கின்றனர். அவர் தம் உரையாடல் வருமாறு:-

பிரியம்வதை : நீங்கள் ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள காதலின் திறம் யாவர்க்கும் எளிதாகப் புலனாவதொன்றே. ஆயினும், என் தோழியிடத்து யான் கொண்டுள்ள அன்பின் தூண்டுதலால் தங்களுக்கே தெரிந்ததை யான்கூற விழைகிறேன்.

துஷ்யந்தன் : அன்புடையாளே, மனத்துள்ளதை வெளிப் படுத்தத் தயங்க வேண்டாம் ஏனெனில், இப்போது சொல்லாததை நினைந்து பின்னர் வருந்த வேண்டி வரலாம்.

பிரியம்வதை :- தங்கள் குடிமக்களின் துயரத்தை அகற்ற வேண்டுவது, அரசன் என்ற முறையில் தங்களது தலையாய கடமையல்லவா ?

அரசன் :- ஆம் அதுவே என் கடமை.

பிரியம்வதை :- அப்படியாயின் தங்கள் மேல் வைத்த காதல் ஒன்றினால்தான் எனதருமைத்தோழி இந்த நோய்க்கு ஆளானாள் அவள் வாழ்க்கை - அவள் உயிர் - தங்கள் கையில் இருக்கிறது. அவளைத் தலையளி செய்து அவளை நலம் பெறச் செய்தருளுவீர்.

அரசன் :- பெருமை சான்றவளே, எங்கள் காதல் இரு தலைப்பட்டது. இக்காதலால் பெரும் பேறடைந்தவன் நான் தான்.

சகுந்தலை :- (பிரியம் வதையைப் பார்த்து) நெடுங்காலப் பிரிவுக்குப்பின், தன் கோப்பெரும் பெண்டிரைக் காணத்துடிக்கும் அரசர் பெருமானை நீ இவ்விதம் தாமதப்படுத்துவதின் நோக்கம் என்ன ?

அரசன் :- இனியாளே, இன்னொருத்தியை என்னால் காதலிக்க முடியும் என்ற எண்ணத்தை உன் உள்ளத்திலிருந்து அகற்றுவாய். என் இதயத்தை நீ ஒருத்தியே ஆட்கொண் டிருக்கிறாய். நான் உனக்கு உரியவன். காமன் கணையால் நான் முன்னரே கொல்லப்பட்டேன் ; இப்போது உன் சொல் லம்புகளால் நான் இரண்டாம் முறை இறந்துபடும் முன்னர் என்னை மறவாது ஏற்றுக் கொள்வாய்.

அனசூயா - அன்பரே அரசர்களுக்குப் பல மனைவியர் உண்டு எனப் பிறர்சொல்லக் கேட்டிருக்கிறோம். அதனால் எம் தோழியினுடைய உறவினர்கள் வருந்தா வகை, அவளோடு தாங்கள் ஒழுக வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோள்.

அரசன் :- மெல்லியலாய் ! கவலற்க ; அரண்மனையில் பல அழகிய மகளிர் உளர் என்பது உண்மையாயினும், இந்நாள் முதல் இரண்டு கடமைகளே எனக்குள அவற்றையே நான் போற்றுவேன் என்குடிப்பெருமைக்கேற்றவகை இந்த நாட்டை, ஆழ்வதும் இப்பேரழகியோடு வாழ்வதுமே அவ்விரண்டு கடமைகளாம்.

பிரியம்வதையும், அனசூயையும் :-

தங்கள் வன்புரையால் மன நிறைவடைந்தோம்.[2]

ஈண்டு, இவ்விரு காட்சிகளிடேயுள்ள நுண்ணிய வேறு பாட்டை நாம் அறிந்துகொள்ளுதல் சுவை பயப்பதொன்றாகும்.

களவியலில் எடுப்பாரும், கொடுப்பாரும் இன்றித் தலை மக்கள் தாமே அன்பின் வயப்பட்டொழுக, தோழி, தலைமகளது வேறுபாட்டைக் குறிகளான் உணர்ந்து உடன்பட்டு ஒழுகும் நாளில், இருவரையும் மணம் முடித்தற்கு வாய்ப்பில்லா நிலையில் உடன் போக்கிற்கு உடன்படுவாள். அந்நிலையில் தலை மகற்கு, கையடுக்குங்கால் மொழிவதே ஓம்படைஎன்பதாகும்.

அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித்தாமே எதிர்ப்பட்டு மணம் செய்து கொள்ளுதலே காந்தர்வமணம் என்பர். களவுக்கும் காந்தர்வத்துக்கும் பொதுத்தன்மை அடுப்பாரும், கொடுப்பாரும் இல்லாமையும் தாமே புணர்வதும் ஆகும். காளிதாசர் சகுந்தலை துஷ்யந்தன் காதல் மணத்தை அங்ஙனம் காட்டினார் அல்லர்.[3] தோழிகளின் இசைவே தலைமக்களை இணைப்பதாயிற்று அவர்கள், மணத்தில் இணையும் முன், ஓம்படைக்கிளவி தோழியர் கூறுவதாகக் காளிதாசர் காட்டுகின்றார்.

இவ்விரு நிலைமைத்தாய இக்காட்சிகளின் கூறுபாடுகளை யெல்லாம் இலக்கிய ஒப்பியல் வல்லார் ஆய்ந்து இன்புறுவாராக.

அடிக்குறிப்புகள்

1. நற்றிணை - பாலை 10-ஆம் செய்யுள்

2. சாகுந்தலம் - மூன்றாம் அங்கம்

3. சாகுந்தலம் - அங்கம் ஏழில், சகுந்தலையைத்தான் மணந்து கொண்டது. காந்தர்வ மணவிதிப்படி என்று துஷ்யந்தன் கூறுகிறான். அவன் கருத்து யாதெனில், சகுந்தலையை மணஞ் செய்து கொடுத்தற்கு உரியாராகிய கண்வ முனிவர் இசைவு பெறாமல் தாமே துணிந்த மணம் என்பதாகும். ஆயினும் இந்தச் சிறு வேறு பாட்டைக் கவி புகுத்தியிருப்பது நோக்கத்தக்கது என்பது என் கருத்தாகும்.

சங்கச் சமுதாயச் சூழலில் தண்ணடை நல்கலும் பிள்ளையாட்டும்

டாக்டர் பெ. மாதையன்,
விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

முன்னுரை :-

சங்கப்பாடல்கள் குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்கள் ஒரு மாறுதல் காலகட்டத்தைக் குறிப்பானவாகும். இப்பாடல்கள் சீறூர் மன்னர், குறுநிலமன்னர், வேந்தர் எனும் மூவகைத் தலைமை களையும் சீறூர்மன்னரின் வன்புலச் சமுதாயங்களான குழுச்சமுதாய மேன்மைகளையும், அழிவுளையும், மருதநிலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்களின் அரசத்தன்மை களையும், நிலக்கொள்கைகளையும், வாரிசுரிமைப் போராட்டங் களையும், குறுநிலமன்னரின் சமுதாயங்கள் வேந்தரால் உற்ற அழிவுகளையும் தெளிவாய்க் காட்டுவனவாய் உள்ளன. இச்சூழலில் மருதநில வாழ்வின் மேன்மையும் சிறப்பும் உணரப்பட்டது. புன்செய் நிலம் மிகப்பரந்துபட்ட எல்லையை உடையதாயினும் அது நண்ணி ஆளும் அரசனுக்கு எவ்வகையிலும் உதவாது அரசின் நிலை பேற்றினுக்கும் ஆதிக்க மேன்மைக்கும் எவ்வகை யிலும் பயன்படாது நிலம் நீரும் வாய்ந்தவரே, நீர்வளத்தை மிகுவித்தவரே நண்ணி ஆள்வர்; மருதச் சமுதாயத்தலைமையே நிலைத்த ஆட்சிக்கு உதவுவது (புறம். 18) என்பது உணரப் பட்டது, உணர்த்தப்பட்டது.

செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டல், ஞாலங்காவலர் தோள்வலி கெடுதல், ஒருதான் ஆகல் எனும் மூன்றினுக்கும்அடிப் படையாவது நீர்நிலப்பெருக்கமே என மருதவாழ்வின் மேன்மை உணரப்பட்ட சூழலில்தான் மகட்பாற்காஞ்சி, ஏர்க்கள உருவகம் போன்ற துறைப் பொருண்மையாவன பாடல்கள் தோற்றம் பெற்றிருக்க தேண்டும் மருதநிலம் உயர்ந்த செல்வமாக மதிக்கப் பட்ட இக்காலச் சூழலில்தான் தன் பொருட்டுபோர்மேற் சென்ற வர்க்குத் 'தண்ணடை நல்கும்' (மருத நிலமளிக்கும்) வேந்தச் செயல்களும் நிகழ்ந்திருக்க வேண்டும். இத்தண்ணடை நல்கல் புறப்பாடல்களில் இடம்பெற்றுள்ள தன்மைகளையும் அதற்கான சமுதாயப் பின்னணிகளையும் மறவர்க்கு நாடு வழங்கும் பொருண் மையதான 'பிள்ளையாட்டு' எனும் துறையினையும் இணைத் தாய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தண்ணடை நல்கலும் சான்றோன் ஆக்குதலும்

"சங்க காலத்தில் மருதநில வாழ்க்கை
பிறநில வாழ்க்கைகளில் எல்லாம்
செழிப்பு மிக்கதாயிருந்தது இங்கு,
குழுவாழ்க்கை அழிந்து, அரசு தோன்றியது,
பிறமக்களையும் அரசில் இணைத்துக்
கொள்ளப் பல போர்கள் நிகழ்ந்தன ...
ஒவ்வொரு குழுவாக அழிந்தது"
(கலைகளின் தோற்றம், ஆராய்ச்சி, ஜூலை - 1971)

என நா வானமாமலை சுட்டும் சங்கச் சூழலில் மருதநிலச் சமுதாயத் தலைவர்களாய்த் தம்மை உயர்த்திக் கொண்ட வேந்தர்கள் தங்களின் ஆக்கத்திற்கு உறுதுணையாய் நின்ற படைத்தலைவர்களையும் மறவர்களையும் தங்களின் நிரந்தரப் பாதுகாவலர்களாய் ஆக்கிக்கொள்ள வேண்டிச் செயற்பட்ட வழிகளில் ஒன்றே 'தண்ணடை நல்கல்' எனலாம். தம்மைக் காத்து தமது மேம்பாட்டுக்கு உறுதுணையாய் நின்றவர்க்குத் தண்ணடை நல்கிய வேந்தரின் செயல்களுக்கும் தண்ணடையை மட்டுமே பெறவிழைந்த மறவர் எண்ணங்களுக்கும் புறநானூற்றுப் பாடல்கள் பல சான்று பகர்கின்றன. இவற்றைப் பின்வரும் புறப்பாடலோடும் சங்கச் சமுதாயச் சூழலோடும் பிள்ளையாட்டு எனும் புறத்துறையோடும் இணைத்து ஆராயலாம்.

இவ்வாய்வினுக்கு அடிப்படையாய் அமைந்த பின்வரும் புறப்பாடல் சங்கம் சமுதாயத்தில் தாய், தந்தை, மகன், கொல்லன், வேந்தன். ஆகிய அனைவரின் செயலும் ஒருவழிப்பட்ட தன்மையதாய் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாய் மருதநிலச் சமுதாய வளர்ச்சிக் கட்டத்தில் ஒவ்வொருக்கும் இருந்த சமுதாயச் செயற்பாட்டைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

"ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம். 312)

இப்பாடலில் வரும் நான்காம் அடிக்கு 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' எனும் வேறுபட்ட பாடமும் உண்டு.

உ. வே. சா. பதிப்பிலும் இராஜம் பதிப்பிலும் (மர்ரே பதிப்பு) 'தண்ணடை நல்கல்' என்பதே பாடமாக உள்ளது. ஆனால் ஔவை துரைசாமிப்பிள்ளை 'நன்னடை' என்பதையே பாடமாகக் கொண்டுள்ளார். இத்தகு பாட வேறுபாடுகளுக்கு ஏற்பவே இப்பாடலும் வேறுபட்ட பொருள் விளக்கத்திற்கு ஆட்பட்டுள்ளது. இப்பாடலுக்கான ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரை சங்கச் சமுதாயப் பின்னணியை சிறிதும் கருத்தில் கொள்ளாததாய் சங்கச் சொற்களுக்கான பொருளை பாடற் சூழலோடும் பிறபாடல்களில் அச் சொல் வந்துள்ள பொருட் சூழல்களோடும் சங்கச் சமுதாயத்தின் பொதுவான போக்கோடும் இணைத்து நோக்காதாய் அமைந்துள்ளது.

சான்றோன் வீரனே :

இப்பாடலில் வரும் 'சான்றோன்' என்பதற்கு இருவரும் இருவேறு பொருள் கொண்டுள்ளனர்.

"தன்குலத்திற்குரிய படைக்கலப் பயிற்சியாகிய
கல்வி அதற்குரிய அறிவு அதற்குரிய
செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச்
செய்தல்." (புறநானூறு. உ. வே சா. ப. 488)

என உ. வே. சா. வும்

"அவனை நற்பண்புகளால் நிறைந்தவனாக்குவது
தந்தைபால் உள்ள கடமையாகும்.
... தாய் உடலையும், தந்தை
உடலகத்து நிலவும் உயிரறிவையும்
ஓம்புங் கடப்பாட்டினராதலால் "புறந்தருதல்"
தாய்க்குக் கடனாதலும், சான்றோனாக்குதல்
தந்தைக்குக் கடனாதலும், எடுத்தோதப்பட்டன."
(புறநானூறு, ஔவை துரைசாமிப்பிள்ளை ப. 221)

என ஔவை துரைசாமிப் பிள்ளையும் உரைகொண்டுள்ளனர். இவற்றில் சங்கச் சமுதாய வளர்ச்சியை, சமுதாயப் பின்னணியை சொல்லுக்கான சூழற்பொருளை முற்றிலும் உணர்ந்து கொள்ளாத ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரை எவ்வகையிலும் ஏற்க இயலாததாய் உள்ளது. எந்த ஒரு இலக்கியச் சொல்லுக்கும் அவ்விலக்கியங் காட்டும் சமுதாயப் பின்னணியையும் வாழ்வுச் சூழல்களையும் சமுதாய மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் அடிப்படைகளையும் புரிந்துகொண்டு அவ்வடிப்படையிலேயே

பொருள் கொள்ளவேண்டும். இவ்வடிப்படையில் 'சான்றோன்' என்பதற்கு 'வீரன்' எனப் பொருள் கொண்ட உ. வே. சாவின் உரையே ஏற்கத்தக்கதாய் உள்ளது.

சங்க இலக்கியங்களில் சான்றீர் என்பது (புறம். 301-1, 1, 4) மூன்று இடங்களிலும் சான்றோர் என்பது (பதி 14-12, 58-11, 67-18, புற. 63-5) நான்கு இடங்களிலும் வீரர் எனவே பொருள்பட்டு வந்துள்ளது. ஔவை துரைசாமிப் பிள்ளையும் பதிற்றுப்பத்தில் வரும் சான்றோர் மெய்ம்மறை என்பதற்கு வீரர்க்குக் கவசம் போன்றவன் என்றே பொருள் கொண்டுள்ளார். சான்றீர் முதலான சொற்கள் வீரர் எனவே பொருள்பட்டு வருதலானும் இப்பாடலில் வரும் அனைவரின் செயலும் வீரர் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருத்தலாலும் சான்றோன் என்பதற்கு வீரன் எனப் பொருள் கொள்வதே பொருத்தம்.

தாய் தந்தையரின் சமூகச் செயற்பாடு :-

இப்புறப்பாடல் உரைக்கின்ற தாய், தந்தை, மகன், வேந்தன் இவர்களின் இயல்புகளையும் சமுதாயச் செயற்பாடுகளையும் விளங்கிக் கொள்வதுடன் தண்ணடை நல்கல் எனும் வேந்தச் செயற்பாடு நிலவிய தன்மைகளையும் புரிந்து கொள்கின்ற பொழுதுதான் இப்பாடலின் உண்மைப் பொருளையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடியும்.

புறப்பாடல்கள் சில (புறம். 86 277, 278, 279, 286, 295) தாயின் வீரமாண்புகளைப் பாடுகின்றன. நின்மகன் யாண்டுளன் என வினவியவர்கு என்மகன் போர்க்களத்தே விளங்கித்தோன்று கிறான், இதுவே அவன் செயல் என விடைகூறுகின்றாள் ஒருதாய். (புறம். 86) தன் மகன்களிறெறிந்து பட்டான் எனும் செய்தியை உவகைச் செய்தியாகக் கேட்டு இன்புறும் தாயொருத்தி ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்து மகிழ்ச்சிக்கண்ணீர் பெருக்குகிறாள் எனப்பிறிதொரு தாயின் வீரமாண்பு உரைக்கப் பெறுகின்றது (புறம். 277) 'மண்டமர்க்கு உடைந்தனனாயின் உண்டவென் முலை அறுத்திடுவென்' என வஞ்சினம் கூறிப் பிணக்குவியலில் தன் மகனைத் தேடும் தாய் அவனின் வீரச்சாவு கண்டு பெருமிதப் படுவதை புறநானூற்றின் 278ஆம் பாடல் உரைக்கின்றது. பலர் மீது நீட்டிய மண்டை என் மகனைக்கால்கழி கட்டிலாகிய பாடையில் கிடத்தவில்லை தூவெள் ஆடையையும் போர்ப்பிக்கவில்லை எனச்சுட்டுவதன் வழி தன் மகன் பிறரால் வெல்லுதற்கு அரிய வீரமாண்புடையவன் எனக்கூறிப் பெருமிதப்படுகிறாள் மற்று

மொரு தாய் (புறம். 286) படைவிலக்கி வெட்டுண்ட தன் மகனது வீரச்சாவை எண்ணிப் பெருமிதப்படும் நிலையில் வாடுமுலை ஊறிச் சுரந்த தாயை 295 ஆம் பாடல் காட்டுகின்றது. இவ்வழிப் பட்டு தன் மகனும் வீரப்பெருமிதம் வாய்ந்தவனாக விளங்க வேண்டும் என்பதே 'ஈன்றுபுறந்தருதல், எனத்துவங்கும் பாடலில் வரும் தாயின் எண்ணமும் மகனின் வீரம் பேசும் மேற்கண்ட பாடல்வரிசையில் இப்பாடலையும் நாம் வைத்து ஆராய்தல் வேண்டும்.

'கெடுகசிந்தை' எனத்துவங்கும் 279 ஆம் புறப்பாடல் முதல் நாட் போரில் தந்தையையும் இரண்டாம் நாட்போரில் கணவனையும் இழந்த முதுகுடிமகள் ஒருத்தி மூன்றாம் நாட்போருக்குத் தன் ஒரே மகனையும் போருக்கு அனுப்பிய தாய் அவளின் மறக்குடி மாண்பு புகழப்படுகின்றது.

'நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சன்
அடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
உறைப்புழி யோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே' (புறம். 290)

எனும் இப்பாடல் தந்தையும் மகனும் வழிவழியாய் அரசர்க்குப் பாதுகாவலராய் வந்த தன்மையை எடுத்தியம்புகின்றது. இவ்விரு பாடல்களும் மறக்குடியினர் வழிவழியாய் வழிவழி வந்த அரசர்களுக்கு உற்ற துணையாய் நின்று போரையே தன் குலத் தொழிலாய்க் கொண்டு வாழ்ந்த நிலைமையை உரைக்கின்றன.

பாடுபொருளும் ஒருமித்த போக்கும் :

மறக்குடி மகளிரின் எண்ணங்களும் அக்குடி மறவர்களின் செயல்களும் போர், போர் வெற்றி, வீரச்சாவு எனும் வீரமாண்புகளையே அடிப்படையாய் கொண்டிருந்ததைத்தான் மேற்காட்டிய பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. முன்பே சுட்டியதைப் போன்று 'ஈன்று புறந்தருதல்' எனும் பாடலையும் வீரமாண்பினையே அடிப்படையாய்க் கொண்ட தாயின் பாடலாய்க் கொண்டு வீரத்தையே அப்பாடலின் பாடுபொருளாய்க் கொள்கின்ற பொழுதுதான் பாடலில் வரும் அனைவரின் செயலும் ஒருமுகப்பட்டு நிற்றலை உணரமுடிகின்றது, பாடுபொருளும் சிதைவுபடாமல் ஒருமுகப்படுகின்றது.

சான்றோனாக்குதல் என்பதற்கு நற்பண்புகளால் நிறைந்தவனாக்குதல் என்பொருள்கொண்டால் பாடலின் பாடுபொருள் சிதைவடைகின்றது சங்க இலக்கியங்களிலேயே 'சான்றீர்' 'சான்றோர்' எனுஞ்சொற்கள் வீரர் எனும் பொருளில் வழங்குதலானும் இப்பாடலில் வரும் வேல்வடித்துக் கொடுக்கும் கொல்லர் செயலும் ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயரும் காளைச் செயலும் போரோடு தொடர்புடையனவாகவே இருத்தலானும் இப்பாடலில் வரும் சான்றோன் என்பதற்கு வீரன் எனவே பொருள் கொள்ள வேண்டும். ஔவை துரைசாமிப் பிள்ளை கொண்டதுபோல் நற்பண்புகளால் நிறைந்தவனாக்குதல் எனப்பொருள் கொண்டால் வேந்தச் செயலாய நன்னடை நல்கல் என்பதற்கு நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது எனப் பொருள் கொள்வது நற்பண்புகள் நிறைந்தவனாக்கப்பட்ட ஒருவனுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பித்தல் என்பது முரண்பாடாய் முடியும். எனவே சான்றோனாக்குதல் எனும் தந்தை செயலுக்கு வீரனாக்குதல் எனப்பொருள் கொண்டு நன்னடை நல்கல் என்பதன்றித் தண்ணடை நல்கல் என்பதையே பாடமாகக் கொள்ளவேண்டும். மேற்சுட்டிய முரண்பாடு தவிர்க்கப் படுவதுடன் இதுவே சங்கச் சமுதாய மரபுக்கும் பொருந்துவதாய் அமைகிறது.

தண்ணடை நல்கும், பெறும் சங்க நிகழ்வுகள்

தண்ணடை எனுஞ்சொல் சங்க இலக்கியங்களிலே கையாளப் பட்டிருத்தலானும் (புறம்297, 299, 287, அகம் 84, நற் 391) தண்ணடை நல்கல் என்பது வேந்தரால் கைக்கொள்ளப்பட்ட செயலாக இருத்தலானும் தண்ணடை பெறும் விருப்பம் வீரர் பால் நிலவி இருத்தலானும் தண்ணடை என்ற பாடமே ஏற்கத் தக்கதாகின்றது.

தண்ணடை எனும் சொல் சங்க இலக்கியங்களில் (புறம். 297, 299, 287, அகம் 84, நற் 391) கையாளப் பெற்றுள்ளது, மேலும் தண்ணடை நல்கும் இயல்பு வேந்தர்பால் இருந்தமைக்கும் தண்ணடை பெறும் விழைவு வீரர் மத்தியில் நிலவியமைக்கும் சிலர் தண்ணடை பெற்றமைக்கும் புறநானூற்றுப் பாடல்களே சான்று பகர்கின்றன.

"பைம்பய றுதிர்த்த கோதின் கோலணைக்
கன்றுடை மரையாத் துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே நாரரி

நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
துறைநணி கெழீஇக் கம்பு ளீனும்
தண்ணடை பெறுதலு முரித்தே வைந்நுதி
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே (புறம் 297)

எனும் இப்பாடல் சீறூர் பெறுவதை மறுத்து வீரர் தண்ணடை பெறும் நிலைமைதனை உரைக்கின்றது.

"பொலம்புனை யோடை யண்ணல் யானை
இலங்குவான் மருப்பி னுதிமடுத் தூன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதிற் பிறழும்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசின் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை யுலகத்து நுகர்ப வதனால்
வம்ப வேந்தன் றானை
இம்பர் நின்றும் காண்டிரோ வரவே (புறம். 287)

இப்பாடல் மாண்புடைய வீரர்க்குத் தண்ணடை நல்கும் வழக்கு வேந்தர்பால் இருந்தமையைத் தெளிவாய்க் காட்டு கின்றது. எனினும் தண்ணடை பெறுவகைக் காட்டிலும் துறக்க உலகம் புக்கு அங்குள்ள மகளிரை மணத்தல் மேலானது என்பதை அறிவுறுத்துகின்றது. தண்ணடை பெறும் எண்ணத்தைத் திசைதிருப்பும் பண்பு மேலோங்கி நிற்றலை இப்பாடல் காட்டுகின்றது. இவ்விரண்டாம் பாடலின் நோக்கம் வேறானதாயினும் தண்ணடை பெறும் விழைவும் தண்ணடை அளிக்கும் பழக்கமும் சமுதாய நடைமுறையாக இருந்ததை இப்பாடல்கள் புலனாக்குகின்றன.

சோழன் நலங்கிள்ளி பற்றிய பாடலொன்றில் படைத்தலைவர் நாடு பெற்ற செய்தி உரைக்கப் பெறுகின்றது.

'இளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றன ருவக்குநின் படைகொண் மாக்கள்
பற்றா மாக்களிற் பரிவுமுந் துறுத்துக்
கூவை துற்ற நாற்காற் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையி னொரீஇ வருநர்க்
குதவி யாற்று நண்பிற் பண்புடை
ஊழிற் றாகநின் செய்கை ...' (புறம். 29)

எனும் இப்பாடலடிகள் கூவை இலையால் வேயப்பட்ட பந்தலை உடைய சிறிய இல்லங்களில் வாழும் இயல்பினின்றும் நீங்கி இளநீருதிர்க்கும் வளமிகு மருதநிலத்தூரைப் படை கொண்மாக்கள். பெற்று வாழும் தன்மையைக் காட்டுகின்றது. 287 ஆம் பாடலில் 'வம்பவேந்தன் தானை இம்பர் நின்றும் கண்டிரோ வரவே' என வேந்தர் பற்றிய குறிப்பு வருதலானும் மேற்காட்டிய 29 ஆம் பாடல் சோழன் நலங்கிள்ளி பற்றிய பாடலாய் இருத்தலானும் தண்ணடை நல்கும் இவ்வியல்பு வேந்தரின் மருதநிலச் சமுதாயத்தில் நிலவியிருந்தமை தெளிவு படுகின்றது.

வேந்து தொழில் அயரும் சீறூர்த் தலைவன் ஒருவன் மாற்றாரின் வேல்பாய்ந்து இறக்கும் சூழலில் முன்னே வந்த இரவலர்க்கு மருதநிலத்தூர் (தண்ணடை) களையும் பின்னே வந்த இரவலர் தலைவனுக்கு கரம்பைச் சீறூரையும் நல்கியமையைப் புறநானூற்றின் 285 ஆம் பாடல் உரைக்கின்றது. நெல்விளையா வன்புலச் சமுதாயத் தலைவனான இப்பாட்டுடைத் தலைவன் மருதநிலத்தூரைத் தான் இறக்கும் தருவாயில் இரவலர்க்கு அளித்தான் என்பதனால் இவன் வேந்தர்பால் தண்ணடை பெற்றிருத்தல் வேண்டும் எனும் குறிப்பு பெறக்கிடக்கின்றது.

புறநானூற்றில் சீறூர் மன்னர்களைப் பற்றிய பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. அச்சீறூர் மன்னர்கள் வன்புலச் சமுதாயச் தலைவர்களாய் பகுத்துண்டு வாழும் பண்பினராய்க் குடியோடு குடியாய் வாழும் இயல்பினராய் வாழ்ந்துள்ளனர். இவர்களில் எவரும் பெயரிட்டு அழைக்கப் பெற்றிலர். சீறூர் மன்னர், சீறூர் மதவலி, குரிசில், தலைவன், என இவ்வாறு பொதுப்பெயரால் மட்டுமே குறிக்கப் பெற்றுள்ளனர். வேந்துவிடு தொழிலை இவர்கள் தம் சமுதாய நலம் பேணும் தொழிலாய் மேற்கொண்டவர்கள். முன்னர்க் குறிப்பிடப்பட்ட 285 ஆம் பாடலில் வேந்துவிடு தொழில், கரம்பைச் சீறூர், கொடை மாண்பு என்பன பேசப்பட்டுள்ளமையால் இப்பாட்டின் தலைவன் ஒரு சீறூர் மன்னனாய் இருத்தல் வேண்டும். இத்தலைவன் வேந்துவிடு தொழிலான் தன்குடியையும் வேந்தனின் குடியையும் பேணிய வீரமாண்பால் மருதநிலத்தாரைப் பெற்ற சீறூர் மன்னனாய் இருக்க மிகுதியும் வாய்ப்புண்டு. மேலும் 29 ஆம் புறநானூற்றுப் பாடலில் சிறுமனை வாழ்க்கையின் நீங்கி வளமிகு மருதநிலத்தூர் பெற்ற படைத்தலைவர் என்ற குறிப்பு இருத்தலால் இத்தலைவனும் சீறூர்மன்னனாக இருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

பிள்ளையாட்டும் தண்ணடை நல்களும் :

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கரந்தைத் துறைகளை உரைக்குமிடத்து, 'பிள்ளையாட்டு' எனுமொரு துறை சுட்டப் பெறுகின்றது.

'வான்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்து பறைதூங்கா
நாடவற் கருளிய பிள்ளையாட்டும்'

(தொல். பொருள் 60- 17, 18)

என்பது தொல்காப்பியம்

'போர் தாங்கிப் புள்விலங்கி யோனைத்
தார் வேந்தன் தலையளித் தன்று'

(புறப்பொருள் வெண்பாமாலை 2-12)

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும் இத்துறைக்கு இலக்கணம் உரைக்கின்றது. தொல்காப்பிய நூற்பாவுக்கு உரையாசிரியர் களோ தத்தமக்கு ஏற்றவண்ணம் பலவாறாக உரைக்கின்றனர்.

"வாளார் பொருது உயர்ந்த அரசிளங்குமரனை
அந்நாட்டிலுள்ளார் கண்டுவந்து பறை
தூங்கிசையாக ஒலிக்கும்படி அவற்கு
அரசு கொடுத்த பிள்ளைப் பருவத்தோனைக்
கொண்டாடிய ஆட்டம்"

(தொல். பொருள். நச்சர். ப. 154)

என நச்சினார்க்கினியரும்

"வாட்போரில் வென்ற பிள்ளையை நாட்டினர்
கண்டு மகிழ்ந்து பறையொலிக்க அவ்
வரசிளங் குமரனுக்கு அரசு கொடுக்கும்
பிள்ளையாட்டும்; நாடளுதல் —
தந்தை (அரசன்) போரிற் பட்டதனால்
இளவரசற்கு நாட்டவர் முடி சூட்டுதல்"

(தொல் பொருள். பக். 533, 34)

எனப் புலவர் குழந்தையும்

"வாளான் மாறுபட்டு எழுந்தவனை
மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத்
துறக்கமாகிய நாட்டை அளித்த
பிள்ளையாட்டும் ..."

(தொல். பொருள், இளம்பூரணம் ப. 85)

என இளம்பூரணரும் உரை கூறியுள்ளனர். முன்னவர் இருவரும் அரசிளங்குமரனுக்கு அரசு கொடுத்தல் என்பதை இத்துறைக்கான இலக்கணமாய் உரைக்க, இளம்பூரணரோ வாட்போரில் ஈடுபட்ட ஒருவனுக்குத் துறக்க நாடளித்தல் எனப் பொருளுரைத்துள்ளார். இவ்விரு உரைகளுமே பொருத்தமற்றவையாக உள்ளன.

அரசிளங்குமரனுக்கு நாடுகொடுத்தல் எனுஞ் செயல் கரந்தைத்திணையில் இடம்பெற வாய்ப்பேதும் இல்லை சங்ககாலம் இனக்குழுச் சமுதாய வாழ்விழிந்து நிலவுடைமை தோன்றிய காலச் சூழலினது. இக்காலச் சூழலில்

வெட்சி, கரந்தை முதலான போர்முறைகளைக், கால்நடைப் பொருளாதாரத்தை, வன்புல விவசாயத்தை அடிப்படையாய்க் கொண்டு வாழ்ந்த சீறூர் மன்னர்களின் வன்புலக் குழுச் சமுதாயங்களில் மட்டுமே காணமுடிகின்றது. உடைமைப் பண்பு தோற்றம் பெறாமையால் கோட்டைகளோ மதில்களோ இச்சமுதாயங்களில் இல்லாக் காரணத்தால் நொச்சி, உழிஞைப் போர்களையும் காண இயலவில்லை. மாடே செல்வமாக மதிக்கப் பட்ட இச்சமுதாயங்களில் அது மட்டுமே போருக்குக் காரணமாக அமைந்தது.

மருத நிலமே நண்ணியாளுந் தன்மைக்கு ஏற்றது; அதுவே வளமைக்கு அடிப்படை, மிகு உற்பத்திக்கு ஆதாரம் என மருதநில மேன்மை உணரப்பட்ட இக்காலச் சூழலில் உடைமைச் சமுதாய / மருதநிலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்களின் செயற்பாடுகள் எல்லாம் மருதநிலத்தை அடிப்படையாய்க் கொண்டனவாகவே உள்ளன, வெட்சி, கரந்தை முதலான, மாடுபிடி சண்டைகள் இல்லாதனவாய் மருதநிலக் கொள்ளையே போருக்கான தலைமைக் காரணமாய் நிலவுகின்றது. மகட்பாற் காஞ்சி, ஏர்க்கள உருவகம், முதலாய மருதநிலத் தொடர்புடைய பொருண்மைப் பாடல்களை வேந்தர் பற்றிய பாடல்களில் மட்டுமே காணமுடிகின்றது.

வேந்தர், குறுநிலமன்னர்களின் சமுதாயங்களில் அரசு வாரிசுரிமையாய்க் கருதப்பட்டது. இச்சமுதாயங்களில் அரசுரிமைக்கெனத் தந்தையை மகன்களும் உடன்பிறந்தாரை உடன்பிறந்தாரும் எதிர்த்த அவலங்களைக் காண முடிகின்றது. புலவர்களும் "நீ உயர்ந்தோர் உலகம் எய்தி பின்னும், ஒழித்த தாயம் அவர்க்கு உரித்தன்றே ... எண்ணில் காட்சி இளையோர் தோற்பின், நின் பெருஞ் செல்வம் யார்க்கு எஞ்சுவையோ" (புறம்-213) "ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்", ...

நின்னோரன்ன நின் புதல்வர் என்றும், ஒன்னார் வாட அருங்கலம் தந்து நும், பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்த நின், முன்னோர் போல்க இவர் பெருங்கண்ணோட்டம்" என (புறம்-198). வாரிசுரிமைகளைச் சுட்டியுள்ளனர்.

"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தென,
பால்தர வந்த பழவிறல் தாயம்" (புறம்-75)

என்பதே இவ்வுடைமைச் சமுதாயங்களின் உரிமை முழக்கம்.

வன்புலச் சமுதாயத் தலைவர்களான சீறூர் மன்னர்கள் தம் குடியைப் பேணும் பொருட்டு வேந்துவிடு தொழிலில் ஈடுபட்டமையை இவர்களைப் பற்றிய புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன. இச் சீறூர்த் தலைவர்கள் வேந்தன்பால் தண்ணடை பெற்றமைக்கும் புறப்பாடல்கள் சான்று பகர்கின்றன. மேலும் மறமாண்புடைய மறக்குடி மறவர் வேந்தர்பால் நாடுபெற விழைந்தமையையும் புறப்பாடல்கள் காட்டுகின்றன.

இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்கும் பொழுது வாரிசுரிமை பின்பற்றப்பட்ட மருதநிலச் சமுதாயத்தில் அரசிளங்குமார்க்கு நாடளிக்கும் தனிநிகழ்வுகள் நிகழ்ந்திருக்க வாய்ப்பேதும் இல்லை. தண்ணடை அளிக்கும் வேந்தர் சமூகநிகழ்வு ஏனைய மறவர், சீறூர் மன்னர் போன்றவர்க்கே அன்றி வாரிசுரிமையாளர்க்கல்ல. வெட்சி, கரந்தை முதலாய போர் முறை கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாய்க் கொண்ட வன்புலச் சமுதாயப் போர்முறையாகவே இருத்தலானும் சீறூர் மன்னரே வேந்துவிடு தொழிலில் ஈடுபட்டனர் என்பதாலும் சீறூர் மன்னன் ஒருவன் போரில் இறக்குந் தருவாயில் முன்னே வந்தவர்க்கு மருதநிலத்தூரைக் கொடையாய்க் கொடுத்தான் என்பதாலும் படைகொண்மாக்கள் வன்புலச் சீறூர் வாழ்க்கையின் நீங்கி இளநீருதிர்க்கும் வளமிகு நன்னாடு பெற்றனர் என்பதாலும் வன்புலச் சமுதாயத்தோரே தண்ணடை பெற்றுள்ளனர் எனத் துணியலாம்.

"நாடருளுதல்-தந்தை (அரசன்) போரில் பட்டதனால் இளவரசனுக்கு நாட்டவர் முடிசூட்டுதல். இதனால் நாட்டுமக்களே அரசனுக்கு முடிசூட்டுதலாகிய பொது மக்களாட்சிமுறை (விரும்பியுடன்பட்ட ஆட்சி) பழந்தமிழகத்தே நடந்து வந்தமை பெறப்படும்"
(தொல்-பொருள். ப 534)

எனப் புலவர் குழந்தை கூறும் உரைவிளக்கம் சங்ககால சமூகப் பின்னணியையும் மக்களின் வாழ்வியல் முறைகளையும் அரசுக்கும் மக்களுக்கும் இடையே நிலவிய உறவுகளின் இயல்பு களையும் கவனத்தில் கொள்ளாததால் நேர்ந்த உரைப்பிசகு எனலாம். பொதுமக்களாட்சிமுறை நிலவியதாகச் சுட்டுவது எவ்வகையிலும் பொருந்தாது.

இங்கே நாம் ச. சோமசுந்தரபாரதியாரின் உரையைச் சற்றே கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வுரை நாம் முன்னர்க் காட்டிய சங்கச் சமுதாய பின்னணியுடன் சற்றே இயைந்த போவதாய் இளம்பூரணரின் 'துறக்கநாடருளுதல்' எனும் உரைக்கு மறுப்புரையாய் அமைந்துள்ளது.

"(ஆகோளல்லாத வெட்சிப்போரில்) வாளால்
பொருது வென்று வந்தவனை உவந்து
முரசொலிக்க நாட்டை அவனுக்குப்
பரிசிலாய் அளிக்கும் பிள்ளையாட்டென்னும் துறை"

என உரைகூறும் பாரதியார்.

"தனக்கு வென்றி தந்த வீரனை வேந்தன் நாடுதவிப் பாராட்டுதல் நன்றி மறவா மறக் கடனாகும். இதற்கு வாட்போரில் இறந்த மறவனுக்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டென்று இளம்பூரணர் உரை கூறுவர். இதில் 'எழுந்தோனை' என்றதனால் இறவாமை தெளியப்படும் இறந்தானை எழுந்தோ னென்பதுமரபன்று. அன்றியும் போரில் இறந்தவர்க்குத் துறக்கநாடு அருளுபவர் அவனைக் கொன்ற பகைவராவரன்றி இறந்த பொருநனின் வேந்தன் ஆகான். புறந்தராது பொருதுகளத்துயிர் கொடுத்த வனைத் தமரும் பகைவரும் பாராட்டிப் பரிந்திரங்குவர் அவன் இறந்தமைக்கு மகிழ்வது நன்மக்களியல்பன்று. ஈண்டு 'மகிழ்ந்து நாடவர்க்கருளிய' பரிசு கூறுதலானும் அஃதுரையன்மை ஒரு தலையாம்"
(தொல் காப்பியம் பொருட் படலம் புறத்திணையியல் ப. 43)

என இளம்பூரணர் உரையை மறுப்பதுடன் 'வீரர்க்கு நாடளித்தல்' என்பதையே பிள்ளையாட்டுத் துறைக்கான பொருளாய் உரைக்கின்றார். மேலும் இவரே கான்கெழு நாடு கொடுக்கும்

பழம்பாடல்* ஒன்றைச் சான்றுகாட்டி இளம்பூரணர் உரையை மேலும் மறுக்கின்றார். வீரர்க்கு நாடுகொடுத்தல் எனும் உரையே சங்கச்சமுதாயப் பின்னணிக்குப் பொருந்துவதாய் உள்ளது. வீரரும் சீறூர் மன்னரும் தண்ணடை பெற விழைந்தமைக்கும் பெற்றமைக்கும் புறநானூற்றுப் பாடல்களிலேயே சான்றுகள் இருந்தும் உரையாளர் எவரும் அதனை எடுத்துக்காட்டவில்லை.

முடிவுரை:

சங்ககாலம் இனக்குழுக்களின் வாழ்வழிந்து நிலவுடமை தோற்றம் பெறத் தலைப்பட்ட காலமாய் உள்ளது. மருதநிலம் வளமேப்பாட்டுக்கான அடிப்படையாய் நண்ணி ஆளும் அரசனின் நிலைபேற்றுக்கு ஆதாரமாய்க் கருதப்பட்டது. அரசு தனக்கே உரிய பொதுவான இயல்புகளுடன் வளரத்தலைப் பட்டது மருதநிலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்கள் பல்வேறு நிலப்பகுதிகளையும் தத்தம் அரசுடன் இணைத்துக் கொள்வதற்கான போர்களில் வெகுவாய் ஈடுபட்டனர். வன்புலச் சமுதாயத் தலைவர்களான சீறூர்மன்னர்களை வேந்துவிடு தொழிலில் ஆட்படுத்திக் கொண்டு தம் வெற்றிகளைப் பெருக்கிக் கொண்டனர். இச்சீறூர்மன்னர்களையும் மறக்குடி மறவரையும் தம்முடன் இணைத்துக் கொண்டு அவர்களின் போர் மாண்புகளைத் தம் வளர்ச்சிக்கெனப் பயன்படுத்திக் கொள்வதற் கான வழிகளில் வேந்தர்கள் ஈடுபட்டனர் வேந்துவிடு தொழிலும் தண்ணடை நல்களும் இத்தகு வழிமுறைகளில் அடங்குவனவாய் உள்ளன.

அரசுகள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு வளரத்தலைப்பட்ட இச் சமூகச் சூழலில் போர் மாண்புகள் பெரிதும் மதிக்கப்பட்டன. போர்க்கல்வி சிறப்புடைக் கல்வியாய், சான்றாண்மையாய்க் கருதப்பட்டது. இத்தகு போர்மாண்பினர் சான்றோர் என அழைக்கப்பட்டனர். மறக்குடிகளில் வீரம் வழிவழியாய்ப் போற்றிக் காக்கப்பட்டு வந்துளது. மறக்குடிகள் சில வழிவழியாய் வேந்தர்க்கு உறுதுணையாய்ச் செயல்பட்டு வந்துள்ளன. மறக்குடி மகளிரின் குரல்களும் தத்தம் மகன்களின் வீரமாண்புகளை வியந்து பாராட்டி ஓங்கி ஒலிக்கின்றன. மகனைப்

* வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட, புன்தலை யொள்வாட் புதல்வர்க்கண் டன்புற்றுக், கான்கெழு நாடு கொடுத்தான் கருதார்க்கு, வான்கெழு நாடு வர.

(தொல்காப்பியப் பொருட்படலம் புறத்திணையியல், ப. 44.)

போர்க்கல்வியால் சான்றோன்/ வீரன் ஆக்குவதையே தந்தையின் கடமையாக இச்சமுதாயம் கருதியது. இத்தகைய் சமூகப் பின்னணியில் எழுந்த 'ஈன்றுபுறந்தருதல்' எனும் புறப்பாடலும் மகனை வீரன் எனக் கேட்டு இன்புறும் தாயின் குரலாய் வீரனாக்குவதே தந்தையின் கடமை என்பதை வலியுறுத்துவதாய் அமைந்துள்ளது.

இத்தகு மறமாண்பினரை அரசுடன் இணைத்துக் கொள்வதற்கான வழிகளில் வேந்தர்கள் ஈடுபட்டனர். வேந்துவிடு தொழில் என்பது ஒருபுறம் சீறூர் மன்னரின் குழுச் சமுதாயங்களின் உணவுத் தேவையை நிறைவுசெய்வதாய் இருக்க மறுபுறத்தே வேந்தரின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தது. வேந்தரின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாய் நின்று தத்தம் மறமாண்பால் வேந்தர்க்குரிய அரசை வலிமைப்படுத்திய சீறூர் மன்னர் மறக்குடி மரவர் போன்றோர்க்கு உயர்ந்த செல்வமாய்க் கருதப் பட்ட மருதநிலத்தூரை நல்கும் வேந்தச் செயல்களும் இக் காலத்தே நிகழ்ந்துள்ளன. வேந்தர் இத்தகு தண்ணடை நல்கும் செய்களில் ஈடுபட்டமைக்கும் சீறூர் மன்னன் ஒருவன் தண்ணடை பெற்றமைக்கும் மறக்குடி மறவர் தண்ணடை பெற வீழைந்தமைக்கும் புறப்பாடல்களிலே சான்றுகள் உள்ளன.

சங்கப்பாடல்களில் வரும் தண்ணடை என்பது மருத நிலத்தூரையே குறிக்கின்றது. தண்ணடை நல்கும் வேந்தர் செயலும் மருதநிலத்தூரையே அளிப்பதாய் உள்ளது. 'பிள்ளையாட்டு' எனும் புறத்துறையும் 'நாடருளுதல்' என்பதையே சுட்டுகின்றது. இங்கு நாடு என்பது தேசம் எனும் பொருளினதன்று சங்க இலக்கியங்களில் 'இளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு பெற்றன ருவக்குநின் படைகொண் மாக்கள் (புறம்-29), 'நாடா கொன்றோ ; காடா கொன்றோ, அவலா கொன்றோ ; மிசையா கொன்றோ' (புறம்-187) எனும் இடங் களில் வரும் நாடு என்பது மருதநிலத்தையே குறிக்கின்றது. இஃதொத்தே பிள்ளையாட்டில் தொல்காப்பியர் சுட்டும் நாடருளுதல் என்பதற்கும் மருதநிலத்தூரை அளித்தல் எனவே பொருள் கொள்ள வேண்டும். தண்ணடை நல்கும் சங்கச் சமூக நிகழ்வும் 'நாடருளுதல்' எனும் பிள்ளையாட்டு இலக்கணமும் மருதநிலத்தூரை நல்குதல் எனும் ஒத்த பொருண்மையதாகவே இருத்தலான் இவ்விரண்டையும் ஒன்றெனக் கருத இங்கே மிகுதி யும் வாய்ப்புண்டு.

நாடருளுதல் என்பது வேந்தரின் செயல்களாய் இருத்தலானும் நாடு என்பதற்குத் தேசம் எனப் பொருள்

கொண்டமையானும் உரையாசிரியர்கள் அரசிளங்குமரனுக்கு நாடளித்தல்/முடிசூட்டுதல் எனப் பொருள் கொண்டுள்ளனர் ஆனால் தண்ணடை நல்கும், பெறும் பாடல் கருத்துகளை எல்லாம் அடிப்படையாய்க் கொண்டு பார்க்கின்ற பொழுது மருதநிலத்தூரைக் கொடுப்பது மருதநிலச் சமுதாயத் தலைவர் களான வேந்தரின் செயல்களாகவே இருந்த போதிலும் அதனைப் பெறும் செயல்வன்புலச் சமுதாயத் தலைவர்களின் செயல் களாகவும் மறக்குடி மறவர்களின் விழைவுகளாகவுமே உள்ளன.

ஆய்வுத் துணைநூல்கள் :

1. ''கலைகளின் தோற்றம்'', நா. வானமாமலை, ஆராய்ச்சி, 1971

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் (உரை) கழகம், மறுபதிப்பு. 1967.

3. தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் (உரை), கழகம், மறுப்பதிப்பு, 1980,

4. தொல்காப்பியர் பொருட்படலம் - புறத்திணையியல், ச. சோமசுந்தரபாரதியார் (உரை), சி. எம். வி. பிரஸ், மதுரை, 1942.

5. புறநானூறு, உ. வே. சாமிநாதையர் (உரைக்குறிப்பு), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், நிழற்படப்பதிப்பு, 1985.

6. புறநானூறு (1-200), ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, கழகம், சென்னை, மறுபதிப்பு - 1973.

7. புறநானூறு (201-400), ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, கழகம், சென்னை, மறுபதிப்பு - 1972.

இலக்கியங்களில் விடுகதைகள்

மா. மீனாட்சிசுந்தரம் எம்.ஏ. எம்.பில்.,
திட்ட உதவியாளர்
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை - 46.

நாட்டுப்புற மக்களின் சிந்தனைத்திறனையும், பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்துவனவாக விடுகதைகள் அமைந்துள்ளன. இலக்கியக் கூறுகளுக்குரிய வடிவம், அமைப்பு, கற்பனை போன்றவற்றுடன் எதுகை, மோனை, இயைபு, சொல்லாட்சி போன்ற அழகுகளுடன் அமைந்தவை விடுகதைகள் எனலாம். அறிவு புகட்டும் கருவியாக ஆக்கம் பெற்ற இவ் விடுகதைகள் இலக்கியங்களில் எவ்வாறு அமைந்துள்ளன என்பது இங்கு ஆராயப்படுகிறது.

சங்க இலக்கியமான கலித்தொகையில்,

"... ... ...
ஐதேய் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூதுமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலும் மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று
... ...

என்னும் கபிலர் பாட்டில் வந்திருக்கும் அடிகள் அனைத்தும் விடுகதையினைப் போலவே தோற்றம் அளிப்பதைக் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் இவ்வகை விடுகதை வடிவங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. வரிப்பாடல்களில் பல விடுகதைகளின் அமைப்பினைக் காணமுடிகிறது.

'கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே'

என்னும் இச்சிலம்படிகளுள்; கோவா மலையாரம் என்பது சந்தனக்கட்டையினையும், கோத்த கடலாரம் என்பது கடல் முத்தினையும் குறிப்பிடுவதைக் காணலாம்.

'கூளப்ப நாயக்கன் காதல்' எனும் நூலில்,

'காலாயுதக் கொடியோன் கையாயுத வழியே
மாலாயுதம் ஈன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்'

என்று கூறப்பட்டிருப்பதும் விடுகதையே ஆகும். இதில்,

'காலாயுதக் கொடியோன்' என்பது முருகனையும்; கையாயுத வழியே' என்பது வேலினையும், 'மாலாயுதம்' ஈன்ற என்பது சங்கின் முத்தினையும் 'தானுதிர்த்தாள்' என்பது அழுகையினையும் குறிப்பிடுவதைக் காணலாம்.

இதைப் போலவே 'தமிழ் விடு தூது' என்னும் நூலில்,

'பஞ்சி படா நூலே பலர் நெரு டாப்பாவே
எஞ்சி அழுக்கேறா இயற்கலையே ... ...'

என்று கூறியிருப்பதும் விடுகதையின்றி வேறில்லை. இதில் தமிழை ஆடைக்கு ஒப்பிட்டிருப்பதைக் காணலாம்.

ஔவையாரை 'அடி' என்று கூற ஆசைப்பட்ட கம்பர் 'ஒரு காலடி நாலிலைப் பந்தலடி' என்பது என்ன? என்று கேட்க, அதற்கு விடையாக ஔவையார் கூறிய கீழ்க்காணும் பாடலும் விடுகதை வடிவாய் இருப்பதைக் காணலாம்.

'எட்டேகால் லட்சணமே! எமனேறும் வாகனமே!
முட்டமேல் கூரை இல்லா வீடே குலராமன் தூதுவனே!

இப்பாடலில், எட்டேகால் லட்சணம் என்பது அவலட்சணத்தையும் 'எமனேறும் வாகனம்' என்பது எருமை மாட்டையும் 'கூரை இல்லா வீடு' என்பதுகுட்டிச் சுவரையும் 'குலராமன் தூதுவன்' என்பது அனுமனாகிய குரங்கினையும் குறிப்பதைக் காணலாம்.

இன்னும் தனிப்பாடல்களில் பலவும், குறவஞ்சி, பள்ளு போன்ற நூற்களிலும் சித்தர் பாடல்களிலும், திருமூலர் திருமந்திரத்திலும் இவ்விடுகதைகள் நிரம்ப உள்ளன.

பொய்யாமொழிப் புலவரிடத்தில் வேடுவனாக வந்த முருகன், தன்னுடைய பெயரை 'முட்டை' எனக் கூறி, அப்பெயரினை வைத்துப் பாடலொன்று பாடுமாறு வேண்டினான், பொய்யாமொழிப் புலவர்,

'பொன்போலும் கள்ளிப் பொரிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே — மின் போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு'

எனப் பாடினார். இப்பாடலைப் பாடி முடித்ததும் முருகன் தன்னுடைய தோற்றத்தைக் காண்பித்தான். அதன் பின்னரே பொய்யாமொழிப் புலவர் முட்டையின் பின்னால் ஒளிந் திருந்தவன் முருகனே என்பதைத் தெரிந்து கொண்டார். அவரைப் பொறுத்தவரை முருகன் தன்னிடத்தில் 'முட்டை' என்று கூறிக் கொண்டது விடுகதைதான் என்பதில் ஐயமில்லை.

இதைப் போலவேதான் ஒளவையாரைச் சோதிக்க விரும்பிய முருகன் "பாட்டி சுட்ட பழம் வேண்டுமா ? சுடாதபழம் வேண்டுமா ?" என்று கேட்டதும், பாட்டிக்குச் சுட்ட பழம் என்பது எது ? என்று தெரியாமற் போகவே, சுடாத பழத் தினையே கேட்டாள். முருகன் உலுக்கிய பழங்களில் ஒன்றை எடுத்து அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் மண் நீங்க ஊதினாள். அதைக் கண்ட முருகன், "பாட்டி ! பழம் சுடுகிறதா?" அதனைப் போட்டு விட்டுச் சுடாத பழத்தை எடுத்துக் கொள்" என்றான். அனைத்தும் கற்ற அவ்வைக்கு அப்போதுதான் உண்மை தெரிந்தது.

எனவே கரையின்றிக் கற்றுக் காலால் நடந்து கன்னித் தமிழ் வளர்த்த அவ்வைப் பாட்டியே முருகன் போட்ட விடுகதைக்குப் பொருள் தெரியாமல் திண்டாடிப் போனாள் என்று கூறினாலும் பொருந்தும் அல்லவா ?

கற்றுத்துறை போகியவர் கம்பர். இவர் தாம் இயற்றிய இராமாயணத்துள் அகத்தியனுடைய பெருமையினைக் கூறுவதற்கென்றே அகத்தியப் படலம் என்ற ஒன்றினை வகுத்துள்ளார். அகத்தியன் கைலாய மலையிலிருந்து புறப்பட்டுத் தென்பொதிகை நோக்கி வந்து கொண்டிருக்கின்றான். அப்போது அவனை விந்தியமலை தடுத்து விடுகின்றது. அதன் செருக்கினைக் கண்ட அகத்தியன் எவ்வளவோ பணிமொழி களைக் கூறிப் பார்க்கின்றான். ஆனால் விந்தியத்தின் செருக்குத் தான் மேலும் மேலும் வளர்ந்ததேயொழிய அகத்தியனுடைய பணிமொழிகளை உணரவும் இல்லை. அவனுக்கு வழியும் விட வில்லை. அதனால் கடுஞ்சினங் கொண்ட அகத்தியன் தன்னுடைய கட்டை விரலால் விந்தியத்தின் உச்சியில் ஒரு

அழுத்து அழுத்துகின்றான். அவ்வழுத்தத்தினைத் தாங்க மாட்டாத விந்தியம் பூமியினுள்ளேயே சென்று விடுகின்றது. இக்காட்சியினைக் காட்ட வந்த கம்பர்,

'யோகமுறு பேருயிர்கள் தாமுலை வுறாமல்
ஏகுநெறி யாதென மிதித்தடி யினேறி
மேகநெடும் மானலதவழ் விந்தமெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான்'

என்று கூறுகின்றார். இப்பாடலின் ஈற்றடியாகிய "நாகமது நாக முற நாகமென நின்றான்," என்பது விடுகதை வடிவில் இருப்பதை உணரலாம். இதில் மூன்று நாகங்கள் இருக்கின்றன. முதல் நாகத்திற்கு 'மலை' என்பது பொருள்; இரண்டாம் நாகத் திற்குப் 'பாதாளம்' என்பது பொருள்; மூன்றாம் நாகத்திற்கு 'யானை' என்பது பொருள்.

எனவே கம்பராமாயணத்திலும் விடுகதை வடிவங்கள் உள்ளன என்பது தெளிவு.

திருக்குறள் மணிகளைச் செந்தமிழ் மொழிக்கு வழங்கிய திருவள்ளுவனார் பாடலில் ஏராளமான விடுகதைகள் காணப்படு கின்றன. சான்றிற்கு ஒன்றினை மட்டும் இங்கு காணலாம். அவர் இன்பத்துப் பாலென்னும் காமத்துப் பாலில்,

'முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு'

என்று கூறுகின்றார். ஒன்றிற்குரிய விடைகளைக் கூறிவிட்டார். அதாவது முகை மொக்கில் இருப்பதை 'நாற்றம்' (மணம்) என்று வெளிப்படுத்திவிட்டார். ஆனால் இன்னொன்றை மட்டும் நம்மை உய்த்துணரச் செய்கின்றார். அதாவது,

"பேதையான அப்பெண்ணின் சிரிப்பிற்குள் அடங்கி யிருப்பதும் ஒன்று உண்டு. அதுதான் என்ன?" இதுவே அவருடைய வினா. இதற்கான விடையை நாம்தான் கூறல் வேண்டும்.

ஒருபெண் ஒரு ஆணைப்பார்த்துப் புன்முறுவல் செய்கின்றாள் என்றால், அதற்கு என்ன பொருள் என்பதை நமக்கு நன்றாகவே தெரியும்.

முடிவுரை :-

இவ்வாறான விடுகதை வடிவங்கள் முற்கால, பிற்கால, இடைக்கால, தற்கால நூல்களில் ஏராளமாக உள்ளன. எனவே விடுகதையென்பது கிராமப்புறத்தாரின் பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் ஒன்று என்று எண்ணுவது தவறு. இத்தகைய விடுகதைகள் இலக்கியங்களில் பயின்று வரும்போது இலக்கியத்தின் சுவை மேன்மேலும் கூடுகின்றது என்பதை நன்கறியலாம்.

யட்சகானம்

மைசூர் முதலான கருநாடகப் பகுதியிலே நடைபெற்று வரும் நாட்டிய நாடகம். நடோடி நடன வகையைச் சேர்ந்தது. இருந்தாலும் அது தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் உள்ள சீரிய நாட்டியக்கலை மரபுகளைப் பின்பற்ற முயன்றுள்ளது. இதில் நடிகர்கள் நாட்டியமாடி நடிப்பதோடு உரையாடுவார்கள்; பாட்டும் பாடுவார்கள். கன்னட மொழியிலோ, துளுவ மொழியிலோ நாடகம் எழுதப்படுகிறது. எளிய முறையில் எழுதப்பெற்றிருந்தாலும் அதில் சில சமயங்களில் நல்ல கவிதை அமிசங்கள் காணப்படும். தீபாவளி, சிவராத்திரி சமயங்களிலும், அறுவடை காலத்திற்குப் பிறகும் யட்சகானம் வழக்கமாக நடைபெறும். கோயில்களிலே இது முக்கியமாக நடக்கும் ஆனால் வேறு இடங்களிலும் நடத்தலாம்.

நடிகர்கள் அனைவரும் ஆண்களே. யட்சகானக்குழுவிற்கு மண்டலி என்று பெயர். ஒவ்வொரு மண்டலியும் ஒரு பாகவதர் பொறுப்பிலிருக்கும். பாகவதர் தான் நாட்டியத்தின் நாடகத்தை தயாரித்து அளிப்பவர்...... நாடகம் தொடங்கும் போது மேடையின் மீது இருவர் ஒரு திரையை பிடித்துக் கொள்வார்கள் முக்கிய நடிகர்கள் திரைக்குப் பின்னால் வந்து நாட்டியமாடிக் கடவுளுக்குப் பூசை புரிவார்கள். பிறகு ஒவ்வொருவராக முன்னால் வந்து கொஞ்ச நேரம் தங்கள் வீரத்தையும், திறமையையும் காண்பிக்குமாறு ஆடுவார்கள். போரைக் காண்பிக்கும் நடனங்கள் மிகப்பல உண்டு. பாகவதரும் இன்னும் சிலரும் பின்பாட்டுப் பாடுவர், மிருதங்கம், செண்டை ஆகிய வாத்தியங்கள் ஒலிக்கும். கோமாளிக்கு இதில் கடங்கி என்று பெயர். அவன் இல்லாத நாடகம் இராது.

பல நிறங்களில் ஆடம்பரமான உடைகளும் அங்கிகளும் செய்து அணிவார்கள். நிறைய நகைகளும் உண்டு. வெவ்வேறு பாகங்களுக்கேற்ற கிரீடங்களும் அணிந்திருப்பர். பெரிய எண்ணெய் விளக்குகளையோ, தீப்பந்தங்களையோ, காந்த விளக்குகளையோ வைத்துக் கொண்டு யட்சகானம் நடைபெறும்.

— கலைக் களஞ்சியம் தொகுதி எட்டு. ப-574 எஸ். எஸ்.

மதிப்புரை

செயராணி ராசதுரை, எம்.ஏ., எம்.ஃபில்.,

நாட்டுப்பாடல்—ஓர் அறிமுகம் :-

[ஆசிரியர்: பேராசிரியர் முனைவர் வ. பெருமாள், இலக்கியா-பதிப்பக வெளியீடு, சென்னை, ஏப்ரல் 1988, பக்கம் 72, விலை ரூ. 6-00.]

கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'தமிழ்ப்பொழிலில் வெளியான தொடர் கட்டுரையின் நூல் வடிவம் இது, நாட்டுப் பாடலில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்களுக்கு அடிப்படைச் செய்திகளைத் தந்து அவர்களை இத்துறையில் மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்னும் ஒரே நோக்கத்துடன் இந்நூல் இயற்றப் பெற்றது என்று ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் இலக்கியமாக அறியப்படும் நாட்டுப் பாடல்களின் தொன்மை தொல்காப்பியத்திலிருந்து சிற்றிலக்கியங்கள் வரை இந்நூலில் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது. நில அடிப்படையிலும் பருவம், சொற்றொடர், தொழில், சமயம் போன்ற பல்வேறு கூறுகளின் அடிப்படையிலும் நாட்டுப் பாடல்கள் பகுக்கப் பட்டுள்ளன.

வாய்மொழி இலக்கிய மரபு, உயர்தனிச் செம்மொழி இலக்கியங்களில் (Classical Literature) சான்றோரால் பேணப் பட்டு இலக்கிய மதிப்புப் பெற்றுள்ள நிலையைப் பல்வேறு இலக்கியச் சான்றுகளால் இந்நூலின் ஆசிரியர் விளக்கியுள்ளார்

வாழ்க்கை அனுபவங்களை, உணர்ச்சிச் சுழிப்புகளை எளிமையாக வெளிப்படுத்த வல்லன நாட்டுப்பாடல்கள்.

குடிக்கப்பாலும் கொப்பளிக்கப்—பன்னீரும்
அடுக்கடுக்காத் தருவதாச் சொன்னாயே கங்காணி
அங்கே குடிக்கக் கூழு டிங்குன்னுதே
தன்னா தான தன்னா னனா.
பட்டுப் பீதாம்பரமும் பளபளக்கும் சாக்கெட்டும்
கட்டிக் கொள்ளத்தருவதாகச் சொன்னாயே கங்காணி
அங்கே கட்டக் கந்தே டிங்குன்னுதே
தன்னா தான தன்னா னனா

ஆங்கிலேயர் ஆட்சியின் போது, குடியேற்ற நாடுகள் பலவற்றிற்கும் உழைப்பையே நம்பிப் பிழைப்பைத் தேடிச் சென்ற தமிழர்கள், கங்காணிகளின் பசப்பலுச்கு மயங்கி வாழ்வை இழந்த சோகக்கதைகளின் சொல்லோவியங்கள் இவை.

பாமரர் இலக்கியம் தானே என்று எளிதில் புறமொதுக்கிவிட முடியாத வரலாற்றுக் கருவூலங்கள் நாட்டுப் பாடல்கள் என்பதை இந்நூலின் ஆசிரியர் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வரலாற்றில், நினைத்தாலே நெஞ்சம் பதை பதைக்கும் பட்டினிச் சாவுகள் நிகழக் காரணமாக இருந்தது. 1876-இல் ஏற்பட்ட தாதுவருஷப் பஞ்சம் ஆகும். இதன் பாதிப்புகளை நேரில் கண்டு அனுபவித்தவர்களின் வேதனைக் குரல் இதோ.

தாது வருஷப் பஞ்சத்திலே — ஓ சாமியே
தாய் வேறே பிள்ளை வேறே — ஓ சாமியே
காட்டுப் பக்கம் நூறுபிணம் — ஓ சாமியே
வீட்டுப் பக்கம் நூறுபிணம் — ஓ சாமியே
ரோட்டுப் பக்கம் நூறு பிணம் — ஓ சாமியே
மேட்டுப் பக்கம் நூறு பிணம் — ஓ சாமியே
தண்ணித் தாகத்தல் வறண்டு — சாமியே
தவறினது கோடி சனம் — ஓ சாமியே
கஞ்சியில்லாமே தவித்து — ஓ சாமியே
காட்டிலே மாண்டது கோடி — ஓ சாமியே

வலிந்து தருவிக்கப்பட்ட அடைமொழிகளோ, அடுக்குத் தொடர்களோ இல்லாமல், இயல்பாக வந்து விழும் சந்த நயம், நாட்டுப் பாடல்களின் தனிப்பண்பாகும்.

சுவரில் எழுதலாம் சித்திரம் போல் பார்க்கலாம்
படத்தில் எழுதலாம் பதுமை போல் பார்க்கலாம்

எனவரும் வரிகள், ஒரு பெண்ணின் அழகைச் சொன்னாலும், நாட்டுப் பாடல்களின் எளிமைக்கும் வலிமைக்கும் பொருந்து வதையும் அறியலாம், தொன்மைக் காலம் முதல் அண்மைக் காலம் வரையிலும் நாட்டுப் பாடல்களின் தன்மைகளைக் காலக் கண்ணோட்டத்துடன் கொடுத்துள்ளார் ஆசிரியர். நாட்டுப் பாடல்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தை நிறைவாகவே தந்துள்ளார் இவர்.

(ஆகஸ்டு மாத இதழ் தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம். ஏ. எம். பில். பி. டி. பி. எச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
அ. வீ. வா. நி. திருபுட்பங் கல்லூரி,
பூண்டி.

ஏது சிறந்தது?

ஒரு செடியில் அல்லது ஒரு கொடியில் பூத்த மலர்களில் எது சிறந்தது என்று ஆராய்வது போன்றது ஓர் இலக்கியத்தில் உள்ள உத்திகளில் எந்த ஒன்று சிறப்பிற்குரியது என்று ஆராய்தல் ஆகும். ஒரு செடியின் மலர்கள் அளவில் வேண்டுமானால் மாற்றம் பெற்றிருக்கலாமே தவிர, குணத்திலோ, மணத்திலோ மாறுபாடு கொண்டிருக்க முடியாது. ஆகவே, அது குறித்த ஆராய்ச்சியும் வீணானதே. அது போன்றதுதான் உத்திகளைப் பற்றிய ஆராய்ச்சியும் ஆகும். இருப்பினும், இலக்கிய உத்திகளைப் பற்றிச் சிந்திக்கின்றவர்கள் அவர்கள் மட்டத்தில் தோன்றலாகும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

'ஆர்வி' 'சாண்டில்யனின் கன்னிமாடம்' பற்றித் திறனாய்ந் துரைக்கையில்,

> உத்திகளில் சிறந்தது நேராகச் சொல்லிக்கொண்டு போவதுதான். Straight telling என்கிறார்களே, அது ஒன்றும் அத்தனை, எளிதான வேலையல்ல. பிளாஷ்பாக்கையோ அல்லது பாத்திரங்களோ கதை சொல்வது போன்ற உத்திகளையோ, பாணியையோ கொண்டு கதையை எளிதாக நடத்திக் கொண்டு போய்விடலாம். ஆனால் முன்னால் நிகழ்ந்தது, பின்னால் நிகழ்ந்தது என்று குழப்பாமல் கதையைத் தொடங்கியது முதல் நேராகச் சொல்லிக் கொண்டு போவதுதான் கடினம். வாசகர்களைக் கதை வலு இல்லாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய முடியாது. நேராகச் சொல்கிற பாணியில் மேலே மேலே நிகழ்ச்சி களும் காட்சிகளும் வந்து கொண்டேயிருக்கவேண்டும். அப்படி இவர் (சாண்டில்யன்) ஏதோ ஒன்றைச் சொல்லி, வாசகர்களைக் கவர்ந்து விடுகிறார். [143]

என்கிறார். இக்கூற்றிலிருந்து "ஆர்வி"யைப் பொறுத்த வரையில் Straight telling (முன்னோக்கு) உத்தி சிறந்ததாக அமைகின்றது. எவ்வளவுதான் அவர்தம் கருத்திற்குக் காரணங்கள் சொன்னாலும் சரி அன்று. மொழி என்பது ஒரு தாவரம் என்றும், அதில் பூக்கும் மலரே இலக்கியம் என்றும் ஒரு கவிஞன் கூறுவது போல்,[144] இலக்கியம் என்னும் தாவரத்தில் பூக்கும் பூக்களே உத்திகள். இலக்கியங்களில் உயர்வு தாழ்வு, சிறப்பு, சிறப்பின்மை கற்பிக்கப்படுவதில்லை. அதனதன் அளவில் அது அது சிறப்பிற்குரியதே. அது போல, இலக்கிய உத்திகளும் அதனதன் அளவில் சிறப்பானதே. பயன்படுத்தும் முறையாலும் பயன்படுத்தப்பட்ட அளவாலும் வேண்டுமானால், ஓர் உத்திக்கு முதன்மைப் பேறு கிடைக்கலாம்; கிடைக்காமல் போகலாம். ஆர். கே. நாராயணின் (R. K. Narayan) The Guide[145] (1958) நீங்கலாகப்பிறவற்றி லெல்லாம்[146] அவை தற்கூற்றில் அமைந்திருந்தாலும் சரி படர்க்கைக் கூற்றில் அமைந்திருந்தாலும் சரி, கதை சொல்லும் முறை முன்னே பின்னே பார்க்காமல் முன்னேறிப்போய்க் கொண்டிருக்கிறது. (Straight telling method)[147] இவரைப் போலத் தி. ஜானகிராமன் தமது பெரும்பாலான நாவல்களையும், சிறுகதைகளையும் முன்னோக்கு உத்தியிலேயே எழுதியுள்ளார். அவ்வப்போது தீப்பொறிபோல் நனவோடை, பின்னோக்குப் போன்ற பிற உத்திகள் அவற்றில் கலந்திருந்தாலும் கண்ணிற்கோ, அறிவிற்கோ அகப்படுவதில்லை. செம்பருத்தியில் (1968) சட்டநாதன் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் கதை தொடங்கி, அவன் அறுபதாம் கல்யாணம் நடத்தி, வாழ்ந்து கொண்டிருப்பது வரை நீள்கிறது. தனி மனிதனின் அறுபதாண்டுக் கால வரலாற்றைச் சிறுக சிறுகச் வளர்முகமாகக் கதை எடுத்துச் சொல்கிறது. மூன்று பாகங்களைக் கொண்ட இந்நாவலில் ஒவ்வொரு பாகத்திற்கும் தனித்தனியே இயல் பிரிவுகள் உள்ளன. முதல் பாகத்தில் அடங்கிய 22 இயல்களிலும் கதை விடுபட்டும் தொடர்ந்தும் அமைந்திருந்தாலும் பொதுவாக கதை முன்னோக்கியே செல்கிறது. இரண்டாம் பாகத்தில் 20 இயல்களும், மூன்றாம் பாகத்தில் 8 இயல்களும் அமைந்து கதை முன்போல் மென்மேலும் வளர்ந்து முடிகின்றது. ஒவ்வொரு பாகமும் ஒன்றுக்கொன்று இயைபுடையதாய் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இன்னும் சொன்னால், முதல் பாகத்தின் பதினான்காவது இயலின் இறுதியும், பதினைந்தாவது இயலின் தொடக்கமுங்கூடத் தொடர்புடையதாய்—தொடர் ஓட்டமாய் அமைந்திருக்கிறது. இவரது அன்பே ஆரமுதேயிலும் (1965) கதை ஒவ்வோர் இயலிலும் தொடர்ந்து முன்னேறி போகிறது.

அம்மா வந்தாள் (1966), மரப்பசு (1975) போன்ற நாவல்களில் மனவோட்டம் சற்று வெளியில் தெரியுமாறு காணப்படினும் மொத்தத்தில் தி. ஜானகிராமன் முன்னோக்கு உத்தியிலேயே கதைகளை நேர்த்தியாகக் கூறுகிறார். எனவே, இவரிடம் முன்னோக்கு உத்தி சிறப்படைந்துள்ளது என்று மதிப்பிடுகிறோம். அதே நேரத்தில் முன்னோக்கு உத்தியே சிறந்தது என்று கூறுவதை மறுக்கிறோம். தி. ஜானகிராமனுக்கு இவ்வுத்தி மட்டுமே தெரிந்திருக்கிறது; அதனால் அதனை இறுகப் பற்றியுள்ளார் என்று கருதிவிடக்கூடாது.

> சொல்லப்பட வேண்டிய பொருளின் ஒருமைதான் முக்கியமானது. எட்டு நாளில் நடந்த சங்கதியை முதல் நாளிலிருந்து வரிசையாகச் சொல்லிக் கொண்டு போகலாம். இரண்டாவது, மூன்றாவது, நாலாவது நாளிலிருந்தோ அல்லது கடைசிக் கணத்திலிருந்தோ ஆரம்பித்து, பின் பார்வையாகப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகலாம். நடந்தது, நடக்கப் போவது இரண்டுக்கும் இடையே ஒரு வசதியான கால கட்டத்தில் நின்று கொண்டு நிகழ்ச்சியைச்சித்த திரித்துக் கொண்டு போகலாம்.[148]

என்று தி. ஜானகிராமன் குறிப்பிடுவது அவருடைய உத்தி பற்றிய சிந்தனையை வெளிப்படுத்துகின்றதன்றோ?

லா. ச. ராமாமிருதம், நகுலன் ஆகிய இருவரும் நனவோடை உத்தியைச் சிறப்பாகக் கையாண்டு கதைகளை எழுதியவர்கள் ஆவர். லா. ச. ராவின் புத்ர (1965), அபிதா (1970), நகுலனின் நிழல்கள் (1965), நாய்கள் (1974), நினைவுப்பாதை (1972) ஆகிய நாவல்கள் உத்தியினால் சிறப்படைகின்றன. ஆகவே, இதனை வைத்துக் கொண்டு நனவோடை உத்தி தான் உத்திகளுள் சிறந்தது என்று கூற இயலாது. டாக்டர் மு. வ. வின் நாவல்களுள் பெரிதான நெஞ்சில் ஒரு முள் (1956) தற்கூற்று நிலையில் அமைந்த, சிறப்புற்ற நாவல்களுள்ளும் ஒன்றாகும். இந்த ஒன்றில் இந்த உத்தி சிறப்படைந்திருப்பதைக் கருத்தில் கொண்டு, உத்திகளில் சிறந்தது தற்கூற்று உத்தி என்று மதிப்பிட முடியாது. எந்த உத்தியிலும் நிறை, குறை இருப்பது இயல்பு. தற்கூற்று நிலை, படர்க்கைக் கூற்று நிலை, நனவோடை, முன்னோக்குப் போன்ற உத்திகளை மதிப்பிடுகின்றவர்கள் ஒவ்வொன்றிலும் காணலாகும் குறை, நிறைகளை எடுத்துரைக்கின்றனர். இவ்வாறெல்லாம் சிந்திக்கையில்,

> ஒரு குறிப்பிட்ட உத்தி மூலம் சிறப்பாகக் கதை சொல்ல முடியும் என்று நினைத்தால் அந்த குறிப்பிட்ட உத்தியைக் கையாளுகிறான் கதாசிரியன் எனவே உத்தி என்று அதையே பெரிது படுத்தி மிதமிஞ்சி முக்கியத்துவம் கொடுத்துவிடக் கூடாது. இன்னும் ஒரு உத்தியை மட்டும் பிடித்துக் கொண்டு அதையே சலிக்கப் பண்ணக் கூடாது. ஒரு உத்தி உயர்ந்தது என்று மற்ற உத்திகளைப் புறக்கணிப்பதோ, அலட்சியம் செய்வதோ, மறுப்பதோ கூடாது[149]

என்று சி. சு. செல்லப்பாவும்.

> உத்தி மட்டும் இலக்கியமாகி விடும் என்று நான் எண்ணவில்லை. ஒரு உத்தி கையாளப்பட்டிருக்கிறது என்ற நினைப்பே எழச்செய்யாத உத்திதான் மிகச் சிறந்ததாக நினைக்கிறேன்[150]

என்ற அசோகமித்திரனும் எழுதுவது ஏற்கற்பாலது.

அளவறிந்த ஆளுகை :

கதையை உள்ளத்தில் உருவாக்கிக் கொண்டு அதனை ஏட்டில் பதிய வைக்க முற்படும் கதையாசிரியன் எந்தக் கோணத்தில் எழுதினால் சரளமாகவும் சிறப்பாகவும் அமையும் என்பதை ஓரளவு ஓர்ந்து தேர்ந்து கொள்கிறான்; சில வேளைகளில் இச்சிந்தனைக்கே இடந்தராமல் 'திடும்' என்று எழுதத் தொடங்கிவிடுகிறான்; போகப்போக, ஏதோ உணர்ச்சியால் உந்தப்பட்டு இப்படி இடறி விழுந்துவிட்டதாகத் தானே உணரவும் செய்கிறான். அகிலன் சிநேகிதி (1951) யின் கதையை எதிர்பாராத விதமாய்த் தற்கூற்று நிலையில் எழுதத் தொடங்கிப் பிறகு அதனால் ஏற்பட்ட இடர்ப்பாட்டினை பின் வருமாறு கூறுகிறார்.

> இந்த நாவலில் ஒரு பகுதியை 'நான்' என்று ஆரம்பித்து எழுதி முடித்த பிறகுதான், இதே முறையில் தொடர்ந்து எழுதுவதில் உள்ள சிரமங்களை உணர்ந்தேன். என்றாலும் இப்படி எழுதுவதன் மூலம் வாசகர்களுக்கு அருகே, வெகு சமீபத்தில் இருந்து, நேருக்கு நேர் கதை சொல்லும் இனிய அநுபவம்

> உண்டாகிறது. இந்த அரிய வாய்ப்பை விரும்பும் நான் சிறிதளவு சிரமத்தைப் பொருட்படுத்தலாமா?[151]

இதற்கு மாறாக உத்திகளை முதலில் நெஞ்சத்தில் இருத்தி, அவற்றிற்கு முதன்மை தந்து, அவற்றினை ஏட்டில் பதிய வைக்க வேண்டிக் கதையாசிரியன் முந்துவதும் உண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் அவன் கதை பாத்திரப்படைப்பு, பின்புலம் முதலிய வற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிடுகிறான். இதனால் உத்தி முந்திரிக் கொட்டையாகிவிட, மற்றவை முந்திரிப்பழமாகி விடுகின்றன. வேறு வகையாகச் சொன்னால், உத்தி முந்தி, கதை பிந்திவிடுகிறது.

திறனாய்வாளர்கள் கதையாசிரியர்களின் ஒவ்வொரு படைப்பிலும் காணக்கூடிய உத்திகளினுடைய பொருத்தங்களை ஆராய்கின்றனர்; அவற்றுள் தோன்றும் நிறை, குறைகளை எடுத்துக்காட்டுகின்றனர். அல்டஸ் ஹக்ஸ்லே (Aldous Huxley) எழுதிய (Those Barren Leaves என்னும் நாவல் உத்தியைப் பொறுத்தமட்டில் மிக பலவீனமானது என்றும்,[152] அவரது (கொருட்ஸ்டைன்) நூலினைப் போலவே, இவரது நூலிலும் (எம்மிங்வே) எழுத்தாளர்கள் கையாள வேண்டிய உத்திகளே மனத்தைக் கவர்ந்து நூலைக் குலைத்துள்ளன"[153] என்றும், "கதையைச் சொல்லப் பயன்படுத்தப்பட்டுள்ள உத்தி, கதை முக்கால் பகுதி வளர்ந்துள்ள நிலையில் திடீரென்று நொடித்துப் படிப்பவரைக் குலுக்கி விடுகிறது ... இந்த உத்தியே ஒரு குறுக்கு வழி, செயற்கை. இதனால் கதை கனம் இழந்துவிட்டது" என்றும்[154] திறனாய்ந்து உரைப்பன சான்றுகளாகும். நீலபத்மநாபனின் யாத்திரை (1974) யின் கதை சிவப்பிரகாசம் என்பவன் சனிக்கிழமை இறக்க, அவனது இறுதி யாத்திரை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை நடக்கிறது. அவனுடைய நான்கு நண்பர்கள் அவனது பாடையைச் சுமந்து செல்கின்றனர்; சுமந்து சென்றுகொண்டிருக்கும்போதே அவர்கள் தங்களுக்கும் அவனுக்கும் இருந்த உறவினை நினைக்கின்றனர். ஒருவர் நினைப்பது இன்னொருவர்க்குத் தெரியாது. இவ்வாறு நால்வரின் மனவோட்டத்தில் கதை சொல்லும் உத்தி யாத்திரை யில் அமைந்துள்ளது. இவ்வுத்தித் தேர்வு கதைக்குப் பொருத்தமாய் அமைவதோடு, கச்சிதமாகவும் அலுப்புத் தட்டாத நிலையிலும் இருக்கிறது. இதே உத்தியை நீட்டி ஒரு பெரு நாவலாக எழுதிவிடலாம். ஆனால், இதில் உள்ள 'உட்பு அமைந்தற்றால் புலவி' என்னும் உத்திக் கோட்பாடு குலைந்து, உத்திக் கரிப்

பாகிவிடும்; குல்லாய்க் கேற்ற தலை, கால்ணிக்கேற்ற கால் எனுமாறு எதிரிடையாக உண்டு பண்ணியதாகத்தான் கருதப் படும். க. நா. சுப்ரமண்யத்தின் ஒருநாளை (1950) "மிகவும் கச்சிதமாக ஒருநாள் கதையாகப் புனைந்திருக்கிறார்" என்று பாராட்டுவோர்.

> க. நா. சு. எழுதிய அசுரகணம் (1959) என்ற கதையிலும் உத்திக்கே முக்கியத்துவம் கிடைக்கிறது. அதுவும், மிகையாகவே தோன்றுகிறது. ஒரு நாவலுக்குத் தேவையான வீச்சு இல்லாத இந்தப் படைப்பு விரித்துரைத்துரைக்கப்பட்ட சிறுகதையாக அமைந்துள்ளது... நமது பண்பாட்டின் விளைவாக, அடிமனத்தில் உறையும் இதிகாசபுராணப் பாத்திரங் களின் நினைவை வெளிக்கொணர்ந்து மன்நிலையை விளக்க முயலும் க. நா. சு. தம்முடைய சோதனை முயற்சியில் உத்திக்குத் தேவையான கருப்பொருள் விரிவைக் கையாளவில்லை. கதை சொல்பவனின் குழப்ப நிலை மீண்டும் மீண்டும் ஒரே விதமாக உருவகப்படுத்தப்பட்டு கதையின் நூற்றிருபது பக்கங் களில் பெரும் பாகத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது. 'இவ்வளவு விரிவான பகுப்பாய்வுக்குப் பொருத்தமான சம்பவங்கள் கதையில் இல்லை. உத்தி பற்றிய ஒரு வாய்ப்பாடுதான் மிச்சமாகிறது.[155]

என்று குறையினையும் கூறுகின்றனர்.

இலக்கியப்படைப்பாளன் தன்னாற்றலுக்கேற்ப-தன்னனுபவத் திற்கிசைய-தன் பயிற்சிக் கொப்பச் சில உத்திகளுக்கு முதலிடம் கொடுத்து எழுதுகிறான். அதில் ஒன்றும் தவறில்லை; தவிர்க்கவும் அவனால் இயலாது. லா. ச. ராமாமிருதம் சொல்லுத் திகளுக்கும், ஜானகிராமன் உரையாடல் உத்திக்கும், நகுலன் நனவோடை உத்திக்கும், விந்தன் விமரிசன உத்திக்கும், சிவசங்கரி மன்க்குரல் உத்திக்கும் (Internal monologue) முதன்மை தந்திருப்பதை இங்குக் குறிப்பிடலாம். இத்தன்மையே இவர்களை அந்நியமாக்குகின்றது (alienation) எனலாம். இத் திறத்தாருள் பலர் ஒரே பாட்டையில் போகின்றவர்களாக இருப்பதால், நிறையைப்போல் குறையையும் உடையவர்களாய் உள்ளனர். புதுமைப்பித்தன், க. நா. சுப்ரமண்யம், கோவி. மணிசேகரன், த. ஜெயகாந்தன் போன்றோர் பல உத்தி களிலும் சோதனைகளை நிகழ்த்திப் பார்க்கின்றவர்களாக இருப்பதால், அந்தந்த மட்டத்திலும், நிறை, குறைகளுக்கு

மதிப்பிடப்படுவதற்கு உரியவர்களாகின்றனர். அப்படிப் பார்க்கையில் அவர்கள் ஒன்றில் வெற்றியும் ஒன்றில் தோல்வியும் பெற்றவர்களாய் இருப்பது இயல்பே ஆம். ஆயினும், அளவறிந்து ஆளப்படாத உத்திகள் ஓர் எழுத்தாளனுக்குப் பெருமையைத் தேடித் தரா. எழுத்துத் தோல்வி அடைகிறது; ஏனென்றால், அந்த எழுத்தாளன் தன்னுடைய பொருளைப் போதுமான அளவிற்கு அறிந்திருக்கவில்லை; அவன் போதுமான அளவு அறிந்தவனானால், போதுமான அளவு உணர்வு உடையவன் ஆவான். அப்புறம் அவன் வேலை அதனைச் சரி செய்வ தாகும். ஆனால், எந்த எழுத்தாளனாயினும் போதுமான அளவு அறிந்தவனாகவே இருக்கிறான் என்கிற திறனாய் வாளரின் கருத்து[156] உத்தி பற்றிய சிந்தனைக்கும் பொருந்தும் என்று கருதலாம்.

இறுவாய் :

இவ்வாறு கதையாசிரியர்களையும் அவர்தம் 'உத்திகளை யும்' ஆராய்ந்து மதிப்பிடுகையில் சுருக்கமாய்ச் சில கருத்துக் களை மனத்தில் இருத்தலாம். உயிரில்லாமல் உயிர்ப்பொருள் இல்லையாதல்போல் உத்தியில்லாமல் இலக்கியம் இல்லை. இலக்கியங்களை வளர்ப்பதும் வாழ்விப்பதும் உத்திகளே. உத்தி களை வளர்ப்பதும் வாழ்விப்பதும் இலக்கியங்களே. இந்தச் சிந்தனையோடு கதையாசிரியர்களிடம் வருகையில் அவர்களுடைய படைப்புக் கலையின் ஆற்றலைக் கூர் தீட்டி ஒளியூட்டி வெளிக் கொணர்வது அவர்கள் அறிந்தோ அறியாமலோ கையாளும் உத்திகளே ஆம். அவ்வுத்திகளை அவர்கள் பிறப்பிக்கின்றனர்; வளர்க்கின்றனர்; வாழ்விக் கின்றனர். அவர்களை அவ்வுத்திகள் வளர்க்கின்றன; வாழ்விக் கின்றன. பிரிக்க முடியாத இத்தகைய இயைபால் உத்திகளால் படைப்பாளர்களும் படைப்பாளர்களினால் உத்திகளும் சிறப்படைதல் கண்கூடு. கதையாசிரியர்களுக்கும் அவர்தம் உத்திகளுக்கும் இடையே உள்ள உறவுநிலை 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணியின் தன்மையினதாகும். அதனை ஆராய ஆராய நமக்கு இன்னும் எத்தனையோ எதிர்ப்படும்; அகப்படும். முயற்சிப்போமாக!

குறிப்புகள்

143. தமிழ் நாவல்கள் (நாவல்விழா கருத்துரைகள்), ப 8
144. K. M. George 'Preface', *Comparative Indian Literature* (Vol. 1), P. X.

145. இந்நாவலில் தற்கூற்றும் படர்க்கைக் கூற்றும் விரவி வந்துள்ளன.

146. *Swami and Friends* (1935), *The Dark Room* (1938) *The English Teacher* (*1935*), *Mr. Sampath* (1949), *The Bachelor of Arts* (1937) *The Financial*. Expert (1952), *Waiting for the Mahatma* (1955), *The Man-Eater of Malgudi* (196')

147. சிற்சில இடங்களில் பின்னோக்கு (Flash back) நனவோடை (Steam of Consoiousness) ஆகிய உத்திகள் சிறிது இடம் பெறுகின்றன.

148. தி. ஜானகிராமன் 'சிறுகதை எழுதுவது எப்படி?' எழுதுவது எப்படி? (முதற் தொகுதி), ப 95

149. சி. சு செல்லப்பா 'சிறுகதை அமைப்பில் உத்திகளின் பங்கு' வளரும் தமிழ் இலக்கியம், பக் 127-28.

150. அசோகமித்திரன், 'அநுபவம் எனக்கே சொந்தம்', தீபம் கட்டுரைகள், ப. 51.

151. அகிலன், 'முதற் பதிப்பின் முகவுரை', சிநேகிதி, ப. 3.

152. *Those Barren Leaves* serious and characteristic is technically rather a weak novel.
Sisin Kumar Ghose *Aldous Huxley*, p. 138.

153. மார்க்ஸ் கன்லிஃவி (ஆசிரியர்), பெ. நா. அப்புஸ்வாமி (தமிழாக்கியவர்), வசனமும் கவிதையும் (அமெரிக்க இலக்கிய வரலாறு), ப. 393.

154. பி. எஸ். ராமையா, வாழ்வில் செக்ஸ் இரண்டாம் பட்சமே' என்னும் கதையைப் பற்றி 'தராசு', அற்ப ஜீவிகள், ப. XVIII.

155. பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி) சோ. சிவபாத சுந்தரம், தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், ப. 286

156. Writing fails because the writer does not know enough about his material. It he knows enough he will feel enough. The rest is editing, Personal and otherwise. But any writer does know enough
William Sloane, *The Craft of Writing*, p 106,

கீழ்நிலையாக்கம்

டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பொருண்மைநிலையில் சில சொற்கள் உயர்ந்த பொருளைச் சுட்டும் பான்மையிலிருந்து மாற்றம்பெற்று இழிந்த பொருளைச் சுட்டுவனவாக அமையப்பெறுகின்றன. இங்ஙனம் உயர்ந்த பொருளைச் சுட்டிய சொற்கள் இழிந்த பொருளைச் சுட்டும் வகையில் அமையும் பொருண்மைநிலை மாற்றம் (Semantic Change) கீழ்நிலையாக்கம் (degradation) எனப்படும். இதனைத் தமிழ்மொழியில் அறிஞர்கள் இழிப்பொருட்பேறு என்றும் சுட்டுவர்.

மொழியில் காலப்போக்கில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாகச் சொற்கள் தம் உயர்பொருளை இழந்து இழிபொருளைப் பெறுகின்றன. பெரும்பாலும் இத்தகு மாற்றத்திற்குச் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றமே அடிப்படையாக அமைந்துள்ளது. இவ்வாறு பொருண்மை நிலையில் இழிபொருள் பெற்ற சொற்கள் சிலவற்றின் வரலாற்றினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சன்னியாசி என்னும் சொல் சன்யாசம் அல்லது துறவறம் பெற்ற ஒருவரைக் குறிக்கப் பயன்படுத்தப்பெற்று வந்தது. ஆனால் இக்காலத்தில் எந்தவித பயனும் இன்றிக் காவி உடையணிந்து, பிச்சையெடுத்து வாழ்பவரைச் சுட்ட இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. உயர்ந்த குறிக்கோள் உடைய இந்து சன்னியாசிகள் தம் குறிக்கோளை மறந்து எவ்வித பயனும் இன்றிப் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தமையானும், தம் துறவறத்திற்கும் பிரம்மச்சரியத்திற்கும் ஊறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டமையானும் சன்னியாசி என்ற சொல் இழிபொருளைப் பெறலாயிற்று.

ஒழுக்கம், துறவறம், பிரம்மச்சரியம் போன்றவற்றில் சன்னியாசிகள் பலர் குறையுடையவர்களாக அமைந்து எதற்கும் பயனின்றிப் போலித்தனத்தை மேற்கொண்டதால் இதே பண்பினைக் கொண்டு பயனின்றித் திரிபவரைக் குறிக்க இச்சொல் பயன்படலாயிற்று. போலிச் சன்னியாசிகளுக்கும் எவ்வித பயனுமின்றிப் பொய்யான வாழ்க்கை வாழும் மனிதர்களுக்குமிடையே காணப்பெறும் ஒற்றுமையே சன்னியாசி என்னும் சொல்லில் ஏற்பட்ட பொருள் மாற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.

விதவை என்னும் சொல் கணவனை இழந்த பெண்ணைக் குறிக்கப்பயன்பட்டது. ஆனால் இக்காலத்தில் இது இழிந்த பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. சமுதாயத்தில் விதவையர்களுக்கு அளிக்கப்பெற்ற இடமும் இவர்களில் சிலருடைய இழி செயலுமே இச்சொல் இழிபொருளைப் பெறுவதற்குக் காரணமாயிற்று.

சில சொற்கள் தம் உயர்பொருளை முழுமையாக இழந்து விடாமல் சில சூழல்களில் (Contexts) மட்டுமே இழிபொருளைப் பெற்றுள்ளன. வேஷம் என்ற சொல் பல சூழல்களில் ஏமாற்றுதல் என்ற பொருளில் கையாளப்பட்டாலும் ஒப்பனை என்ற இதன் இயல்பான பொருளிலும் கையாளப்படுகின்றது. ஒப்பனை என்பது பொய்யான தோற்றத்தினைச் சுட்டுவதால் பொய்யினை அடிப்படையாகக் கொண்டமையும் ஏமாற்றுதல் என்பதனைச் சுட்ட இச்சொல் பயன்படலாயிற்று.

உயர் பொருளைச் சுட்டி வந்த சொற்கள் இழிபொருளைச் சுட்டத் தொடங்கியதும் மொழியில் இவற்றினிடத்தை நிரப்ப வேறு சொற்கள் பயன்படுத்தப்படும். நாற்றம் என்னும் சொல் இழி பொருளைச் சுட்டத் தொடங்கியதும் மணம் என்னும் சொல் இதனிடத்தினைப் பெறுகின்றது. இதனைப் போன்றே சன்னியாசி என்னும் சொல்லுக்குப் பதிலாகத் துறவி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பல சொற்கள் தம் பொருளை இழந்து வேறு பொருளைப் பெற்றபோதிலும் தொடர்களாகப் பயன்படுத்தப் பெறுங்கால் தம் இயற்கையான பொருளைச் சுட்டுகின்றன. விதவை என்னும் சொல் விதவை மணம், விதவை மறுவாழ்வு என்னும் தொகைச் சொற்களில் தன் இயல்பான பொருளை உணர்த்துகின்றது.

தேவதாசி என்னும் சொல் இறைப்பணி புரியும் பெண்ணைக் குறிக்கப் பயன்பட்டது. நாளடைவில் இது விலை மாது என்ற பொருளில் பயன்படலாயிற்று. இறைப்பணியில் ஈடுபட்ட இவர்களுக்குச் சமுதாயத்தில் ஏற்பட்ட நிலை காரணமாக இழி நிலைக்குத் தள்ளப்பட்ட வரலாற்றினை இச்சொல் நன்கு விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

முண்டை என்னும் சொல் கணவனை இழந்து தலைமயிர் நீக்கப் பெற்ற பெண்ணைக் குறிக்கப் பயன்பட்டது. ஆனால் இச்சொல் இந்து சமுதாயத்தில் விதவைப் பெண்களுக்கு ஏற்பட்ட அவல நிலை காரணமாக இழிபொருளைப் பெற்றுள்ளது.

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர்—நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]			
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002,

Regd. No. TN/TB/24.

நூல் - அஞ்சல்

பெறுநர்

திருமிகு இயக்குநர்,
தமிழ்நாடு அரசு அவர்கள்
ஆவணக் காப்பகம்
எழும்பூர்
சென்னை

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

25 நவ 1988

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் : 7

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு— 2019

துணர்: 62 விபவ — ஐப்பசி மலர்: 7

அக்டோபர் — நவம்பர் 1988

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

உள்ளுறை பக்கம்

1. **நெறியின் நீங்கிய தீர்ப்புகள் சிலப்பதிகாரம், இரட்சணியசரிதம் ஒப்புநோக்கு** ... 290
   முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை
2. **கீழ்நிலையாக்கம்** 299
   (சென்ற இதழ் தொடர்ச்சி)
   டாக்டர். ஏ. ஆதித்தன்
3. **பகத்சிங்கும் இந்திய அரசியலும்** ... 301
   டாக்டர். நா. ஆறுமுகம்,
4. **இஸ்லாமியத் தமிழில் 'ங்'** 312
   P. இராஜேந்திரன்,
5. **முதல் உலகப்போருக்குப்பின் தமிழ் இலக்கியநிலை** ... 317
   மா- மீனாட்சிசுந்தரம், எம். ஏ. எம். பில்.
6. **திருக்கோவையாரும்-அகப்பொருள் மரபும்** 322
   டாக்டர். நா. செயராமன்
7. **தாய் நாற்பது** 331
   இராமசாமி கோனார்
8. **தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை** ... 333

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்.
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர். தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்., பிஎச் டி.,
இயக்குநர். தமிழ்வளர்ச்சித்துறை, சென்னை.

,, முனைவர்சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர். மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ. முத்துப்பிள்ளை, B.A.,
சென்னை.

,, முனைவர். ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர். தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம்.ஏ., ஏ.எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

நெறியின் நீங்கிய தீர்ப்புகள்
சிலப்பதிகாரம், இரட்சணிய சரிதம் - ஒப்புநோக்கு

முனைவர் தா. ஈசுவரபிள்ளை
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

இளங்கோவடிகளின் இன்றமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தின் காப்பிய நாயகனாகிய கோவலனுக்குப் பாண்டிய மன்னனால் வழங்கப் பெற்ற தீர்ப்பை விளக்கும் பகுதியையும், கிருட்டினபிள்ளை அவர்களின் காப்பியமாம் இரட்சணிய யாத்திரிகத்தின் ஒரு படலமாகிய இரட்சணிய சரிதத்தின் காப்பிய நாயகனாகிய இயேசு பெருமானுக்குப் பொந்தியு பிலாத்து என்ற ஆளுநரால் வழங்கப்பெற்ற தீர்ப்பை விளக்கும் பகுதியையும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஒப்புநோக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

நிகழ்ச்சி இடம் பெறும் சூழல்கள் :

இளங்கோவடிகள் முப்பெரும் கருத்துக்களை விளக்குவதற்காக இயற்றிய சிலப்பதிகாரத்தில் "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்ற கருத்தின் அடிப்படையில் கோவலன் கொலையுண்ணும் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. மாசாத்துவான் என்ற பெருங்குடி வணிகரின் மகனாகிய கோவலன், கண்ணகியை மணம்புரிந்து இன்பமாக இல்லறம் நடத்தி வருகின்றான். ஒருநாள் மாதவி என்ற கணிகையின் ஆடலில் மயங்கிப் பின்பு கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் பொழுதைக் கழிக்கின்றான். சில காலம் சென்ற பின்னர் மாதவியிடம் ஊடல் கொண்டு மீண்டும் கண்ணகியை அடைந்து தன் தவறுக்கு வருந்துகின்றான். கண்ணகி தன் காற் சிலம்புகளில் ஒன்றைக் கழற்றிக் கொடுக்க, அதனை விற்றுவரக் கண்ணகியுடன் மதுரை செல்கிறான். மதுரையை அடைந்து மாதரி என்ற இடைக்குல மடந்தையிடம் கண்ணகியை அடைக்கலம் கொடுத்துச் சிலம்பை விற்றுவர நகருக்குள் செல்கிறான். அப்போது வழியில் பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு சிலம்பை விலையிடுமாறு வேண்டுகிறான். பொற்கொல்லன் மன்னனின் தேவியினுடைய சிலம்பைத் திருடிய தன் குற்றத்தைக் கோவலன் மேல் சுமத்த

எண்ணுகிறான். மன்னனிடம் சென்று தேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் தன் குடிலில் இருப்பதாகக் கூறுகிறான். தேவியிடம் ஊடல்கொண்டு அவ்வூடலை நீக்கும் உள்ளத்துடன் சென்ற மன்னன் பொற்கொல்லன் கூறியதைக் கேட்டதும் ஆராயாது "கொன்றச் சிலம்பு கொணர்க" என ஆணையிடுகிறான். பொற்கொல்லன் காவலருடன் சென்று கோவலனைக் காட்டக் கோவலன் கொலை செய்யப் பெறுகின்றான்.

இரட்சணிய சரிதத்தில் உயிர்களுக்கு இவ்வுலகக் கட்டுக்களிலிருந்து விடுதலை பெறுதற்குரிய அறிவுரைகளைக் கூறிக் கொண்டிருந்த இயேசு பெருமானைக் கொலை செய்ய யூத மதத் தலைவர்கள் எண்ணுகின்றனர். யூதாசு என்ற தீயோன் ஒருவன் அவர்களிடம் 30 வெள்ளிக்காசுகளைப் பெற்றுக் கொண்டு இயேசு பெருமானைக் காட்டிக் கொடுக்க முனைகின்றான். இயேசு தன் சீடர்களுடன் பாஸ்கா விருந்தை முடித்துக்கொண்டு எருசலேம் வருகின்றார். அச்சமயம் யூதாசு மதத்தலைவர்களிடம் இயேசு பெருமானைக் கொலை செய்யத்தக்க தருணம் என அறிவித்துக் காவலருடன் வருகின்றான். இயேசு பெருமானைச் சொல்லத் தகாத சொற்களால் கடிந்தும், கட்டி வழிநெடுக இழுத்துக் கொண்டும், காய்ப்பாசு என்ற கொடியவனிடம் அழைத்துச் செல்கின்றனர். பின்னர் ஆளுநராகிய பொந்தியு பிலாத்துவிடம் அழைத்துச் சென்று இயேசு பெருமான் எந்த ஒரு மன்னனுக்கும் வரி கொடுப்பது தகாது என மக்களை எழுச்சிபெறச் செய்து கலகம் விளைவித்ததாகப் பொய்க் குற்றச்சாட்டைக் கூறினர். பிலாத்து இயேசு பெருமானிடம் விசாரித்துவிட்டு அவர்மீது குற்றம் இன்மையைக் கண்டு கொலைத் தண்டனை வழங்க மறுத்தான். பின்னர் இயேசு கலிலேயன் ஆகையால் அந்நாட்டு அதிபதி இங்குள்ளதால அவரிடம் சென்று முறையிடுமாறு கூறினான். அதன்படி இயேசுவை ஏரோதுவிடம் அழைத்துச் சென்று பொய்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். ஏரோது நன்கு விசாரித்து இவன்மீது குற்றமில்லை; எனவே இவனை மீண்டும் பிலாத்துவிடம் அழைத்துச் செல்லுங்கள் என்றான். பிலாத்து இயேசு குற்றமற்றவர் என்பதை உணர்ந்தும் யூதர்களின் வற்புறுத்தலினால் கொலைத் தீர்ப்பு வழங்கினான். அதன்படி இயேசு பெருமான் சிலுவையில் அறையப்பட்டார்.

கேரவலன் - இயேசு பெருமான்

குற்றம் சாட்டப்பெற்ற கோவலனும், இயேசு பெருமானும் உண்மையில் அக்குற்றத்தைச் செய்யாத தூய மனத்தவர்

களாகவே காணப்பெறுகின்றனர். சிலப்பதிகாரம் முழுவதும் பார்க்கும்போது கோவலன் மாதவியின் அழகில் மயங்கி, நடனத்தில் மனத்தைப் பறிகொடுத்துக் கண்ணகியைப் பிரிந்த செயல் மட்டுமே அவன் குண நலன்களுக்கு ஊறுவிளைவிப்பதாக உள்ளது. கோவலன் கொலையுண்ணப்பெறும் நிகழ்ச்சிக்குச் சற்று முன்னர் தான் மாடல மறையவன் கோவலனின் பண்புகளைப் புகழ்வதாக இளங்கோவடிகள் காட்டுகின்றார். ஒரு சமயம் தனக்கும் மாதவிக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் பெயர் சூட்டுவிழாவின் போது கோவலன் செம்பொன்னை வாரி வாரி வழங்கினான். அவனிடம் தானம் பெறவந்த அந்தணன் ஒருவனை யானை தன் துதிக் கையால் பற்ற, கோவலன் விரைந்து சென்று அவ்வந்தணனை யானையிடமிருந்து காப்பாற்றினான். இன்னொரு சமயம் ஒரு பெண் கீரிப்பிள்ளையை அறியாது கொன்ற குற்றத்திற்காக அவள் கணவன் அவள்மீது வெறுப்புற்று; வடமொழி வாசகம் எழுதிய ஏட்டைக் கையில் கொடுத்து இதை யாராவது வாங்கிப் படித்துப் பொருள்தந்தால்தான் உன்பாவம் நீங்கும் என்றான். அவள் வழிநெடுக இதைக் கூறிக்கொண்டே வருந்திச் செல்ல, கோவலன் அவளை அழைத்து அவள் உற்ற துன்பத்தை வினவி, கைப்பொருள் கொடுத்து, அவள் துயர்நீக்கி, கணவனுடன் கூட்டிவைத்தான். இன்னொருசமயம் பொய்ச்சாட்சி சொன்ன ஒருவனைப் பூதம் ஒன்று பிடித்துச் செல்ல அவன் உறவினர்கள் வருந்தினர். இதைக்கண்ட கோவலன் அப்பூதத்திடம் சென்று என்னுயிர் கொண்டு இவனுயிர் தாவென வேண்டினான். பூதம் மறுத்துப்பொய்ச்சாட்சி சொன்னவனைக் கொன்றுவிட்டது. அவன் பிரிவால் வருந்திய அவன் குடும்பத்தினருக்கு ஏராளமான பொருள் கொடுத்து உதவினான். இத்தகைய கருணை மறவனாகவும், இல்லோர்ச் செம்மலாகவும் செல்லாச் செல்வனாகவும் கோவலனை இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

இரட்சணிய சரிதத்தில் இயேசு பெருமான் இறை அவதாரமாகவே காட்டப்பெறுகின்றார். ஒப்பில்லாத நித்திய ஜீவன், சத்திய மாட்சிமை தாங்கியவர், ஞானம் நிறைந்தவர், வேதத்தின் விழுப்பொருள், தூய்ய பரிசுத்த திருத்துவத்தில் ஒன்றாகிய தனிச்சுடர், அழிவற்ற இவ்வுலகை உண்டுபண்ணும் மெய்வழி, மன்னுயிரைக் காக்கத் தன்னுயிரை ஈந்திடும் தெய்வ நாயகர், உயிர்களிடத்து மன்னித்தேன் என்ற சொல்லாகிய மருந்தைச் சொல்லும் சொல் வல்லாளர், திருமறையின் முதல்வன், குற்றமற்ற புண்ணிய புருடோத்தமர், நினைப்பார் நினைப்பவற்றை அறியும் எம்பிரான், வானவர்க்கு அரசன், பாவக்கட்டு அணுகாத பராபரனது மைந்தர், உலகைப் பரிபாலனம் செய்யும் பரமர், உலகோர் பாவத்தைச் சுமந்தவர், கடவுளிடமிருந்து தோன்றியவர், அருளற்றவனின் ஆன்மப்பசியை நீக்கும் அருமருந்து, ஊழிக்கு நாயகன், நீதியின் சூரியன் உலக இரட்சகன், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முது மூலத்து ஒருபொருள் தனக்கெனத் தோற்றமும், அழிவும் இல்லாதவர், அகில கோடிகளையும் உள் நின்று ஆட்டுவிக்கும் விந்தையுடையவர், முடிவில்லாத மூத்தரின் ஆன்ம நோய் தீர்க்கும் சஞ்சீவி, என்றெல்லாம் பல நிலைகளில் ஆசிரியர் இயேசுநாதரின் போற்றற்கரிய பெருமைகளைப் போற்றி மகிழ்கின்றார். இவண் சுட்டப்பெறும் இரு காப்பிய நாயகர்களுமே பண்பில் தலை சிறந்தவர்களாயினும் கோவலன் மனிதன் என்ற நிலையில் சில பலவீனங்கள் உடையவனாகவும், இயேசுநாதர் இறை அவதாரம் என்ற நிலையில் நிறைப் பண்பு உடையவராகவும் காட்டப்பெறுகின்றனர். பின்னால் கூறப்பெறும் குற்றச் சாட்டிற்கு இலக்காகும் தன்மையர் அல்லர் எனப் படிப்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் இருவரின் உயர் குண நலன்களும் காட்டப்பெறுகின்றன.

கொலையுறுதற்குக் காரணமானவர்கள்

சிலம்பில் பாண்டிய மன்னனின் அரண்மனையில் பணியாற்றிய பொற்கொல்லன் தேவியின் சிலம்பைத் திருடி அக்குற்றத்திலிருந்து விடுபடுதற்குரிய வழிகளை நாடியிருந்தான். அவ்வமயம் கோவலன் அவனைக்கண்டு தன் சிலம்பை விலையிடுதற்கு உன்னால் இயலுமா என வினவப் பொற்கொல்லன் சிலம்பைக் காட்டுமாறு வேண்டுகின்றான். கோவலன் சிலம்பைக் காட்டியதும், அச் சிலம்பைக் கண்ட பொற்கொல்லன் அது தேவியின் சிலம்பை ஒத்துள்ளமையை உணர்ந்து தன் குற்றத்தைக் கோவலன் மீது சுமத்த எண்ணினான். எனவே, கோவலனிடம் இச்சிலம்பு மன்னனின் தேவிக்கே ஏற்புடையது ஆகும். எனவே, நான் அரண்மனைக்குச் சென்று வருவது வரையிலும் இங்கு என் சிறுகுடிலில் இருப்பாயாக எனக் கூறிச்செல்கிறான். மன்னனிடம் சென்று தேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் என் சிறுகுடிலில் உள்ளான் என்று கூற ஊடல் நீக்கும் மயங்கிய உள்ளத்துடன் சென்ற மன்னன் கொலை செய்ய ஆணையிடுகின்றான். அதன்படி காவலரை அழைத்துவந்து கோவலனைக் காட்டவே அவர்கள் இவன் கொலைப்படு மகனல்லன் எனக் கூறினர். அவர்கள் நம்பும்

வண்ணம் பொய்க்கதைகளைப் புனைந்துரைத்துக் கொலை செய்யத் துணை நின்றான். இக்காரணம் பற்றியே இளங்கோவடிகள் பொற்கொல்லனைக் கருந்தொழில் கொல்லன், பொய்த்தொழில் கொல்லன், பொய்வினைக் கொல்லன, கூற்றத் தூதன், குறுமகன் என்றெல்லாம் இகழ்ந்து உரைக்கின்றமையை நாம் உணரலாம்.

இரட்சணிய சரிதத்தில் இயேசு கொலை செய்யப்பெறுதற்கு முதல் காரணமாய் அமைபவர்கள் யூத மதத்தலைவர்களாக உள்ளனர். ஆசிரியர் மதத் தலைவர்களாகிய தீயோர் தம் வஞ்சக நெஞ்சுக்குள் பிசாசின் கொடிய மதி உட்புகுந்து தம்மைத் தஞ்சம் என அடைந்தவர்களின் பாவத்தை நீக்கும் மருந்தாகிய மன்னித்தேன் என்ற சொல்லைச் சொல்லவல்ல இயேசு பெருமானைக் கொலை செய்ய எண்ணியமையைக் காட்டுகின்றார்.

அடுத்து, கொலைக்குக் காரணமாக அமைந்தவன் யூதாசு இவன் இயேசுவைக் கொலை செய்வதற்குரிய தக்க சமயத்தை அறிவிப்பதாகக் கூறி முப்பது வெள்ளிக் காசுகளைப் பெறு கின்றான். இயேசு பாஸ்கா விருந்தை முடித்து எருசலேம் சென்று, தனியாகச் செபித்துவிட்டுச் சீடர்களுடன் புறப்படு கின்றார். இதை அறிந்து யூதாசு மதத்தலைவர்களிடம் தக்க சமயம் இதுவே எனக் கூறிக் காவலனை அழைத்து வருகின்றான். இயேசு இருக்குமிடத்தை அடைந்து இயேசுவை அடையாளம் காட்டுதற்காக முத்தமிடுகின்றான். காவலர்கள் இயேசுவை அடையாளம் கண்டு அழைத்துச் செல்கின்றனர்.

அடுத்து இயேசுவிடம் கொடுமையாக நடந்தவனாகக் காயப்பாசு காட்டப்பெறுகின்றான். இவனை ஆசிரியர் துட்டன் வாய்ப்பேச்சில் வல்லவன், துர்ஜனத்தலைவன் என இகழ்ந்துரைக்கின்றார். இவன் இயேசு பெருமானை விசாரித்துக் கொண்டிருக்கும்போதே அவர் கண்ணத்தில் அடித்து விடுகிறான், தேவ தூஷணங்கள் கூறியதாகக் குற்றம் சாட்டி இயேசுவிற்கு அளிக்க வேண்டிய தண்டனை யாது எனக் கேட்க யூதர்கள் இவன் உயிரை இப்போதே போக்க வேண்டும் எனக் கூறி கூக்குரலிடுகின்றனர். இவ்வாறு சிலம்பில் பொற்கொல்லன் கோவலன் இறப்பிற்குக் காரணமாக அமைய, இரட்சணிய சரிதத்தில் யூத மதத் தலைவர்களும், யூதர்களும், யூதாசும், காய்ப்பாசுவும் காரணமாக அமைகின்றனர். ஆயினும், இயேசு பெருமானைக் காட்டிக் கொடுத்த யூதாசு பின்னர் மனம்

வருந்தித் தான் பெற்ற முப்பது வெள்ளிக் காசுகளை எறிந்து விட்டுத் தூக்கில் நான்று இறப்பது சுட்டத்தக்கது ஆகும்,

தீர்ப்பளித்தோர்

சிலம்பில் பொற்கொல்லன் பேச்சைக் கேட்டு, பாண்டிய மன்னன் 'கொன்றச் சிலம்பு கொணர்க' என ஆணையிடுகின்றான். சிலம்பில் இம்மன்னன் செங்கோல் தவறாத சிறந்த மன்னனாகவே காட்டப் பெறுகின்றான். உண்மையை உணர்ந்ததும் யானோ அரசன், யானே கள்வன் எனக் கூறியும், மன்பதை காக்கும் தென்புலக்காவல் என்னோடு பிழைத்தது என மறுகியும் உயிரை விடுகின்றான். இத்தகைய சிறப்புடைய மன்னன்தான் ஊடல் தீர்க்கும் மயக்கத்தில் ஆராயாது, நிலை பிறழ்ந்து ஆணையிட்டு விட்டான். இதனால்தான் கண்ணகியே பின்னர் ஒருகால் தென்னவன் தீதிலன் என உணர்ந்ததுடன் தன்னை அவன் மகள் என்றும் குறிப்பிடுகின்றாள்.

இரட்சணிய சரிதத்தில் இயேசுவை அடித்து இழுத்துக் கொண்டு யூதர்கள் ஆளுநராகிய பொந்தியு பிலாத்துவிடம் அழைத்து வருகின்றனர். இயேசு பெருமானின் மீது பொய்க் குற்றசாட்டுகளைச் சுமத்தியும், பொய்யான சாட்சிகளை உருவாக்கியும் மரண தண்டனை வழங்க வேண்டுகின்றனர். ஆனால் பிலாத்து இயேசுவை நன்கு விசாரித்து யூதர்கள் கூறியவை பொய் என உணர்ந்து தண்டனை வழங்க மறுக்கிறான். அவருக்குத் தண்டனை வழங்க மனசாட்சி உறுத்தியதும், இவன் கலிலேயனாகையால் அந்நாட்டு அதிபதியாகிய ஏரோதுவிடம் சென்று கூற வேண்டுகிறான். ஏரோதும் நன்கு விசாரித்து இயேசு குற்றமற்றவர் என்பதை உணர்ந்து மீண்டும் பிலாத்து விடம் அனுப்பிவிடுகிறான். பின்னரும் இயேசுவை விசாரித்த பிலாத்து அவர் குற்றமற்றவரே என நன்கு உணர்ந்து தண்டனையை அளிக்க மறுக்கிறான். இறுதியில் யூதர்களின் வலியுறுத்தலினால் தீர்ப்பு வழங்குகிறான் இவன். பாண்டிய மன்னன் ஆராயாது, ஊடல் மயக்கத்தில் தீர்ப்பு வழங்க, பிலாத்துவோ நன்கு ஆராய்ந்து, இயேசு குற்றமற்றவர் என்பதை உணர்ந்து இறுதியில் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற பழமொழிக்கிணங்க மனசாட்சிக்கெதிராகத் தீர்ப்பு வழங்குகிறான். மேலும் யூதர்களே இயேசுவைக் கொல்வதால் வரும் பழி எங்களைத் தலைமுறையாகப் பற்றட்டும் என்கின்றனர். இக்காரணம் பற்றியே பிலாத்து உங்கள் சொல்லைக்கேட்டு இவனுக்குத் தண்டனை வழங்கினேன்; அந்தப்பழி என்னைச்

சார்ந்ததன்று என்று சொல்லிக் குடத்து நீரால் கைகளைக் கழுவுகின்றான்.

கொலை செய்ய வலியுறுத்தல்

பாண்டிய மன்னன் கொன்றச் சிலம்பு கொணர்க என ஆணையிட்டதும் பொற்கொல்லன் காவலனை அழைத்துக் கோவலன் இருப்பிடத்திற்கு வந்து அடையாளம் காட்டுகின்றான். உடன் வந்த காவலர்கள் இவன் கொலைப்படு மகனல்லன் எனக் கூறுகின்றனர். அதைக்கேட்ட பொற்கொல்லன் அவர்கள் நம்பும் வகையில் களவு நூல் கூறும் கள்வர் இலக்கணம், கள்வர் தன்மைகள், அவர்கள் களவாடும் முறைகள் என்பனவற்றை விவரித்துக் கூறி அவர்கள் நம்பும் வண்ணம் வலியுறுத்துகின்றான். உடன், அருகில் நின்ற இன்னொரு காவலனும் தான் அறிந்த ஒரு செய்தியை உண்மை என நம்பும் வண்ணம் கூறுகின்றான். அப்போது கல்லாக் களிமகன் ஒருவன் கோவலனை வாளால் வெட்டினான்.

இரட்சணிய சரிதத்தில் பிலாத்து இயேசுநாதர் குற்றமற்றவர் எனப் பலமுறை கூறியபோதிலும் யூதர்கள் அதனால்வரும் பாவங்களை ஏற்றுக் கொள்கிறோம் எனக் கூறிக் கொலைத் தண்டனை வழங்குமாறு வற்புறுத்துகின்றனர். சிலம்பில் தண்டனை வழங்கப் பெற்ற பின் கோவலனைக் கொலை செய்யப் பொற்கொல்லன் வலியுறுத்துகிறான். இரட்சணிய சரிதத்தில் கொலைத் தண்டனை வழங்கப் பிலாத்துவை யூதர்கள் வலியுறுத்துகின்றனர்.

கனா நிலையுரைத்தல்

சிலம்பில் பாண்டிய மன்னன் கோவலனைக் கொல்ல ஆணையிட்ட பின்னர் பாண்டிய மாதேவி தன் தோழியரிடம் தான் கண்ட கனவினைக் கூறித் தீங்கு நிகழப்போவதாக அஞ்சுகின்றாள். மன்னனின் குடையுடன் கோல் விழவும் விண்மீன்கள் உருகி விழவும், இரவில் வானவில் தோன்றவும், எண்திசைகளும் நடுங்கவும் கனவு கண்டதாகவும் இதனால் தீங்கு வரப் போவதாக உணர்வதாகவும் பாண்டிய மாதேவி கூறுகின்றாள்.

இரட்சணிய சரிதத்தில் பிலாத்து இயேசுபெருமானை விசாரித்துக் கொண்டிருக்கும்போது அவன் மனைவி தான் ஒரு தீய கனவு கண்டதாகவும் அதனால் தீமை வரும் என அஞ்சியதாகவும் கூறி, இயேசு பெருமானை விடுதலை செய்யுமாறு தன்

கணவனிடம் தூதன் ஒருவனை அனுப்புகின்றான். சிலம்பில் கோவலன் கொலையுண்டபின் கனவு நிகழ்ந்ததாகக் காட்டப் பெற, இரட்சணிய சரிதத்தில் தீர்ப்பு வழங்குமுன்பு கனவு நிகழ்ந்ததாகக் காட்டப் பெறுகின்றது.

கொலையுண்ணப்பெறுவோர் உணர்தல்

சிலம்பில் கோவலன் தன்னைப் புகழ்ந்து கூறிய மாடல மறையவனிடம் தான் ஒரு கனா கண்டதாகவும், அதனால் தீங்கு நிகழும் என அஞ்சுவதாகவும் கூறுகின்றான். மதுரை நகரில் தான் உடுத்த ஆடை பிறரால் கவரப்பட்டுப் பன்றியின் மேல் ஏறிச் செலுத்தவும், கண்ணகியுடன் பற்றறுத்தோர் பெறும் பேற்றை அடைந்ததாகவும், மணிமேகலையை மாதவி பௌத்தத் துறவியாக்கியதாகவும் கனவு கண்டதாகக் கோவலன் கூறுகிறான் சிலம்பு விற்கப் புறப்பட்ட சமயம் இமிலேறு எதிர் வந்ததை இழுக்கென அறியாமல் சென்றான் என ஆசிரியர் தம் கூற்றாகவும் கூறுகின்றார்.

இயேசு பெருமானும் தன் தெய்வத் திருவருளால் தான் சீடர்களில் ஒருவனாலேயே காட்டிக் கொடுக்கப் பெறுவதாகக் கூறுகின்றார். சீடர்கள் யாரெனக் கேட்க யூதாசிடம் அப்பத்தைக் கொடுத்து மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றார். எருசலேமில் ஜெபத்தை முடித்துவிட்டு வந்த இயேசு சீடர்களைப் பார்த்துக் கொடியோர் வருவர்: இங்கிருந்து சென்றுவிடுவோம் என்கின்றார். அவ்வமயம் யூதாசு காவலர்களுடன் வருகின்றான் கோவலனும், இயேசுபெருமானும் தமக்கு வரும் தீங்கை முன்னரே உணர்ந்தவர்களாகக் காட்டப்பெறுகின்றனர். ஆனால் கோவலனுக்கு வரும் தீங்கு என்னவென்று தெரியாத நிலையில், இயேசு பெருமானுக்கோ தாம் காட்டிக் கொடுக்கப்பெறுவோம் என அறிந்தநிலை காண்டற்குரியது.

கொலையுண்ணப் பெற்றமைக்குக் காரணம்

கோவலன் சிலம்பைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்படல், இயேசு பிரான் மக்களிடையே அரசுக்கு எதிராக உபதேசித்தல் என்ற காரணங்கள் வெளிப்படையாகக் காட்டப்பெறினும் அடிப்படைக்காரணம் உள்ளமையும் இவ்விரு நூல்களிலும் காட்டப்பெறுகின்றது. கோவலன் கொலையுண்ணப் பெற்றதற்கு ஊழ்வினையே காரணம் என இளங்கோவடிகள் காட்டுகின்றார். இதனால்தான் இளங்கோவடிகள் 'ஊழ்வினை சென்று

முதிர்பட்டிருந்த கோவலன், கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென், என்ற சொற்றொடர்களை ஆளுகின்றார்.

இரட்சணிய சரிதத்தில் பாவத்தின் கூலி பயங்கரமான நித்திய மரணம் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் கடவுள் கொடுத்த பத்துக் கட்டளைகளை விட்டுவிட்டது என்ற தெய்வ கோபத்தின் மிகுதியால் கூடிய கடுமையான திரண்ட சாபங்கள் எம்பெருமான் தலையில் விழுந்தன எனக் கூறப்பெறுகின்றது.

உயிர்த்தெழுதல்

கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியைக் கண்ணகி அறிந்து ஆற்றொணாத் துயரம் அடைந்தாள். காய் கதிர்ச் செல்வனைப் பார்த்துத் தன் கணவன் கள்வனா என வினவ, அவன் கள்வனல்லன் எனப் பதில் கூறினான், பொங்கி எழுந்த கண்ணகி தன் கணவனைக் கண்டு அவன் வாயிலிருந்து வருகின்ற சொற்களைக் கேட்பேன் எனச் சூளுரைத்துக் கணவன் வெட்டுண்டு கிடந்த இடத்தை அடைந்தாள். பலவாறு ஏங்கிப் புலம்பினாள் கணவனின் மார்பைத் தழுவி அழுதாள். அப்போது கோவலன் உயிர் பெற்று எழுந்து கண்ணகியின் கண்ணீரைத் துடைத்து 'இருந்தைக்க' எனக்கூறி மீண்டும் விழுந்தான் என்று இளங்கோவடிகளால் காட்டப்பெறுகின்றது.

இயேசுபெருமான் சிலுவையிலறையப்பட்டதும் சீடர்களும் மக்களும் பலவாறு துன்புற்றுப் புலம்பினர். இயேசுபிரான் சிலுவையிலறையப்பட்டு அடக்கம் செய்யப் பெற்ற மூன்றாம்நாள் அனைவரின் துன்பம் நீங்கவும், உள்ளம் மகிழவும் உயிர்த்தெழுந்து, தன் சீடர்களுக்கு அறிவுரையும் ஆசியும் வழங்கியதாக இரட்சணிய சரிதத்தில் கூறப்பெறுகின்றது.

முற்கூறினவற்றால் சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுண்ணப் பெற்ற செய்திகளை விளக்கும் பகுதிகளும், இரட்சணிய சரிதத்தில் இயேசுபிரான் சிலுவையிலறையப்பட்ட செய்திகளை விளக்கும் பகுதிகளும் நிகழ்ச்சிப் போக்கில் பெரும்பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் அமைகின்றமை புலனாகின்றது. இரு நூல்களிலும் தவறு செய்யாதவர்கள் மேல் பிறர் வலியுறுத்தலினால் முறை தவறித் தீர்ப்பு வழங்கப்பட்டமையும் தெரிகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. வேங்கடசாமி நாட்டார் ந. மு. (உ. ஆ) சிலப்பதிகாரம் (1968)
2. சி. வி. சவரிமுத்து, (உ. ஆ) இரட்சணிய சரிதம் (1981)

டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நாமம் போடுதல், கோவிந்தா நாமம் என்பன வைணவச் சார்பான சொற்கள். இவை இக்காலத்தில் ஏமாற்றுதல் என்னும் பொருளில் பயன்பட்டு வருகின்றன மொட்டை அடித்தல் என்பது இறைவனுக்குத் தலைமயிரை நேர்த்திக்கடனாக அளிப்பது என்ற பொருளிலிருந்து பிறரை ஏமாற்றுதல் என்னும் பொருளைப் பெற்றுள்ளது, பண்டாரம் என்னும் சொல் ஆலயப் பொருட்களைப் பாதுகாப்பவர் என்னும் பொருளிலிருந்து பிச்சையெடுத்துத் திரிபவர் என்னும் பொருளுக்கு மாற்றம் பெற்றுள்ளது.

பரதேசி என்பது பிறநாட்டைச் சார்ந்தவன் என்பதனைக் குறிக்கப் பயன்பட்டது. காலப்போக்கில் பிச்சையெடுத்துக் கொள்கையற்றுத் திரியும் பிச்சைக்காரன் என்ற பொருளில், கையாளப்படுகின்றது. இதனைப் போன்றே காதுகுத்துதல், காதில் பூ வைத்தல், பிரகஸ்பதி, காக்கா பிடித்தல், குடை பிடித்தல், சோப்புப் போடுதல், அல்பளிப்பு, சிறுக்கி, காந்திக் கணக்கு, சூழ்ச்சி போன்றவை தம் இயல்பான பொருளை இழந்து இழிபொருளை உணர்த்தப் பயன்படலாயின.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற அனைத்துச் சொற்களின் உயர் பொருள் சுட்டிய நிலையினையும் இழிபொருள் சுட்டும் நிலையினையும் ஆராயின் இவ்விரு நிலைகளுக்கும் இடையே நடைபெற்ற இவற்றின் பொருண்மை நிலை வரலாறு தெற்றென விளங்கும். இழிபொருள் பெற்ற சொற்கள் குறிக்கும் மனிதர்கள் அல்லது இவை உணர்த்தும் இயல்புடைய மனிதர்களின் பண்பில் காணப்பெற்ற மாற்றமே இழிபொருள் பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. இதற்கு அடிப்படையாக அமைவது சமூக நிலை மாற்றமே.

பெரும்பாலும் சமயம், அரசியல் சார்பான சொற்களே காலப்போக்கில் இழிபொருளைப் பெற்றுள்ளன. இந்திய சமூகத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த இவ்விரண்டும் தம் நிலையிலிருந்து மாற்றம் பெற்று, போலித்தனம் மிகுந்து காணப்பட்டமையால் இவை தொடர்பான சொற்கள் இத்தகு பொருள் மாற்றம் அடைந்துள்ளன.

இம்மாற்றங்கள் அனைத்தும் இருவேறு சொற்களில் பொருள்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை காரணமாக அமைந்தவை

எனலாம். இப்பொருள் மாற்றத்தினைக் கீழ்க்காணும் வரை படத்தின் வாயிலாக விளக்கலாம்.



ஈண்டுத் தெய்வப்பெண்டிர்க்கும், பொருட்பெண்டிர்க்கு மிடையே பண்பு நிலையில் காணப்பெறும் ஒற்றுமை காரணமாக, தேவதாசி என்னும் சொல் விலைமாது என்னும் சொல்லின் பொருளைக் குறிக்கப் பயன்படலாயிற்று.

உயர்ந்த பொருளிலிருந்து இழிபொருளைப் பெற்ற சொற்கள் பெரும்பாலும் ஆகுபெயர் (Metonymy) நிலையில்தான் அமைந்துள்ளன. இருவேறு சொற்களுக்கிடையே காணப்பெறும் பொருளின் ஒற்றுமையே (Similarity between senses) இத்தகைய மாற்றத்திற்குக் (Name trarsfer) காரணமாக அமைகின்றது.

பொருள் தொடர்பில்லா இரு சொற்களின் பொருள் ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைவது சமுதாய நிலையில் ஏற்படும் மாற்றங்களே.

உடனுதவிய நூற்கள்

Athithan. A., — 1979 The Treatment of Semantics in Tolkappiyam, Inter - Collegiate Seminar. Madurai Kamaraj University. Madurai.

Chase. S., — 1955 The Power of Words, London.

Ullmann. S., — 1959 The Principles of Semantics Oxford.

Ullmann. S., — 1977 Semantics-An Introduction to the Science of Meaning - Oxford.

—∞◊∞—

ஆவணக்காப்பக சென்னை-600 008. 127043

நூல் அறிமுகம்

டாக்டர். நா. ஆறுமுகம்,
தமிழ் இணைப் பேராசிரியர்,
புதுவைப் பல்கலைக் கழகம், புதுவை.

ஆர்னால்டின் ஓவியங்கள் வரையப்பட்ட பின் ஐரோப்பாவின் மலைக்காட்சிகள் மேலும் அழகு பெற்றுத் திகழுகின்றன. ஆழமும் விவேகமும் வேகமும் கொண்ட இந்த நூலைப் படித்தபின் இந்தியாவின் புரட்சி வரலாறு மேலும் தெளிவுபெற்றுத் தெரிகிறது.

ஒரு ரசிகனின் மனோபாவத்தோடும், ஒரு பக்தனின் நம்பிக்கையோடும் புனையப்பட்ட வரலாறுகள் நம் முன்னே குவிந்து கொண்டிருக்கும் நேரத்தில் இதோ ஓர் ஆராய்ச்சியாளனின் சிரத்தையோடும் நேர்மையோடும் எழுதப்பட்ட வரலாற்று நூல்

இது பகத்சிங்கின் வரலாறு மாத்திரமல்ல, இந்தியப் புரட்சியின் வரலாறும், புரட்சிக்கும் மக்களுக்கும் எதிரான துரோகத்தின் வரலாறுமாகும்.

“உயரே உயரேயிருந்து பாய்ந்து வந்து மாடமாளிகைகளை எரித்து, குடிசைகளை ஒளிமயமாக்கும் எரி நட்சத்திரங்களைப் போன்ற சொற்கள்! என் உள்ளம், உடல், உதிரம் எங்கும் இசை, புயல், வாள், தீப்பிழம்பு !!” என்று இந்நூலின் அருமையும் ஆற்றலும் குறித்துக் கவிஞர் இளவேனில் தம் முன்னுரையில் கூறுகிறார்!

“சுதந்திரம் என்பது வெறும் சாதனம்தான்; அதுவே நம் இலட்சியமாகிவிட முடியாது.” வர்க்க பேதமற்ற சமூக அமைப்பை உருவாக்குவதற்கு முதலில் அரசியல் சுதந்திரம் வேண்டும். ஆயுதப் புரட்சியால்தான் அந்தச் சுதந்திரத்தைப் பெறமுடியும் என்று அறிவுறுத்திய பகத்சிங் இந்திய அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்களை இந்தப் புத்தகம் எடைபோடுகிறது.

உண்மையான வரலாற்றை மறைத்துவிட்டு, ஏதோ காந்தித் தாத்தா கடைக்குப்போய் மிட்டாய் வாங்கி வந்த மாதிரி, சுதந்திரம் பெற்ற கதையை, நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்! ‘கத்தியின்றி ரத்தமின்றி நம் சுதந்திரம் பெற்றோம்’ என்பது பொய். எனக்குத் தெரிந்த பொய்களிலேயே

இதுதான் மிகப்பெரிய பொய் என்று கூறும் இந்த நூலின் ஆசிரியர் இந்த நூலை எழுதி முடித்த நிமிடத்தில் தன் நெஞ்சின் எண்ணத்தைக் காட்டுகிறார். "இனிமேல் நான் எப்போது செத்தாலும், ஒரே ஒரு உருப்படியான காரியத்தையாவது செய்து முடித்த திருப்தி இருக்கும்"

'காந்தியடிகளுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப் போர்' என்னும் தம் நூலில் (பக். 157-58) திரு ம. பொ. சி. அவர்கள் "இந்தியாவில் சுமார் 35 ஆண்டு காலம் நிலைத்திருந்த பயங்கர இயக்கத்தின் வரலாறு, பல பக்கங்கள் கொண்ட பெரு நூலாக எழுதுமளவுக்கு விரிவானதாகும். பயங்கரக் கொலைகளையும் கொள்ளைகளையுமே சாதனைகளாகக் கொண்ட அந்த இயக்கத்தின் வரலாறு முழுவதையுமே இன்றைத் தலைமுறையினரோ வருங்காலத் தலைமுறையினரோ அறிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லையாதலால் வரலாற்றாசிரியர்களால் அது புறக்கணிக்கப்பட்டுவிட்டது" என்கிறார்.

1897 இல் சாபேகர் காலம் தொடங்கி, 1932 சிட்டகாங்கில் நடைபெற்ற ஆயுதப் புரட்சிவரையில் உள்ள இடைப்பட்ட 35 ஆண்டுகளையே ம. பொ. சி குறித்துள்ளார். பகத்சிங்கின் காலமும் இதில் அடங்கும்.

பகத்சிங்கின் வாழ்க்கைக் குறிப்பு, பகத்சிங்கும் புரட்சிகர இயக்கங்களும் பகத்சிங்கும் காங்கிரஸ் கட்சியும், பகத்சிங்கும் பொதுவுடமை இயக்கமும், பகத்சிங்கும் தமிழகமும் என்னும் ஐந்து இயல்களில் இந்நூல் முடிகின்றது. ஆறாவது இயலாகப் பின்னிணைப்புகளும், ஏழாவது இயலாகத் துணை நூற்பட்டியலும் இடம் பெற்றுள்ளன.

முதல் இயலில் பகத்சிங்கின் வாழ்க்கைச் சுருக்கம் தரப்பட்டுள்ளது. 1907 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் லாகூர் நகருக்கு அருகில் லாயல்பூர் மாவட்டத்தில் 'பாங்கா' என்னும் கிராமத்தில் பகத்சிங் பிறந்தார்.

பிறந்த வீடும், வளர்ந்த மண்ணும், வாழ்ந்த காலமும் அவரது எதிர் காலத் தீவிரவாதப் போக்கிற்குத் தீனிபோடுவதாகவே அமைந்தன. பகத்சிங்கின் பாட்டனார் அர்ஜீன் சிங், ஒரு விடுதலைப் போராட்ட வீரர். தந்தை கிஷன் சிங்கும் அவருடைய சகோதரர்கள் அஜீத் சிங், சுவரன் சிங் ஆகியோரும் பகத் சிங் பிறந்தபோதுகூட வீட்டில் இல்லை. விடுதலைப் போரில் ஈடுபட்டதால், மூவரும் அப்போது பர்மாவில் மாண்டலே ஜெயிலில்

இருந்தார்கள். பகத்சிங் பிறந்த சில தினங்களில் கிஷன் சிங் ஜாமினில் விடப்பட்டு, வீட்டிற்கு வந்து தன் மகனைப் பார்த்தார். அஜீத் சிங்கோ பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதிராயுடன் அரசியலில் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். அஜீத்சிங் விடுதலையடைந்த பின்பும் கூட சொந்த ஊருக்குத் திரும்பவில்லை. விடுதலையுணர்வை வெளிநாடுகளிலும், வலுவடையச் செய்யும் நோக்கத்தோடு மாண்டலேயிலிருந்து நேராகச் ஜெர்மனிக்குச் சென்றுவிட்டார். இன்னொரு சகோதரர் சுவரன்சிங், பகத்சிங் பிறந்த அதே 1907 ஆம் ஆண்டு சிறையிலேயே இறந்துவிட்டார். இந்தச் சூழலில் சின்ன வயதிலேயே வெள்ளையரை விரட்டவேண்டும் என்னும் உணர்வு பகத் சிங்கின் மனதில் ஆழமாகப் பதிந்தது.

பகத்சிங்கின் தந்தை கிஷன்சிங் சமயப் பற்று உடையவர் தான். ஆனாலும் அதைக் காட்டிலும் மிகுதியான நாட்டுப்பற்று உடையவர் ஆகவே, அவர் அந்தக் கிராகத்திலேயே (நவாகோட்) இருந்த சீக்கியக் குழந்தைகளுக்கே உரிய "கால்ஸா ஹைஸ்கூல்" ஆங்கிலேயர்களுக்கு அடிபணிந்து கிடந்ததால், அதில் தன் மகனைச் சேர்க்காமல் லாகூரில் இருந்த "தயானந்தா வைதிக் ஸ்கூலில்" சேர்த்தார்.

இந்தப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதுதான் லாகூரின் முதல் சதி வழக்கில் தூக்கில் ஏற்றப்பட்ட கர்த்தார் சிங் சாராபா பற்றி அறிந்தார். உயர்நீதி மன்றத்தில் ஏன் நீங்கள் அப்பீல் செய்யக்கூடாது" என்று கேட்கப்பட்ட போது, கர்த்தார் சிங், "எதற்காக நான் அப்பீல் செய்ய வேண்டும்? எனக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட உயிர்கள் இருக்குமானால், அவைகளையும் கூட என் நாட்டிற்குத் தியாகம் செய்யும் பெருமையே என் விருப்பம்" என்று பதில் அளித்தார். இவர்தான் பகத்சிங்கின் மானசீக வழிகாட்டி!

பகத்சிங் 12 வயதுச் சிறுவனாயிருந்தபோது 13. 4. 1919இல் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக் படுகொலைகள் அவரை எவ்வாறு பாதித்தது என்பதை அவருடைய நெருங்கிய நண்பனும், ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கியே தீரவேண்டுமென்ற வெறியோடு இங்கிலாந்து சென்று, 21 ஆண்டுகளுக்குப் பிறகு, 1940 ஆம் ஆண்டில், தான் நினைத்ததை முடித்துவிட்டு சாவைத் தழுவியவனுமாகிய இணையில்லாப் பெருவீரன் உத்தம் சிங் கூறுகிறான்:

"இந்தப் படுகொலைச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், 12 வயதினனான பகத்சிங் பள்ளிக்குச் செல்லாமல் புகைவண்டியில் ஏறி, அமிர்தசரஸ் சென்று, அந்த இடத்தைப் பார்த்தான். அந்த இடத்திலேயே உயிரற்றவனைப் போல் பல நிமிடங்கள் நின்றுகொண்டிருந்த அவன், அந்த மண்ணை எடுத்துத் தன் நெற்றியில் பூசிக்கொண்டதோடு, கொஞ்சம் மண்ணை, ஒரு சின்னக் கண்ணாடிப் புட்டியில் போட்டுக்கொண்டான். அவன் வீடு திரும்பியதும், அவனுக்காக வைத்திருந்த உணவையும் மாம்பழங்களையும் உண்ணுமாறு அவன் சகோதரி கூறினாள். எல்லாவற்றையும் விட, அவனுக்கு மிகப்பிடித்தமான மாம்பழங்களைக்கூட உண்ணாமல், அந்த இரவு அவன் உண்ணாவிரதமிருந்தான். உணவு உண்ணுமாறு சொன்னபோது, தன் சகோதரியைப் பக்கத்தில் அழைத்துச் சென்று, ரத்தம் கலந்த அந்தப் புனித மண்ணைக் காட்டிவிட்டு உண்ணாமலேயே இருந்துவிட்டான். அவன் குடும்பத்தினர் கூற்றுப்படி, அவன் தினந்தோறும் புத்தம்புது மலர்களை அந்த மண்ணில் வைத்து, அதன் மூலம் எழுச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

இவ்வாறு அரசியலில் ஆர்வம் ஏற்பட்ட பின்பு பகத்சிங்கிற்குப் படிப்பில் நாட்டம் செல்லவில்லை, மெட்ரிகுலேஷன் தேர்விற்குப் பிறகு தேசியக் கல்லூரியில் மாணவரானார். இங்குதான் சுகதேவ் (லால்பூர்), பகவதி சரண் வோரா (ஆக்ரா), யஷ்பால் (தர்மஷாலா) ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. இவர்களும் இறுதிவரை பகத்சிங்கைப் போலவே புரட்சிகரக் கொள்கைகளிலும் செயல்களிலும் உறுதியாக இருந்தனர். சுகதேவ் பகத்சிங்கோடு ஒன்றாகவே தூக்குமேடை ஏறியவர்.

கல்லூரியில் முதலாண்டுத் தேர்வில் வெற்றிபெற்ற பகத்சிங்கை அரசியல் முழுமையாக ஈர்த்துக்கொண்டது. வீட்டில் செய்த திருமண முயற்சியை வெறுத்துவிட்டு 1923 இல் வெளியேறினார். முழுநேர அரசியல் தொண்டராக ஆவதற்கு முன்னால் காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டார். பிறகு காந்தியாரின் அகிம்சைக் கொள்கையில் நம்பிக்கையிழந்தவராய், பஞ்சாபில் நிறுவப்பட்ட, வன்முறையில் நம்பிக்கைகொண்ட 'பப்பர் அகாலி' என்னும் ரகசியச் சங்கத்தின் உறுப்பினராகவும் சிலகாலம் இருந்திருக்கிறார்.

பிறகுதான் லாகூரில் நண்பர்களுடன் சேர்ந்து "நவஜவான் பாரத் சபை" என்னும் அமைப்பை உருவாக்கினார். சந்திரசேகர ஆசாத் போன்ற பல புரட்சி தோழர்களின் நட்புக் கிடைத்தது.

1926 அக்டோபரில் ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற தசரா விழாவில் யாரோ ஒருவன் வீசிய வெடிகுண்டிற்காகப் பகத்சிங் கைது செய்யப்பட்டார். சில வாரங்களுக்குப் பின் ரூ. 60 ஆயிரம் ஜாமினில் வெளி வந்தார்; பிறகு நீதிமன்றத்தால் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். இதுதான், அவருக்கு முதல் சிறை அனுபவம்!

1928 டிசம்பரில் சிவவர்மா, ஜெயதேவ், விஜய், ஜதீந்திரநாத் ஆகியோருடன் சேர்ந்து 'இந்திய சமதர்மக் குடியரசு ராணுவம்' என்னும் அமைப்பை உருவாக்கினார்.

30—10—1928 சைமன் கமிஷனை எதிர்த்து நடைபெற்ற ஊர்வலத்தில் லாலா லஜபதிராய், மதன்மோகன் மாளவியா ஆகியோர் ஸ்காட், சாண்டர்ஸ் ஆகிய போலிஸ் அதிகாரிகளால் கடுமையாக தாக்கப்பட்டு லாலாலஜபதிராய் 17—11—28 இல் காலமானார். HSRA எடுத்த முடிவுப்படி 17—12—28 இல் சாண்டர்ஸ் சுடப்பட்டார். பகத்சிங்கும் தோழர்களும் தப்பிவிட்டனர். அப்போதிலிருந்துதான் பகத்சிங்கின் தலைமறைவு வாழ்க்கை தொடங்கியது. நான்கு மாதங்களுக்குப் பின் 8—4—29 இல் சட்டசபையில் குண்டுவீசியதற்காகக் கைது செய்யப்பட்டார். வரலாற்றுப் புகழ்மிக்க இந்த இரண்டாம் லாகூர் சதி வழக்கு 10-7—29 இல் லாகூரில் தொடங்கியது. 7—10—30 இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. 23-3—31 இல் இரவு 7.35 மணிக்கு மூவரும் தூக்கிலிடப்பட்டனர்.

இயல் 2 : ஜாலியன்வாலாபாக்கில் ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்த ஆங்கில அதிகாரி ஜெனரல் டயரை இந்தியமக்களில் பெரும்பாலோர் அறிவர். ஆனால், அந்தக் கொடுங்கோலனைப் பழிவாங்குவதற்காக இங்கிலாந்துக்கே சென்று 21 ஆண்டுகள் தன் வாழ்க்கையின் சுகங்களையெல்லாம் துறந்து, கொண்ட குறிக்கோள் ஒன்றையே மனதில் கொண்டு, தலைமறைவாய் வாழ்ந்து பின் 1940 ஆம் ஆண்டு நினைத்ததை முடித்தானே உத்தம்சிங் - அவனை நம் மக்கள் பலருக்குத் தெரியாது. இப்படி கொடுங்கோலர்களை அறிந்தவராகவும் தியாகிகளை மறந்தவராகவும் வாழும் அவமானம் நம் தலைமுறைக்கு நேர்ந்திருக்கிறது.

"அகிம்சையின் மூலமாக மட்டுமே சுதந்திரம் பெற்றோம் என்னும் பொய்யான பிரச்சாரமே மேற்காணும் இழிநிலைக்குக் காரணம் என்பதை இனியேனும் வரலாற்றாசிரியர்கள் மக்களுக்கு

உணர்த்த வேண்டும்'' என்று தொடங்கும் இரண்டாவது இயலில் பகத்சிங்கிற்கு முந்திய புரட்சிகர இயக்கங்கள் அல்லது தனி நபர்களின் சுருக்கமான வரலாறுகளைத் தருகின்றார்.

சிப்பாய்ப் புரட்சிக்குப் பின்பும் காங்கிரஸ் கட்சியின் தோற்றத்திற்கு முன்பும் (1879) ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட மகாராஷ்டிர வீரன் வாசுதேவ் பல்வந்த் பட்கே, அவருக்குப் பிறகு பஞ்சாபைச் சேர்ந்த ஆயுதப் போருக்கான ஆயுத்தங்களில் ஈடுபட்ட சத்குரு ராம்சிங், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த மகரிஷி அன்னாசாகிப் பட்வர்த்தன், விஷ்ணுசாஸ்திரி சிப்லங்கர், சென்ற நூற்றாண்டின் கடைசித் தீக்கொழுந்துகளான புனாவைச் சேர்ந்த சாபேகர் சகோதரர்கள், இந்நூற்றாண்டின் தீப்பந்தம் எனப் போற்றப்பட்ட வங்காளத்தைச் சேர்ந்த 'அனுஷிலான் சமிதி' (''இந்தியாவின் முழு சுதந்திரத்திற்குக் குறைவாக எதையும் வேண்டுவதில்லை'' என்னும் முடிவெடுத்த முதல் குழு), லண்டன் பல்கலைக்கழகப் பொறியியல் மாணவனாயிருந்து லார்டு கர்ஸான் வில்லியை அவனுடைய வீட்டிலேயே அவனுடன் பேசிக்கொண்டிருந்தபோதே சுட்டுக்கொன்ற மதன்லால் திங்கரா, 21. 12. 1909 இல் நாசிக் நகரத்து நாடக மேடையில் அடக்குமுறைக்குப் பெயர்பெற்ற ஜாக்சனைச் சுட்டுக் கொன்ற 18 வயதே நிரம்பிய இளைஞன் ஆனந்த லட்சுமண் கான் காரே, ஆனந்த கான் காரேவுக்கு ஆயுதம் அனுப்பிய வழக்கில் 50 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற வி. டி. சாவர்க்கார், 17—6—1911 இல் ஆங்கில அதிகாரி ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற வாஞ்சிநாதன், 23—12—1912 இல் டெல்லிமாநகரில் ஊர்வலம் வந்த இந்திய வைஸ்ராய் லார்டு ஹார்டிஞ் மீது சாந்தினி சௌக் பகுதியில் குண்டு வீசிய ராஷ்பிகாரி கோஷ், கனடா நாட்டு நீதிமன்றத்தில் 1915 இல் ஹாப்சுன்சனைப் பட்டப்பகலில் சுட்டுத்தள்ளின பாஞ்சால இளஞ்சிங்கம் மேவாசிங் ஆகியோர் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

சிறையில் நேர்ந்த கொடுமைகளை எதிர்த்து 63 நாள்கள் உண்ணாவிரதம் இருந்த மாவீரன் ஜதீந்திரநாத் தாஸ் 13—9—29 இல் உயிர்நீத்தார். நாடெங்கிலும் பகத்சிங்கை விடுதலைசெய்யக் கோரி கிளர்ச்சிகள் நடைபெற்றன. அரசுக்குக் கருணை மனு அனுப்பிய தன் தந்தைக்குப் பகத்சிங் விடுத்த கடுமையான பதிலில் எழுதுகிறார்.

''நான் என் முதுகில் குத்தப்பட்டுள்ளதாக உணர்கிறேன். இதே காரியத்தை வேறு யாரேனும் செய்திருந்தால் அது

துரோகத்திற்குச் சற்றும் குறைவானதன்று என்றே நான் கருதியிருப்பேன்''.

அதைப் போலவே அரசுக்குக் கொடுத்த இன்னொரு மனுவும் அவருடைய தெளிவான சிந்தனையைக் காட்டுகிறது.

''நாங்கள் சாதாரணக் குற்றவாளிகள் இல்லை. ஒரு தேசத்தின் விடுதலைக்காக போர் தொடுத்த போராளிகள். ஆகவே, எங்களுக்கு எங்கள் நீதிமன்றம் வழங்கியிருக்கும் மரண தண்டனையையும் முறைப்படி வழங்குங்கள். ஆம்! குற்றவாளிகளைக் கொல்வதுபோல் தூக்கில் போடாமல், எதிரணிப்போர் வீரர்களை வீழ்த்துவதுபோல் ராணுவத்தினரை அழைத்துவந்து துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துங்கள்'' என்று எழுதி மூவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

3 வது இயல் பகத்சிங்கும் காங்கிரஸ் கட்சியும்: பகத்சிங் பிறந்த காலகட்டத்தில் கோபாலகிருஷ்ண கோகலே தலைமையில் மிதவாதிகளும், பாலகங்காதர திலகரின் தலைமையில் தீவிரவாதிகளுமாய் காங்கிரஸ் கட்சி பிளவுபட்டுக் கிடந்தது.

பகத்சிங்கிற்கு இரண்டு வயது இருக்கும்போது, காங்கிரசின், தீவிரவாதத்தின் முப்பெரும் தலைவர்களான திலகர், வ. உ. சி, அரவிந்தர் ஆகியோர் ஒரே நாளில் கைது செய்யப்பட்டு அதிகபட்சத் தண்டனைகள் வழங்கப்பட்டது; வ. உ. சிக்கு இரண்டு ஆயுள் தண்டனைகள் - அன்றையச் சட்டப்படி 40 ஆண்டுகள் - வழங்கப்பட்டது. பர்மாவின் மாண்டலே ஜெயிலில் திலகர்! ஜெர்மன் நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார் லாலா லஜபதிராய்! அந்தமான் சிறையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள். இந்தச் சூழ்நிலையில் காங்கிரஸ் தொண்டர்கள் மிதவாதத்தைக் கைவிட்டு தீவிரவாதி திலகரின் அணியில் சேரத் தொடங்கினர். ஆனால், கோகலேயின் சீடர் என்று தன்னைக் கூறிக்கொண்ட காந்தியடிகள் 1915 இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பி காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவராக ஆன பிறகு, கட்சி முழுக்க முழுக்க வேறு திசையில் பயணப்பட்டது. காந்தியாரின் இடைவிடாத பிரச்சாரத்தால், வெள்ளையரை அகிம்சைப் போரின் மூலமே வெளியேற்றிவிட முடியும் என மக்கள் நம்பத் தொடங்கினர். கொந்தளித்து எழுந்துகொண்டிருந்த புரட்சி இயக்கங்களும் தனிநபர் பயங்கரவாதங்களும் தளர்ந்தன. காந்தியாரின் செல்வாக்கு ஆங்கிலேயர்களை அடக்குவதைக் காட்டிலும் புரட்சியாளர்களின் வீரியத்தைக் குறைக்கவே மிகுதியும் பயன்பட்டது. புரட்சிகர

இளைஞர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக அறிக்கை விடுவதிலும், காங்கிரஸ் மாநாடுகளில் அவர்களைக் கண்டிக்கும் தீர்மானங்களை முன்மொழிவதிலும் காந்தியார் மிகக் கவனமாக இருந்தார். அதனால் தீவிரவாத இளைஞர்கள் இனிமேல் காங்கிரஸ் இயக்கத்தை நம்பிப் பயனில்லை என்றும் தனி நபர் பயங்கரவாதத்தை விட்டொழித்து அனைவரும் ஓரியக்கமாகச் சேர்ந்து செயல்படவேண்டும் என்னும் முடிவுக்கு வந்தனர்.

புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சியே 1930 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கவேண்டிய நிர்ப்பந்தத்தைக் காங்கிரசுக்கு உண்டாக்கியது. ஆனால், 1932 இல் காந்தி-இர்வின் சமரச உடன்பாட்டிற்கு பிறகு போராட்டம் நிறுத்தப்பட்டது.

லாலா லஜபதிராயின் மரணத்திற்குக் காரணமான போலீஸ் அதிகாரி சாண்டரீஸ் சுடப்பட்டதும், சட்டசபையில் வெடிகுண்டு வீசப்பட்டதும் காங்கிரஸ் தலைவர்களால் கடுமையாக விமர்சிக்கப் பட்டன. ஜே. என். தாசின் சாவுக்கு காரணமாயிருந்த இர்வின் பிரபுவைக் கொல்லத் திட்டமிடப்பட்டது. 1929 டிசம்பர் 23 இல் வைக்கப்பட்ட வெடிகுண்டு விபத்தில் இர்வின் உயிர்தப்பிவிட்டார்.

அந்த நேரத்தில் பகத்சிங், காந்தியாரின் புகழ் அளவுக்கு இணையாகப் புகழ்பெற்றிருந்தார் என்று குறிப்பிடுகின்றார் பட்டாபி சீதாராமையா. 'பகத்சிங்கிற்கு ஏதேனும் ஏற்பட்டால் நாடு முழுவதும் கலவரம் உருவாகக்கூடும்'' என்று அரசு பயந்தது.

ஜவகர்லால் நேரு, இர்வின், இன்றைய அரசியல் தலைவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் சிலர் ஆகியோர் காந்தியார். பகத்சிங்கின் தண்டனையைக் குறைக்கப் பாடுபட்டார் என்றே கூறுகின்றனர். காந்தியார் அரசாங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்திலும் இப்படி ஒரு வேண்டுகோள் இல்லவே இல்லை. காந்தியார் தண்டனையைக் குறைக்கச் சொன்னாரா என்பது ஒருபுறமிருக்க, தண்டனையை எப்போது நிறைவேற்றலாம் என்று அரசுக்கு யோசனை சொல்லியிருக்கிற விஷயம் அரசாங்கக் கோப்பில் உள்ளது.

பகத்சிங் தூக்கிலிடப்பட்ட (23—3—31) நான்காவது நாளில் 28—3—31 இல் கராச்சியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிற்கு வல்லபாய்படேலும் காந்தியாரும் வந்தபோது இளைஞர்கள் கறுப்புக்கொடி காட்டினர். 'பகத்சிங்கைக் கொன்றவரே

திரும்பிப் போ' என்று முழக்கமிட்டனர். கராச்சி மாநாட்டில் புரட்சியாளர்களின் ஒவ்வொரு செயலையும் கண்டித்துத் தீர்மானங்களை முன் கொண்டுவந்தார். ஆனால், சில மாதங் களுக்குப் பிறகு பகத்சிங் முதலானோருக்குச் சிலை வைப்பதில் தனக்குச் சம்மதமில்லை என்றும் அவர்களுக்குச் சிலை வைப்பது மக்களிடம் வன்முறையில் நம்பிக்கையை வளர்க்கும் என்றும் மறுத்துவிடுகிறார்.

4 வது இயல் பகத்சிங்கும் பொதுவுடமை இயக்கமும்; சோவியத் ரஷ்யாவில் லெனின் தலைமையில் நடைபெற்ற 1917 ஆண்டு அக்டோபர் புரட்சிக்குப் பிறகு இந்தியாவில் சிறிது சிறிதாக பொதுவுடமைக் கருத்துக்கள் வலுப்பெற்று வரலாயின. காங்கிரஸ் கட்சிக்குள்ளும் இடதுசாரி எண்ணம் கொண்ட தலைவர்களின் எண்ணிக்கை கூட ஆரம்பித்தது. பொது வுடைமையின் மீது ஆர்வம் கொண்ட கருத்து முதல்வாதிகளுக்கு இடையில், பொருள் முதல்வாதியாகவும் அறவே கடவுள் மத நம்பிக்கையற்றவராகவும் பகத்சிங் தோன்றினார்,

பக்குனின், லெனின், மார்க்ஸ், ட்ராட்ஸ்கி போன்றவர்களின் நூல்களைக் கற்று அலசி ஆராய்ந்தேன்... ''1926 ஆம் ஆண்டு முடிவில், இத்தப் பிரபஞ்சத்தைப் படைத்து காத்து நடத்திவரும் சர்வசக்தி வாய்ந்த கடவுள் ஒருவர் உண்டு என்னும் கொள்கை அடியோடு ஆதாரமற்றதென உணர்ந்துகொண்டுவிட்டேன்'' என்று குறிப்பிடுகின்றார்.

தூக்குமேடை ஏறுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னால் வார்டர் பகத்சிங்கைப் பார்த்து இந்தக் கடைசி நேரத்திலாவது பிரார்த்தனை செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். சிரித்த முகத்தோடு அதை மறுத்த அவர், ''கடைசி நேரத்தில் அப்படி செய்தால்உங்கள் கடவுளே கூட என்னை ஒரு கோழை என்று நினைத்துக் கொள்ள மாட்டாரா? இத்தனை வருடங்களும் பிரார்த்தனை ஏதுமின்றிக் கழிந்ததைப் போலவே, இந்தக் கடைசி நேரமும் அமைந்து, நான் உலகைவிட்டு போய் விடுவதுதான் சிறந்தது. அப்போதுதான், நாத்திகனாக இருந்த நான், பயத்தின் காரணமாக மனம் தடுமாறி ஆத்திகத்திற்குச் சென்றுவிட்டேன் என்று யாரும் குறை கூறமுடியாது.''

பகத்சிங் ஒரு மார்க்சிஸ்டாகவே இருந்தாரெனினும் ஒரு நுட்பமான வேறுபாட்டைப் பி. டி. ரணதிவே குறிப்பிடுகின்றார். ''பகத்சிங், போராட்டங்களின் வர்க்கக் குணங்களைப் புரிந்து

கொண்டு, பாட்டாளிகளின் படையை உருவாக்காமல், இளைஞர்களின் படையையே நம்பினார்'' என்பதே அக்குற்றச்சாட்டு. இது ஒரு பகுதி உண்மையே! ஆயினும் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் திரட்டவே இளைஞர்களைப் பயன்படுத்த விரும்பினார். மேலும் பகத்சிங்கிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நேரிடையாக உறவு இருந்திருக்கவில்லை என்பதைத்தவிர, இருவருக்குமிடையே நெருக்கமான தோழமை உணர்வு இருந்திருக்கிறது. சிவவர்மா முதலான பகத்சிங்கின் பல தோழர்கள் பின்னாளில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகி விட்டனர்.

5 வது இயல், பகத்சிங்கும் தமிழகமும்: 1930 இல் முதன் முதலில் அறிமுகமான பகத்சிங்கின் பெயர் தமிழகத்தில் பரவியதைப் போல காந்தியார் உள்பட வட நாட்டில் பிறந்த எந்தத் தலைவரின் பெயரும் இவ்வளவு குறுகிய காலத்தில் பரவியதில்லை. 1929 இல் சட்டசபையில் குண்டுவீசியதைக் குறித்துக் கேலி பேசிய 'ஆனந்த விகடன்' பகத்சிங் தூக்கிலேற்றப் பட்ட பின்பு புகழ்ந்து எழுதியது. தமிழக மக்களுக்குப் பகத்சிங்கை ஓரளவு நல்லமுறையில் அறிமுகப்படுத்திவைத்த பெருமை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு உண்டு. பகத்சிங் கொல்லப் பட்ட மறுவாரமே 'குடியரசு' இதழில் தலையங்கம் எழுதப்பட்டது.

தமிழகத்தில் எந்த நாடகம் நடந்தாலும் இறுதியில் பகத்சிங்கைப் பற்றி ஒரு பாடலாவது பாடவேண்டும் என்று மக்கள் குரல் எழுப்பினர். பகத்சிங் இறந்த பிறகு தமிழ் நாட்டிலும் நவஜவான் பாரத்சபா என்னும் பெயர் கொண்ட அமைப்புத் தொடங்கப்பட்டது. 1931-32 இல் பகத்சிங்கைப் பற்றி ஏராளமான துண்டறிக்கைகளும் சிறு புத்தகங்களும் வெளிவந்தன. ஆனால், அரசு அனைத்தையும் தடைசெய்து விட்டது. 1932 ஆம் ஆண்டு தீப்பெட்டி ஒன்றின் மீது பகத்சிங் படம் ஒட்டப்பட்டு வெளிவந்திருக்கிறது.

"(Why Iam an Athert)- 'நான் நாத்திகன் - ஏன்' என்னும் பகத்சிங்கின் நூலை ப. ஜீவானந்தம் மொழிபெயர்க்க, ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் ஈ. வெ. கிருஷ்ணசாமி (பெரியாரின் அண்ணன்) வெளியிட்டார். இந்நூலை வெளியிட்டதற்காக 22—10—1934 இல் அரசு இவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தது; நூல்களைப் பறிமுதல் செய்தது. 18—3—35 இல் இருவரும் எழுதிக்கொடுத்த மன்னிப்பு அறிக்கையின் படி விடுதலை செய்யப்பட்டனர். இந்த மன்னிப்பு

அறிக்கை பகத்சிங்கிற்கோ, பெரியாருக்கோ ஜீவாவிற்கோ பெருமை தருவதாக இல்லை. சுயமரியாதை இயக்க வரலாற்றில் இது ஒரு கரும்புள்ளியாகவே உள்ளது என்பதை மறுப்பதற்கு இல்லை!

13—9—1929 இல் இறந்துபோன ஜதீந்திரநாத்தாஸ் அவர்களைப் பற்றி 21—11—1929 இல் பெரியார் அருமையாக உரையாற்றியுள்ளார். இவ்வாறு புரட்சியாளர்களைத் தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ள பெருமை பெரியாருக்கு உள்ளது. ஆனால், அவர் அவர்களின் நாத்திக முகத்தை மட்டுமே எடுத்துக்காட்டினார்.

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் தமிழகத்தில் பகத்சிங்கின் கொள்கைகள் பரவலாகப் பேசப்படுகின்றன.

6வது இயலான பின்னிணைப்புகளில் பகத்சிங்கைத் தூக்கிலிடுவதற்கான வாரண்ட், அவர் தந்தைக்கு எழுதின கடிதம், நண்பர்களுக்குச் சிறையிலிருந்து எழுதப்பட்ட கடிதங்கள், சிறையிலிருந்த தோழர்களுக்கு எழுதிய கடிதம், சிறையில் பகத்சிங்கின் உடல் நிலை விவரம், பகத்சிங் வழக்குத் தீர்ப்பிலிருந்து சில பகுதிகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

7வது இயலான துணை நூற் பட்டியல் என்பதில் இந்நூல் எழுதுவதற்குப் பயன்பட்ட 23 தமிழ் நூல்களையும், 22 ஆங்கில நூல்களையும் தந்துள்ளார்.

(வீரன் பகத்சிங்கின் வாழ்க்கை வரலாறு கோழையையும் வீரனாக்கும்; பேடிக்கு ஆண்மையைத் தரும்; துரோகியைத் தியாகியாக்கும்; தன்னலவாதியைப் பொதுப்பணியில் ஈடுபடுத்தும்; தேசபக்தக் கனலை மூட்டும்)

நூல் பெயர்:

பகத்சிங்கும் இந்திய அரசியலும்

ஆசிரியர்:

சுப. வீரபாண்டியன்,

கனிமுத்துப் பதிப்பகம்,

727, அண்ணா சாலை, சென்னை - 6.

இஸ்லாமியத் தமிழில் 'ங்'

P. இராஜேந்திரன்,
மொழியியல் துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

மனிதன் பேசத் தொடங்கிய காலக்கட்டத்தில் தன் எண்ணங்களை வெளிப்படுத்த சில ஒலிகளை எழுப்பினான்.[1] அவ்வொலிகள் பின்னால் ஒலிக்கோவையுற்றுச் சொற்களாகவும் வாக்கியங்களாகவும் மாறி ஒரு மொழியாகியது. இம்மொழி காலச் சூழலுக்கு ஏற்ப பல மொழிகளாக மாறின. இக்காலக் கட்டத்தில் அறிஞர் பெருமக்கள் அம்மொழிகளுக்குச் சில விதிகளைச் சூத்திர வடிவில் எழுதி வகைப்படுத்தி 'இலக்கணம்' என வழங்கினர். இவர்களை மரபு இலக்கணத்தார் (Traditional grammarians) எனலாம்.

மொழி என்பது ஒரு நிலைப்புத் தன்மையற்றதன்று. காலத்தால் வளர்ச்சியும் மாற்றமும் அடையக் கூடியது. நேற்றுப் பேசியது போல் நாம் இன்று பேசவில்லை. மக்கள் இன்று நாம் பேசுவது போல் நாளை பேசார். இதனால் காலக் கண்ணோட்டத்தில் ஒலிகளும் பல மாற்றங்களை அடைவது தவிர்க்க இயலாத ஒன்றாகிறது.

தமிழில் வழங்கும் ஒலிகளில் கடையண்ண மூக்கொலி [ங்], ஒலியனா அல்லது ஈரிதழ் மூக்கொலி [ம்] இன் மாற்றொலியா என்பது மொழியியல் அறிஞர் பெருமக்களிடையே சர்சைக்குரிய ஒன்றாக விளங்கி வருகிறது.

இதுபற்றி ஜார்சிலேவ் வெசக், 'The palatal nasal in Tamil' எனும் கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

> This is perfectly clear for everybody dealing with the Tamil phonology, since | n | is only an allophone which appears on the boundary of morphemes or words before velar stop as a substitute for the labial nasal (IJDL, Vol. VII (1978), No 2, P. 223).

இதற்குச் சான்றுகாட்டும் வகையில் இன்று வெளிவந்துள்ள ஏராளமான தமிழ் கிளை மொழி ஆய்வுகள் [ங்] கை [ம்] இன் மாற்றொலியாகவே விளக்கிக் காட்டுகின்றன.

1. John & Joan Levitt, 1975, PP. 3-4.

ஒலியன்களைக் காண்பதற்குதவும் கொள்கைகள் என்ற அடிப்படையில் மொழியியலறிஞர்கள் பைக் (Pike), ஹாக்கட் (Hockett) ஆகியோர் சில கொள்கைகளை வரையறைப்படுத்தியுள்ளனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் முத்துச் சண்முகனார் தனது இக்கால மொழியியலில் கூறும்போது

> ஆங்கிலத்தில் | ŋ | வும் | h | வும் துணை நிலை வழக்கில் வருகின்றன. | ŋ | சொற்களின் ஈற்றிலும், | h | பிற இடங்களிலும் வருகின்றன. ஆனால் இவை இரண்டையும் ஒரே ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதுவதில்லை. ஒலியொற்றுமை உடையவைகளையே ஒரு ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதுகிறோம். ....ஆனால் எவ்வளவு ஒலியொற்றுமை இருக்கவேண்டும் என்பது அவரவர் உளப்பாங்கையும் மொழியின் அமைப்பையும் பொறுத்தது. (1971, p. 71)

என்கிறார். இவற்றைக்கொண்டு நோக்கும்போது கடையண்ண மூக்கொலி [ங்] எப்பொழுதும் சொல்லின் இடையில் அடைப்பொலி [க்]உடன் [ங்க] என வருகின்றபோதிலும் தமிழ்மொழியின் (அமைப்பை நோக்கும்போது அம்மொழியின்) பாங்குக்கு ஏற்ப மேற்கூறிய சான்றின் மூலம் கடையண்ண மூக்கொலியும் ஒரு தனி ஒலியனே எனக்கூற முடியும் போல் தோன்றுகிறது.

மேலே கூறிய அறிஞர்களின் நோக்கில் [ங்]கை [ம்]வின் மாற்றொலியாகக் கொண்டாலும் | தங்கம் | என்று எழுதும் இடத்தில் | தம்கம் | என்று எழுதுவ்து எவ்வளவு ஒலியொற்றுமை உடையது என்பதை நாம் ஆய்ந்து பார்க்க வேண்டும். மேலும் இவை இரண்டும் மூக்கொலியாக இருந்தபோதிலும் இவ்விரண்டு ஒலிகளின் பிறப்பிடங்கள் மிகவும் அருகருகே அமையவில்லை. அஃதாவது ஒன்று ஈரிதழ் மூக்கொலி (bilabial nasal) யாகவும் மற்றொன்று கடையண்ண மூக்கொலி (velar nasal)யாகவும் பிறப்பிக்கப்படுகின்றன.

மேலும் எடுத்துத் தமிழில்[1] கடையண்ண மூக்கொலி சொல்லின் முதலிலும், சொல்லின் இடையில் இரட்டித்தும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன.

எ.கா :

i) | ஙகரம் | 'குறுணியளவு'
| மகரம் | 'சுறா' ; 'முதலை முதலியன.

1. லிப்போ அகராதி, 1968.

ii)	| ஙனம் |	'சுட்டெழுத்து வினா எழுத்துக்களுடன் கூடி தன்மை, இடம் ஆகிய பொருள்களைத் தரும் சொல்'.
	| மனம் |	'நெஞ்சம்'
iii)	| அங்ஙனம் |	'that'
	| அம்மணம் |	'nakedness'

இதற்குச் சான்றாக பேராசிரியர் முத்துச் சண்முகனார், இக்கால மொழியியலில் | mnn | என்ற மூன்றும் அடைப்பான்களின் மூன்று வேற்றுநிலை வழக்கில் வருகின்றன (1971, p.116) என்கிறார். ஆனால் S. ராசராம்[2] அவர்கள் தனது 'Tamil Phonetic Reader' இல் [ங்] கை [ன] வின் மாற்றொலியாகக் கூறுகிறார்.

இக்கட்டுரை இஸ்லாமியப் பேச்சுத் தமிழில் கடையண்ண மூக்கொலி [ங்] ஓர் ஒலியனா என்பதை மேலும் ஆராய முற்படுகிறது.

பொதுவாகப் பேச்சுத்தமிழில் கடையண்ண மூக்கொலி எப்பொழுதும் ஒலிப்புடை கடையண்ணத் தடை ஒலியாகிய (voiced velar stop) [g] வுடன்தான் சேர்ந்து வருவதாகக் காண்கிறோம். ஆனால் இதற்கு மாறாக இராமநாதபுரம் மாவட்ட இஸ்லாமியர்கள் பேச்சு வழக்குச் சொற் கூறுகளை ஆராயின் (in sentence level).

| tanki | 'to stay'

| vēnki | 'to buy'

போன்ற சொற்களில் கடையண்ண மூக்கொலி ஒலிப்பிலா கடையண்ண தடை ஒலி (voiceless velar stop) [k] வுடன் சேர்ந்து வருகிறது.

இக்கூற்று, இதுபோன்று இலங்கைப் பேச்சுத்தமிழில் உள்ளதாகக் கூறும் M. முத்துச்சண்முகனார் போன்றோர் கருத்துக்கு வலிமை சேர்க்கலாம். ஆனால் இக்கருத்தை தனஞ்யராசசிங்கம் தனது கட்டுரை "The Plosive after nasals in Jaffana Tamil : Kymographic evidence on voicing" மூலம் மறுத்துள்ளார். ஆனால், இவர், இது தனது பேச்சை மூலமாகக் கொண்டு கூறப்பட்டதாகக் கூறுகிறார். இது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

2. S. ராசராம், Tamil Phonetic Reader, 1980, p. 66.

மேலும் இராமநாதபுரம் மாவட்ட தமிழ் முஸ்லீம்களின் பேச்சு வழக்குச் சொற்கூறுகளை ஆயின் [ங்], சொல்லின் முதலிலும், இடையிலும் கடையிலும் வேற்று நிலை வழக்கில் வருகின்றன.

1. சொல் முதல்

| nokkāl | 'உன் அக்கா'

| mokkal | 'கூரின்மை'

2. சொல் நடு

| tamkul | 'கொட்டு'

| tanku | 'to stay'

3. சொல் கடை

| nan | 'the sound of a thing falling on to a hard surface'

| nam | 'oblique from of "we"'

[ங்] ஐ [ன] வின் மாற்றொலியாகக் கொள்ளலாமா என்று ஆயின்

| enna | 'where'

| enna | 'what'

போன்ற சொற்களில் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன.

இதிலிருந்து கடையண்ண மூக்கொலி எழுத்துத் தமிழிலும், இராமநாதபுரம் மாவட்ட முஸ்லிம் பேச்சுத் தமிழிலும், ஓர் ஒலியன் என அறியலாம்.

SELECT BIBLIOGRPHY

Asher, R. E — Tamil, Lingua Descriptive studies, Vol. VII 1982

John and Joan Lewit, — "The Origin of language" wallace L. Anderson and Norman C. Stagbers' Introductoy Reedings on Language, Holt Rinehart and wirston, New York, 1975.

முத்துச்சண்முகன் — இக்கால மொழியியல், மதுரை 1971
இக்காலத்தமிழ், மதுரை, 1973.

Rajendran, P., — A Descriptive Grammer of Tamilmuslim Dialect of Ramnad District, Ph. D. dissertation (in Progress) Madurai Kamaraj University, Madurai.
The phonetics of Muslim Tamil, Un`published paper, 1987

ராசாராம், சு., — ஒலியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1930.
Tamil Phonetic Reader, CIIL, Mysore, 1980.

Thanajayarajasingham, — "The Plosives after nasals in Jaffna Tamil: Kymographic evidence on voicing", IL, Vol. 40, pp. 294-9.

Vacek, Jaroslav, — "The Palatal Nasal in Tamil, IJDL, Vol, VII (1978), No. 2, pp. 223-38

பதிப்பகத்தார், — லிப்கோ தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி, தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை, 1968.

முதல் உலகப்போருக்குப்பின் தமிழ் இலக்கிய நிலை

மா. மீனாட்சிசுந்தரம், எம். ஏ., எம். பில்.
திட்ட உதவியாளர்,
மொழியியல் துறை,
பாரதியார் பல்கலைக் கழகம்,
கோவை-46.

பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகு நிலவுடைமைச் சமுதாயம் வீழ்ச்சியடைந்தது. ஐரோப்பா முழுவதும் புதிய விடுதலை உணர்வும், தொழிற் புரட்சியும் தோன்றி வளர ஆரம்பித்தன. நிலவுடைமைச் சமுதாய வீழ்ச்சிக்குப் பிறகு, பொதுமக்கள் பாடுபொருளாகக் கருதப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்களுடைய சமுதாயத் தேவைகளைச் சொல்லுவதற்கு உரைநடை வகையே மிகமிக நெருக்கமாக இருந்தது ஓரளவு உண்மை வாழ்க்கையை ஒட்டி இலக்கியம் படைக்கப்பட்ட போது புதினம் (நாவல்), சிறுகதை முதலான புனைகதை வடிவங்கள் தோற்றம் பெற்றன.[1]

தொடக்ககாலப் புனைகதைகள் காவியங்களைப் போல இயற்கை இறந்த நிகழ்ச்சிகளையும் கொண்டிருந்ததேனும் பிற்காலத்தில் அவை களையப்பட்டன. சமகால மக்களைக் கருதிச் செய்யப்பட்டதால், புனைகதை வடிவங்கள் பிற்காலத்தில் வெற்றி பெற்றன.

இந்திய நாட்டில் புனைகதை வடிவம் தோன்றி வளர ஆங்கிலேய ஆட்சியின் தாக்கமே காரணமாக இருந்தது. கிறித்தவ சமயத் தலைவர்கள் உரைநடை மூலம் தம் சமயக் கருத்துக்களை மக்களிடம் பரப்ப முயன்றனர். இந்திய நாட்டு விடுதலைக்குத் தேசியத் தலைவர்களும் உரைநடையைப் பயன்படுத்தினர்.[2]

ஆங்கிலேய ஆட்சியை இந்தியர்கள் வரவேற்பார்கள் என்ற கருத்தோடு, ஆங்கிலேய அரசு இந்திய மக்களுக்குச் சில வசதிகளைச் செய்து கொடுத்தது.[3] ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப் பட்ட அச்சுக்கலை, கல்வி வளர்ச்சி, தொழிற்புரட்சி, குடியரசு வேட்கை மனிதாபிமான அடிப்படையில் அமைந்த சட்டங்கள் முதலியன புனைகதை வளர்ச்சியை விரைவுபடுத்தின. கல்விப் பெருக்கத்தால் கற்றவர் எண்ணிக்கையும் வளர்ந்தது.

ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அளவு ஓய்வு கிடைத்தது. இவை யாவும் புதிய இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் துணையாயின.

ஐரோப்பிய நாகரிகமும் பொருளாதார அமைப்பும் இந்தியாவின் பண்டைய நாகரிக முறையைப் பாதித்தன [4]. இந்திய இலக்கியத்தின் நோக்கத்தில் மாற்றம் ஏற்பட்டது. மேனாட்டு இலக்கியத் தாக்கமும் இந்திய இலக்கிய மாற்றத்துக்கு உறுதுணையாயிற்று. [5]

இந்திய நாட்டுப்புராணங்கள், காவியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், இசை, நாடகம் போன்றன யாவும் பழங்கதைகளையே மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி, பொதுமக்களைச் சலிப்படையச் செய்திருந்தன. பாடப்பட்ட பழங்கதைக் காவியங்களிலும் கவித்துவம் இல்லை [6] எனவே, பொதுமக்களும் புதியதோர் மாற்றத்தை விரும்பி ஏற்க இருந்த காலத்தில் புனைகதை இலக்கிய வரவுக்கு வரவேற்பு கிடைத்தது.

உலக முழுதும் பொதுமக்களைக் கருப்பொருளாக வைத்து இலக்கியம் படைக்கும் புதிய மரபு வளர்ந்திருந்த நேரத்தில், புனைகதை வடிவம் அரும்பி இருந்தது. புனைகதை இலக்கியம் தனி மனிதனுக்கு மதிப்பு அளித்திருந்தது. ஆங்கிலக்கல்வி, நாட்டில் நடுத்தர வகுப்பினர் எனும் புதிய வகுப்பினரைத் தோற்றுவித்திருந்தது. புனைகதை இலக்கியம் நடுத்தர மக்களின் சமுதாயச் சிக்கல்களை அடித்தளமாகக் கொண்டு இலக்கியம் படைத்தது எனவே, புனைகதை வடிவம் பொதுமக்களின் பேராதரவினைப் பெற்று விரைவாக வளர்ந்து வந்தது.

மேனாட்டுப் புதிய இலக்கியத்தைப் படித்து மகிழ்ந்தவர்கள், அதைப்போன்று, தத்தம் மொழிகளில் படைக்க முயன்ற முயற்சி இந்தியப் புனைகதை வளர்ச்சியின் தொடக்கமாக அமைந்தது. இந்தியாவில் வங்க மொழியில்தான் முதல் சிறுகதை உருவாயிற்று.[7]

தமிழுக்குப் புனைகதை வடிவம் புதியதேமொழிய, கதை பழமையானதுதான்.[8] மடங்களின் தலங்களை நையாண்டி செய்து வீரமாமுனிவர் (1680-1746)[9] எழுதிய 'பரமார்த்த குருகதைகள்' தமிழில் அறிமுகப்படுத்தப்பட்ட உரைநடைச் சிறுகதைகளாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வீராசாமி செட்டியாரின் விநோதரச மஞ்சரியும், தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரக்

கதையும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் அடுத்த முயற்சியைக் காட்டுவனவாகும்.[10]

மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் (1826 - 1889)[11] பிரதாபமுதலியார் சரித்திரம் பொதுமக்களுக்காக சீர்திருத்த நோக்கத்தில் கவிதையைப் போலவே தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி இயக்கத்துறைக்கும் பாரதியாரே முதல்வராக விளங்குகிறார்.[12] தாகூரின் கதைகளைப் பாரதியார் (1908-1918) மொழிபெயர்த்து உதவினார். பாரதியார் எழுதிய சிறுகதைகளும் உண்டு. தமிழ் உரைநடையைப் புதிய முறையில் வளர்த்த பெருமை பாரதியாருக்கும் வ. வே சுப்பிரமணியஐயருக்கும் உரியதாகும். சிறுகதையில் இலக்கணத்துக்கு ஓரளவு பொருந்தி வரக்கூடிய அளவில் வ. வே. சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்' அமைந்திருந்தது.

அரசியல் சமுதாய மறுமலர்ச்சிகளால், எதையும் ஊடுருவி நோக்கிக் கேள்வி கேட்கும் மனநிலையை மக்கள் பெற்றனர். இப்புதிய விழிப்புணர்ச்சி தமிழ்நாட்டு இலக்கியத்துறையையும் ஆட்கொண்டது. இத்தகைய விழிப்புணர்ச்சிக்குப் பிறகு, திருமணச் சிக்கல்களை பேரளவுக்குக் கருவாகக் கொண்ட புனைகதைகள் தோன்றின.[13]

இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் காந்தியச் சிந்தனைகளின் தாக்கத்தால் மதுவிலக்கு, தீண்டாமை, தேவதாசிமுறை ஒழிப்பு, நாட்டு விடுதலை உணர்வு சிற்றூர் சீர்திருத்தம், கைத்தொழில் வளர்ச்சி முதலியவற்றைக் கதைக் கருவாகக் கொண்டு கதைகள் தோன்றின்.

மக்களின் சிந்தனை ஆற்றல் வளர்ந்த பிறகு சாதிக்கொடுமை, வறுமை, மதமாற்றம் ஆகியவைகளைக் கதைப் பொருளாகக் கொண்ட புனைகதைதான் எழுதப்பட்டன.

1933 ஆம் ஆண்டு மணிக்கொடி எனும் சிறுகதை வார இதழ் ஒன்று தொடங்கப்பட்டது. [14] தமிழில் பலதுறைக் கருத்துக்களையும் சொல்ல வேண்டும் என்ற நோக்கமே மணிக்கொடியின் தோற்றத்திற்கான காரணமாகும்.

தமிழ்ச்சிறுகதை இலக்கணம் தோன்றும் அளவுக்கு, மணிக்கொடியில் கதைகள் மிகப்பலவாக வெளியிடப்பட்டன. சிறுகதை வரலாற்றில் 'மணிக்கொடி காலம்' எனச் சுட்டும் அளவுக்குத் தமிழ்ச் சிறுகதை உலகில் மணிக்கொடி செல்வாக்குப் பெற்றது.

தமிழ் நாட்டில் சமூக, கலை, பண்பாடு, இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த 'மணிக்கொடி' முயன்றது. இந்தப்

> புதிய பரிசீலனைக்கு இடம், உற்சாகம், வரவேற்பு அதற்கு முன்போ பின்போ கிடையாது.[15]

என்று புதுமைப்பித்தன் மணிக்கொடியைப் பாராட்டினார். விடுதலைக்குமுன் சிறுகதையைத் தமிழுக்குரிய இலக்கிய வடிவமாக்கிய பெருமை மணிக்கொடிக்கு உண்டு.

மணிக்கொடி எழுத்தாளர்கள் மேனாட்டு இலக்கிய வடிவத்தை மனத்திலே நிறுத்திச் சிறுகதைகளைப் படைத்தார்கள்.[16]

பிறமொழி கதைத்தழுவல்களே மணிக்கொடியில் மிகுதியும் இடம் பெற்றன.[17] தமிழ்ச் சிறுகதைகள் சில இந்தி முதலான மொழிகளில் மொழிபெயர்த்தெழுதப்பட்டன.[18]

புனைகதை வடிவம் மேனாட்டுக்குரியது என்பதனால், தொடக்ககால தமிழ்ப் புனைகதைகளும் மேனாட்டுச் சூழல் பின்னணியிலேயே படைக்கப்பட்டன. ஆங்கிலம் முதலான மேனாட்டுப் புனைகதை இலக்கியங்களைப் படைத்தவர்கள் அதைப் போலவே தமிழில் தர முன்வந்தனர். தம் கலை, பண்பாடு ஆகியவற்றை அவர்கள் முற்றிலும் புறக்கணித்து விட்டனர்.

இத்தகைய மொழிபெயர்ப்புக் கதைகளும், பிற மொழித் தழுவல்களும் 1922 முதல் 1938 வரையில் தொடர்ந்து வெளி வந்தன. அந்தக் காலகட்டத்தில் மேனாட்டுச் சரக்கே, தமிழில் பெரிதும் தரப்பட்டது எனலாம்.[19] இதனால் இந்த நாட்டினுடைய படைப்புத் திறனோ, பண்பாடோ வெளிப்பட வழியில்லாமல் போய்விட்டது. முழு இலக்கியத் தன்மையும், மொழி பெயர்ப்புக் கதைகளுமாக வெளிவந்த மணிக்கொடி போன்ற ஏடுகள் பாமர மக்களிடையே செல்வாக்குப் பெற முடியாமல் போனது குறிப்பிடத் தக்கது.

குறிப்புக்கள்

1. டாக்டர் க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப. 20.
2. கா. சிவத்தம்பி, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 9.
3. டாக்டர் க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப. 26.

4. மேலது, ப. 22.
5. டாக்டர் மா. இராமலிங்கம், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப. 19.
6. மேலது, ப 14.
7. டாக்டர் மா. இராமலிங்கம், விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப. 17.
8. டாக்டர் இரா. தண்டாயுதம், தமிழ்ச்சிறுகதை முன்னோடிகள் ப. 14
9. மேலது, பக். 14-15.
10. மேலது, பக். 14-15.
11. மேலது, ப. 15.
12. டாக்டர் மா. இராமலிங்கம், விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப. 42.
13. மேலது, ப. 85.
14. சி. சு. செல்லப்பா, தமிழ்ச்சிறுகதை பிறக்கிறது, ப. 101.
15. கா. சிவத்தம்பி, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 42.
16. மேலது, பக். 42-43.
17. சி. சு. செல்லப்பா, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, ப. 107.
18. பிச்சமூர்த்தியின் 'தாய்' கதையை இந்தியில் 'ஹம்ஸ்' பத்திரிகை மொழிபெயர்த்தது.
    மணிக்கொடி, 1936, தொகுதி – 4, பக். 9-11
19. மணிக்கொடி, 15—1—1938 - 1. எதிர்பாராத சந்திப்பு (இந்தி) தமிழில் வாசுகி, ப. 46.
    2. வனரோஜா தமிழில் மாலினிகா.

டாக்டர் நா. செயராமன்
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 46.

தொல்காப்பியர் அகப்பொருளை இருவித நோக்குகளில் விளக்குகிறார். அகத்திணையியலில் அகப்பொருளைத் திணையடிப்படையில் பாகுபாடு செய்து விளக்குகிறார். கைக்கிளை முதலாப் பெருந்திணை ஈறாக எழுதிணை வகுத்து அவற்றுள் ஐந்திணைக்கு முதல், கரு, உரிப்பொருள்களை அமைத்துக் கூறுகிறார்.

அதுபோலவே களவு, கற்பு என்று பாகுபாடு செய்து கொண்டு கூற்று வகைகளாகப் பகுத்துக் கூறுகிறார்.

களவு எனும் கைகோளில் காமப்புணர்ச்சி, இடந் தலைப்படல், பாங்கொடுதழால், தோழியிற்புணர்வு என நான்கு நிகழ்ச்சி வகைகளைக் கூறுகிறார். கற்பினை விளக்கும்போது மறை வெளிப்படுதல், தமரில்பெறுதல், மலிவு, புலவி, ஊடல், உணர்தல், பிரிவொடு புணர்தல் என்பவற்றைத் தொல்காப்பியர் கூறுகிறார். இப்பகுப்பைச் செய்யுளியலில் கூறக்காண்கிறோம். (தொல். செய். 1442. 1443) பொருளியலில் அறத்தொடு நிற்றல், வரைவு கடாதலைக் கூறுகிறார்.

இறையனார் களவியல் உரை

இறையனார் களவியல் காமப்புணர்ச்சி, பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, பாங்கியற்கூட்டம் எனும் நான்கினைக் களவியலிலும் (இறை. 2, 35) கற்பியலும் ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தர்க்குற்றுழி, பொருள், பரத்தை என்ற ஆறின் காரணமாகப் பிரிதல் ஆகியவற்றையும் கூறுகிறது.

இறையனார் களவியல் உரை பகற்குறி, இரவுக்குறி, அல்ல குறிப்படுதல், பொருள்வயின்பிரிதல், ஒருவழித்தணத்தல், அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல் ஆகிய துறைகளைக் களவியலில் சேர்த்துக் கூறுகிறது.

இறையனார் களவியல் உரையே முதன் முதலில் நிகழ்ச்சி களின் பிரிவுகளாகத் துறைகள் பலவற்றை எடுத்து விளக்குகிறது. காமப்புணர்ச்சி எனும் இயற்கைப் புணர்ச்சி முறையினைக்

காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்று கூறுகிறது. (இ.க.உ.ப. 36) அடுத்து நயப்பு, பிரிவச்சம், வன்புறை, தலைவன் தலைவியது அருமையறிதல் ஆகியவற்றையும் இயற்கைப் புணர்ச்சி எனும் நிகழ்ச்சியுள் கூறுகிறது களவியல் உரை.

பாங்கற் கூட்டம் எனும் நிகழ்ச்சி உற்றதுவினாதல், உற்றதுரைத்தல், கழறிவுரைத்தல், இயலிடம் கூறல், குறிவழிக்காண்டல், தலைவனை வியந்துரைத்தல், கண்டமை கூறல், மொழிபெற வருந்துதல், மருங்கணைதல் எனும் 12 துறைகளாகக் கூறப்படுகிறது.

இடந்தலைப்பாடு எனும் நிகழ்ச்சி பொழிலிடைச் சேறல், பொழில்கண்டு உவத்தல் என இரண்டு துறையாகக் கூறப் பட்டுள்ளது. மதியுடம்படுத்தல் என்பது

பதியும் பெயரும் வினாதல்
வேழம் வினாதல்
கலைமான் வினாதல்
வழிவினாதல்
மொழிபெறாது கூறல்
இருவர் நினைவும் ஒருவழி உணர்தல்

என்று ஆறு துறைகளாக உள.

சுனைவியந்துரைத்தல்
பிறைதொழுகென்றல்
தகையணங்குறுத்தல்

நாணநாட்டம், நடுங்கநாட்டம் என்னும் இரண்டும் அகத்திணை இலக்கணம் அன்றெனக என்பர் இறையனார் களவியல் உரையாசிரியர். (ப. 71)

தொல்காப்பியத்துள் காணப்பட்ட திணைநெறி, துறைநெறி இரண்டில் சங்கப்பாடல் திணைநெறியினைப் பின்பற்றின. பதினென் கீழ்க்கணக்கு நூல்களும் அந்நெறியினைப் பின்பற்றின துறைநெறியினைத் திருக்குறள் பின்பற்றியது. களவியலுரை துறைநெறியை மேலும் விரிவாக விளக்கக் கோவை நூல்கள் துறையடிப்படையில் விரிவாகி வளர்ந்தன திணைநதி சங்ககாலத்தே முழுமை பெற்று மெல்ல வழக்கிழக்கத் துறைநெறி பக்திக்காலத்தே தொடங்கிக் கோவையாக முழுமை பெற்றது.

காதலேபாடுபொருள் என்றநிலைமாறி மன்னனைப்போற்றல், கடவுளைப் போற்றல் பாடுபொருளாகவும் காதல் பாடல் அமைப்பாகவும் நிலை உருவாகியது.

பாண்டிக்கோவை

துறை பல கூறி ஒவ்வொரு துறைக்கும் பெரும்பாலும் பாண்டியனைப் பற்றிய பாடல்களையும் சிறுபான்மை சங்கப் பாடல்களையும் மேற்கோள் காட்டுகிறார் உரைகாரர்.

பாண்டியனைப் பற்றிய அகப்பொருள் பாடல்களைத் தொகுத்துப் பாண்டிக்கோவை எனப் பெயர் கொடுத்துள்ளனர்.

அகம், புறம் எனும் பாகுபாடு மன்னர் புகழைப்பாடும்போது மறைந்து இரண்டும் இணைந்து அமைந்தன. கலம்பகம் அவ்வாறமைந்த சிற்றிலக்கியமே. முத்தொள்ளாயிரமும், நந்திக் கலம்பகமும் காதலை மையப் பொருளாக்காமல் மன்னைத் தலைவனாக்கிக் காதல் பாடலையும் புறப்பாடலையும் அமைப் பாகக்கொண்டு மன்னனைப் புகழ்ந்து பாடுகின்றன.

எனவே அகப்பொருள் மன்னன் புகழைப் பாடப் பின்னணி யாக அமையும் நிலை ஏற்பட்டது. அடுத்து பக்தி இலக்கியம் சிறப்புற்ற காலத்தில் இறைவன் பாட்டுடைத் தலைவனாகவும் அகப்பாடலமைப்பு பின்னணியாகவும் அமைந்தன.

இடைக்காலத்தில் அகப்பாடல் அமைப்பில் மன்னர்களைப் புகழ்ந்து பாடும் மரபு தோன்றியது. நந்திக்கலம்பகம், முத்தொள் ளாயிரம், பாண்டிக்கோவை போன்றவை அத்தகைய நூல்கள் எனலாம்.

பாண்டிக்கோவை முழுக்க இலக்கணப்படி அமைந்த முதல் கோவைநூல் என்று கூறிவிடமுடியாது ஏனெனில் ஒருதுறைக்குப் பல பாடல்கள் மேற்கோளாகக் காட்டத்தக்க விதத்தில் பாடப் பட்டுள்ளது. (வெள்ளைவாரணரார்). எனவே நானூறு துறைக்கு நானூறு பாடல்கள் என்ற அமைப்புமுறை இந்நூலுக்குப்பொருந்த வில்லை. மேலும் இப்பாடல்கள் எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டன? அதன் இயற்பெயரென்ன? அதன் முழுவடிவம் என்ன? என்ற செய்திகள் வரலாற்றுப் பூர்வமாக நமக்குக் கிடைக்கவில்லை. பல்வேறு அகப்பொருள் துறைகளின் பாடல்கள் அமைந்துள்ளன, அப்பாடல்கலுக்கு பாட்டுடைத்தலைவன் ஒரு பாண்டிய மன்னன் என்னும் இரு செய்திகள் மட்டுமே இறையானார் களவியல் உரை மேற்கோள் பாடல்களிலிருந்து கிடைக்கின்றன.

அந்நூல் கோவை நூல் என்றோ அதன் பெயர் பாண்டிக் கோவை என்றோ உறுதியாகச் சொல்வதற்குச் சான்றில்லை. பாண்டி மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு அகப்

பொருளமைப்பில் முத்தொள்ளாயிரம், நந்திகலம்பகம் போன்று பாடப்பட்ட நூல் ஒன்று இருந்திருக்கவேண்டும். அதில் உள்ள பாடல்களுள் சிலவற்றை மட்டுமே இறையானார் களவியல் உரை மேற்கோளாகக் காட்டுகிறது. அப்பாடல்களைக்கண்ட பிற்காலச் சான்றோர் அவற்றைக் கோவை எனக் கருதிப்பாட்டுடைத் தலைவனாகிய பாண்டியன் பெயரால் பாண்டிக்கோவை எனப் பெயரிட்டு வழங்கலாயினர் எனலாம்:

கோவை இலக்கணம்

“கோவை என்பது கூறும் காலை
மேவிய களவு கற்பெனும் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறென்ப”
(பன்னிரு பட்டியல் 221)

என்று கோவையின் இலக்கணம் கூறப்படும். “கலித்துறை நானூறாய் நடப்பது அகப்பொருள் கோவை நாமமன்றோ” என்று சிதம்பரப் பாட்டியல் கூறும்.

கைக்கிளை முதலாப் பொருள்வயிற்பிரிவு ஈறாக முப்பத்து மூன்று கிளவிகள் கோவை அகப்பொருள்துறைகள் எனக் கூறப்படும். திருக்கோவையாரில் 25 கிளவிகள் அமைந்துள்ளன.

கோவை நூல்களில் நானூறு பாடல் இருத்தல் வேண்டும் எனும் இலக்கணத்தை மீறியும் சிலநூல்கள் அமைந்துள.

கோவை எனும் சிற்றிலக்கிய வகையுள் களவுக்கு

1. இயற்கைப்புணர்ச்சி
2. பாங்கற் கூட்டம்
3. இடந்தலைப்பாடு
4. மதியுடம்படுத்தல்
5. இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்
6. முன்னுற உணர்தல்
7. குறையுற உணர்தல்
8. நாணநாட்டம்
9. நடுங்கநாட்டம்
10. மடல்திறம்
11. குறைநயப்பித்தல்
12. சேட்படை
13. பகற்குறி
14. இரவுக்குறி
15. ஒருவழித்தணத்தல்
16. உடன்போக்கு
17. வரைவு முடுக்கம்
18. வரைபொருட்பிரிதல்

என்னும் பதினெட்டு நிகழ்ச்சிகளும் கற்பில்

19. மனஞ்சிறப்புரைத்தல் 20. தூதிற்பிரிவு
21. காவற்பிரிவு 22. பகைதணிவினை
23. வேந்தர்க்குற்றுழி 24. பொருள்வயின் பிரிவு
22. பரத்தையிற்பிரிவு

என்னும் ஏழு நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன.

இந்நிகழ்ச்சிகள் இருபத்தைந்தும் தொல்காப்பியத்திலேயே குறிக்கப்பட்டிருக்கக் காணலாம். ஆயின் அவற்றின் விரிவாக அமைந்துள்ள துறைகளின் வளர்ச்சி பிற்காலத்ததாகும்.

அகப்பொருளைக் காதல் நிகழ்ச்சிகளாகத் திருக்குறள், காமத்துப்பால் பாடக் காண்கிறோம். இவ்வகையில் இறையனார் களவியல் உரை மேலும் வளர்ச்சி பெற்றுக் கோவை எனும் சிற்றிலக்கிய வகையின் தோற்றத்துக்கு அடிப்படையாய் அமைகிறது.

கோவையின் இலக்கணப்படி அமைந்த முதல் நூலகத் திருக்கோவையாரே அமைந்துள்ளது.

திருக்கோவையாரின் அமைப்பு

திருக்கோவையார் என்றும் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் அழைக்கப்படும் கோவை நூல் பன்னிரு திருமுறையில் எட்டாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளது. திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரே இதனைப்பாடியுள்ளார். பேராசிரியரின் உரை இந்நூலுக்கு உள்ளது.

இருபத்தைந்து அகநிகழ்ச்சிகள் அவற்றின் விரிவான 400 துறைகள் அத்துறைகளுக்கு விளக்கம் கூறும் கொளுக்கள், அத் துறைக்குரிய பாடல்கள் ஆகியவை இந்நூலில் அமைந்துள.

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் அதையடுத்து இறையனார் களவியல் உரையிலும் முறையே வளர்ந்த துறைகள் இந்நூலில் 25 கிளவித் தொகையாகவும் 400 துறைகளாகவும் வரையறை செய்யப்படுகின்றன.

பாட்டுடைத் தலைவனும் கிளவித்தலைவனும்

நானூறு திருக்கோவைப் பாடல்களிலும் பாட்டுடைத் தலைமை சிற்றம்பலத்திறைவனுக்கேயளிக்கப்பட்டுள்ளது. சிற்றம்பலத்து இறைவன் பலவகையாலும் பாடலில் இணைக்கப் படுகிறான்.

1-உவமையாக, 2. களமாக, 3. கதைமாந்தர் தெய்வமாக

1. உவமையாக

அம்பலத்தான் அருள் இல்லார்போல் - திருக். 24
தில்லை தொழாரின் - மேலது 25
கயிலைமலைச்சிறுமான்விழி - மேலது 26
தில்லையம்பலம்போல் கோலத்தினாள் - மேலது 27
அம்பலத்தான் சேய்கண்டனையன் - மேலது 84
அம்பலவன் பரங்குன்றன்ன - மேலது 100
அம்பலவன் அம்பினர்போல் - மேலது 102
தில்லைக்கூத்தன் கொடுங்குன்றின் மேல் தேன்விரும்பும் முடவன்போல் - மேலது 150
தில்லையிடற்றோன் வண்ணம் போன்ற குவளைக்கண் - மேலது 162

என்று சங்க அகப்பாடல் நெறியில் நின்று உவமைகள் கூறப் படுகின்றன.

அம்பலத்தின் அழகு, அம்பலத்தான் அருள் பெற்றார், அம்பலத்தான் அருள் பெறாதார், அம்பலத்தான் கயிலைமலையில் உள்ளமான், அம்பலத்தான் பரங்குன்று என்பன போன்று அம்பலமும் அம்பலத்தானும் அவர்களோடு தொடர்புடைய பொருள்களும் உவமையாகப் பாடப்படுவதன் மூலம்அம்பலத்தான் பாட்டுடைத் தலைவன் ஆகின்றான்.

2. களமாக

சிற்றம்பலம் காதலர் சந்திக்கும் களமாகப் பல பாடல்களில் குறிக்கப்படுகிறது.

''தில்லையின்வாய்
வண்டாவியலும் வளர்பூண் துறைவ'' (105)
''பாப்பணியோன் தில்லைப்பல்பூமருவு
சில்லோதியை'' (196)
''மற்பாய்விடையோன் மகிழ்புலியூர்
என்னொடும் வளர்ந்த'' (208)

என்று பல பாடல்களில் தலைவன் தலைவியருக்குரிய ஊராகவோ சந்திக்கும் இடமாகவோ தில்லைகூறப்படுவதன் மூலம் அம்பலத்தான் பாட்டுடைந்தலைவனாகப் போற்றப்படுகிறான்.

இவ்விரு அமைப்புக்களும் சங்க அகப்பாடல்களில் மன்னர்களது செயலை ஏற்றிச் சொல்லச் சங்கப்புலவர்கள் மேற்கொண்ட நெறிகளேயாகும்.

3. கதைமாந்தரின்தெய்வமாக

சில பாடல்களில் பாட்டுடைத் தலைவனையும் கதைமாந்தர் களையும் இணைத்து அம்பலவன் அடியார்களாகக் கதைமாந்தர் களைப் படைக்கும் முறை காணப்படுகிறது.

என்பிறப்புக்கெடதில்லை நின்றோன் -தலைவி(129)
நினைவித்துத் தன்னை என்நெஞ்சத்திருந்து அம்பலத்து நின்று-பாங்கி (140)
பொதுவினிற் தீர்த்தென்னையாண்டோன் புலியூரான் -(146)
எம்பிரான் தில்லைச் சூழ்பொழிற்கே- தலைவி (167)
இறைவன் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்-பாங்கன் (20)

என்று இந்நூலில் வரும் தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி முதலிய மாந்தர் அனைவரும் அம்பலத்தான்பால் அன்புடையவர்கள் என்று கூறுவதன் மூலமும் பாட்டுடைத் தலைவன்புகழ் பாடப்படுகிறது. இது சங்க காலத்திற்குப் பிறகு பக்திக் காலத்தே ஏற்பட்ட வளர்ச்சியாகும்.

இயற்கை வருணனை பலபாடல்களில் இடம் பெற்றுள்ளது. களவு ஒழுக்கத்திற்கேற்பக்குறிஞ்சி வருணனை வரவேண்டுமெனக் கருதிப்பலபாடல்களில் அம்பலத்தான் கயிலை, அம்பலத்தான் பரங்குன்று என்று அம்பலத்தானோடு குன்று இணைத்துப்பேசப் படுகிறது. சிற்றம்பலத்தில் குன்றின்மையால், பரங்குன்றம், கழுக்குன்றம்,ஈங்கோய்மலை' கயிலைமலை ஆகிய குன்றங்களின் காட்சி வருணிக்கப்படுகிறது.

தலைவி வரும் காட்சிகளைக் கடற்கரைப் பின்னணியில் அமைத்திருப்பது குறிக்கத்தக்கது.

''மாதுற்றமேனி வரையுற்ற விஃவிதில்லை நகர்சூழ்
போதுற்ற பூம்பொழில்கான் கழிகாள் எழிற்புள்ளினங்காள்
ஏதுற்றழிதி என்னீர் மன்னுமீர்ந்துறைவர்க்கிவளோ
தீதுற்றதென்னுக் கென்னீரிதுவோ நன்மை செப்புமினே''
(திருக் 174)

''வாரிக்களிற்றின் மருப்புகு முத்தும் வரைமகளிர்
வேரிக்களிக்கும் விழுமலைநாட'' (திருக்.265)

என்ற சங்கப்பாடல் தலைவனை விளிப்பதுபோல ஓரிரு பாடல்கள் அமைந்தன.

''வந்தாய்பவரையில்லாமயில் முட்டை இளையமந்தி
பந்தாடிரும்பொழிற்பல்வகை நாடன் பண்போவினிதே''

(திருக்.276) என்ற திருக்கோவையார் பாடல் வருணனை

''கானமஞ்ஞை அறைஈன்முட்டை
வெயிலாடுமுசுவின் குருளை உருட்டும்
குன்றநாடன்'' (குறு.38)

என்ற சங்கப்பாடலைப் பின்பற்றி எழுந்துள்ளது.
அவ்வாறே, தலைவன் பிரிந்த நாளை எழுதி விரல் தேய்ந்த நிலையினை

''உண்ணீர் உகவொளிவாடிட நீடுசென்றார்சென்ற நாள்
எண்ணீர் மையினிலனுங்குழியும் விரல் இட்டறவே''

திருக்கோவையார் முந்திய அகஇலக்கிய அடிப்படையில் பேசக் காண்கிறோம்.

சில இயற்கை வருணனைகளுக்கு உள்ளுறை உவமை கூறும்போக்கும் காணப்படுவது குறிக்கத்தக்கது.

திருகோவையாரில் கூறப்பட்ட 400 துறைகளைப் பார்க்கும்போதும் சில பிற்காலக்தில் வரையறுக்கப்பட்ட துறை களாக அமைந்துள. பாங்கற்கூட்டமாக ஓரிருதுறைகளே சங்கப் பாடலுள் உள. ஆயின் 30 துறைகள் கோவை நூலில் விரிந்துக் கூறப்படுகின்றன, அவ்வாறே சேட்படையில் 26 துறைகள் பிற்காலத்தே வளர்ந்துள்ளன. அவ்வாறே பகல், இரவுக்குறி களிலும் ஒருவழித்தணந்தல் ஆகிய நிகழ்ச்சிகளிலும் புதிய துறைகள் பலவளர்ந்துள்ளன.

உடன்போக்கில் 56 துறைகள் விரித்துக் கூறப்பட்டிருப்பதும் அறத்தொடு நிற்றல் முதலிய நிலை உடன்போக்கில் கூறப் பட்டிருப்பதும் புதிய வளர்ச்சியேயாகும்.

தொல்காப்பியம் ஓதல், பகை, தூது எனப் பல பிரிவுகளைக் கூறினாலும் ஓதல், தூது பற்றிய பிரிவுகள் சங்கப்பாடல்களில் காணப்படவில்லை. கோவையில் ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு ஆகியவை கூறப்பட்டிருப்பது புதிய வளர்ச்சியாகும். அவ்வாறே பரத்தையிற் பிரிவில் பல்வேறு துறைகள் புதிதாக வளர்ந்துள்ளன.

திருக்கோவையார் நூலமைப்பினை நோக்கும்போது அஃது ஓர் இலக்கண நூலா, இலக்கிய நூலா என்ற ஐயம் ஏற்படுகிறது.

தொடங்கியதும் 'கிளவிக்கொத்து' என்பதன் தொகை, அடுத்து அதன் உட்பிரிவான துறை, அத்துறைக்குரிய இல்க்கண மாகிய கொளு, அதன் விளக்கம், அந்த இலக்கணத்துக்கு

மேற்கோளாக அமையும் கோவைப்பாடல், பாடலுக்கு உரை என்று ஒரு பதிப்பு அமைந்துள்ளது. (சரசுவதிமகால் பதிப்பு 51)

இதில் அகப்பொருள் இலக்கணத்துக்கு முதன்மையளிக்கப் பட்டுள்ளது. அவ்விலக்கணத்துக்கு மேற்கோள் பாடல்களாகவே கோவைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இலக்கணத்துக்கு இணையாக மேற்கோள் பாடலும் சிறப்பிடம் பெறும்நிலையினைப் புறப்பொருள் வெண்பாமாலையில் காணலாம். திணைப்பகுப்பு, துறை, துறையின் இலக்கணம், மேற்கோளாக வெண்பா ஆகியவை அடங்கிய இலக்கண நூல் புறப்பொருள் வெண்பா மாலை என்று பெயர் பெறுவது இதனோடு ஒப்பு நோக்கத்தக்கது. எனவே இந்த அடிப்படையில் நோக்கும்போது அகப்பொருள் இலக்கணநூலாக இந்நூல் அமைந்து கோவைப்பாடலை மேற் கோளாகக் கொண்டுள்ளது எனலாம். பாண்டிக்கோவை இறையனார் களவியலிலும் தஞ்சைவாணன்கோவை நம்பியகப் பொருளிலும் திருப்பதிக்கோவை மாறனாகப்பொருளிலும் மேற் கோளாக அமைந்திருப்பது குறிக்கத்தக்கது.

ஆனால் காலப்போக்கில் மேற்கோள் பாடல் தலைமைச் சிறப்புப் பெற்றது. பாடலின் இலக்கிய நயம், புதிய கோவை எனும் சிற்றிலக்கிய வடிவம், பக்தி எனும் பாடுபொருள், சிவன் பாட்டுடைத்தலைவனாக உள்ளமை ஆகிய பல்வேறு காரணங் களால் மேற்கோள் பாடல்களும் அப்பாடல்களால் உருவான கோவை எனும் சிற்றிலக்கிய வடிவமும் தலைமை பெற்றுத் திருக்கோவையார் என்ற இலக்கிய வடிவம் முதன்மை பெற்றது. அவ்வாறு இலக்கியமாக இதனைக் கொள்ளும்போது அதனுள் இடம் பெற்றுள்ள கிளவிக்கொத்தும் துறைவிளக்கமான கொளுக் களும் இடம் பெற்றுள்ளமைக்குச் சரியான காரணம் கூற இயல வில்லை.கோவை எனும் சிற்றிலக்கியத்தில் முதல்நூல் என்பதால் இலக்கணமும் கூடவே கூறப்பட்டது என்று ஓரளவு சமாதானம் கூறலாம். இதனைப்போலவே திருவாரூர்க்கோவைக்கும் கொளுச் செய்யுட்கள் இருக்கவேண்டும் என்று கருதிப் பிற்காலத்தார் ஒருவர் கொளுச் செய்யுட்களை எழுதிச் சேர்த்தார் என்றும் அவை மேற்கோள் செய்யுளோடு முரணியும் மாறுபட்டும் அமைந்துள்ளன என்றும் கூறுவர். (சிற்றிலக்கியச் செல்வங்கள் ப. 69)

எனவே அகப்பொருள் இலக்கண நூலாகத் தோன்றி அது காலப்போக்கில் பக்திப்பாடல் தலைமை பெற்ற பக்தி இயக்கச் செல்வாக்கால் மேற்கோள் பாடல் முதன்மைபெற்று இலக்கிய நூலாகக் கருதப்பட்டுத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்று பெயர் பெற்றதெனலாம்.

தாய் நாற்பது

இராமசாமி கோனார்

1. பேசும் உயர்தெய்வம் பெற்றதாய் தந்தையின்
மாசில் மணிமொழியே மந்திரம் — தேசிகன்
தீதற்ற சேவடியே தெய்வத் திருவடி
கோதற்ற மூன்றெனவே கொள்.

2. அண்ணன் மனைவியும் ஆசான் மனைவியும்
மண்ணாளும் மன்னன் மனைவியும் — கண்ணிமைபோல்
நின்னை வளர்த்தவளும் நேயன் மனைவியும்
அன்னையே ஆவர் அறி.

3. அன்னை முதற்றெய்வம் ஆகுமே என்றுநம்
முன்னோர் மொழிந்த மொழியெலாம் — பொன்னே போல்
கொண்டு வணங்கிக் குறையிலா தென்றுநாளும்
தொண்டுசெய் தீருந் துயர்.

4. ஈரைந்து திங்கள் இருக்க இடமளித்தாள்
பாரஞ் சுமந்தாள் பின் பாரளித்தாள் — பார்வந்த
பின்னுந் துயருற்றாள் பேசரிய அத்தகையாள்
அன்னையே தெய்வமும் ஆம்.

5. விண்ணகத்தின் கற்பகத்தை விஞ்சுபுகழ் தேனுவைக்
கண்ணாரக் கண்டதிலை கற்றிருப்போம் — எண்ணுங்கால்
மண்ணகத்தின் கற்பகமாய் மாண்புறுநற் றேனுவாயுன்
கண்ணெதிரே தாயுள்ளாள் காண்.

உரை

செய்யுள் — 1

பெற்ற தாய் பேசும் உயர் தெய்வம் — நம்மைப் பெற்றெடுத்த நற்றாயே முன்னின்று பேசுகின்ற சிறந்த தெய்வமாகும், தந்தையின் மாசு இல் மணிமொழியே மந்திரம் — தந்தையின் குற்றமற்ற நல்லுரைகளே மந்திர மொழியாகும், தேசிகன் தீதற்ற சேவடியே தெய்வத் திருவடி — புகழ் சான்ற நல்லாசிரியனின் நன்மை

சான்ற சிவந்த திருவடியே இறைவன் திருவடியாகும், கோதற்ற மூன்று எனவே கொள்—குற்றமற்ற மூன்று நற்பொருள்களாகவே இவைகளைக் கொள்ளுதல் வேண்டும்

அன்பே இறைவனாதலின், அன்பின் வடிவம் நற்றாய் பேசுந் தெய்வம் எனப்பட்டாள். மைந்தர் நலன் கருதும் தந்தையின் சொல், தீமை பயக்காதாகலின் அவர் மொழி மந்திரம் ஆயது. கோது — குற்றம்.

செய்யுள்—2

அண்ணன் மனைவியும்—அண்ணனது மனைவியும் ஆசான் ஆசிரியரது மனைவியும் — மனைவியும், மண்ணாளும் மன்னன் மனைவியும் — உலகத்தை ஆளுகின்ற அரசன் மனைவியும் கண் இமை போல் நின்னை வளர்த்தவளும் — கண்ணை இமை காப்பது போல் நின்னைப் பாதுகாத்து வளர்த்தவளாகிய வளர்ப்புத் தாயும், நேயன் மனைவியும் — நின் அன்பன் மனைவியும், அன்னையே ஆவர் அறி — ஆகிய இவ்வைவரும் தாயாகவே போற்றத்தக்கவர் என அறிவாயாக.

ஐவரும் ஈன்றாளோடு ஒருங்குவைத்து மதிக்கத்தக்கார் ஆவர்.

செய்யுள் — 3

அன்னை முதல் தெய்வம் ஆகுமே என்று — பெற்ற தாய் முதல் தெய்வம் ஆகும் என, நம் முன்னோர் மொழியெலாம் — நம் சான்றோர்கள் கூறிய நல்மொழிகளையெல்லாம், பொன்னே போல் கொண்டு — சிறப்பாகக் கொண்டு வணங்கிக் குறையிலாது என்றும் செய் — காலை, மாலை தாயைத் தொழுது எக் குறையும் நேராவண்ணம் எப்பொழுதும் செய்வன செய்து வாழ்வாயாக, தீரும் துயர் — அங்ஙனம் செயின் பிறவித் துன்பம் நீங்கும். ஈண்டு, துயர் என்பது பிறவித்துன்பத்தினை உணர்த்துவதாகும்.

செய்யுள்—4

ஈரைந்து திங்கள் இருக்க இடம் அளித்தாள் — மாண்மிக்க மனிதப் பிறவி எடுக்கக் கருவாக அமைந்து, உருவாகத் தோன்றும் கால அளவாம் முந்நூறு நாட்கள் அளவும், தன் வயிற்றைத் தங்கும் இடமாகக் கொடுத்தாள், பாரம் சுமந்தாள் — மண்ணகத்தே தோன்றுமளவும் சுமையாகச் சுமந்திருந்தாள், பின் பாரளித்தாள் — பின்னர் மகவாகப் பெற்றெடுத்தாள், பார் வந்த பின்னும் துயர் உற்றாள் — பிறந்த பின்னும், வளர்க்குங்கால் பெரிதும் துன்பம் உற்றாள், பேசரிய அத்தகையால் அன்னையே, தெய்வமும் ஆம் இங்ஙனம் சொல்லுதற்கரிய பெருமையை உடைய அவளே தாய்; அவளே தெய்வமும் ஆவாள்.

செய்யுள் — 5

விண்ணகத்தின் கற்பகத்தை — தேவருலகத்தில் இருப்பதாகக் கூறப்படும் கற்பக மரத்தையும், விஞ்சு புகழ் தேனுவை — மிக்க புகழ் சான்ற காமதேனுவையும், கண்ணாரக் கண்டது இலை — நாம் நேர்முகமாகக் கண்டது இல்லை, கற்று இருப்போம் — அவைகள் இருப்பதாக நூல்களில் கண்டிருப்போம், எண்ணுங்கால் மண்ணகத்தின் கற்பகமாய் — ஆராயுமிடத்து இம் மண்ணுலகில் நின் கண்கள் காணத்தக்க கற்பக மரமாகவும், மாண்பு உறுநல் தேனுவாய் — மாண்புடைய நல்ல காமதேனுவாகவும், உன் கண்எதிரே தாய் உளாள் காண் — நின் கண்முன்னே தாய் இருக்கிறாள் என்பதை அறிவாயாக.

கற்பகமும், காமதேனுவும் தேவருலகத்தில் காணப்படுவன, ஆண்டு சென்று வேண்டுவன பெறுதல் அரிதாம். மக்கள் வேண்டுவனவற்றை மனமுவந்து கொடுக்கும் ஈன்றாள், கண் கண்ட கற்பகமும், காமதேனுவும் ஆவாள் வேறுவேறாய கற்பகமும், காமதேனுவும் ஒருருவாய், தாய்க்கு நிகராக என உணர்க.

நூலறிமுகம்: பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்களின்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

I. எழுத்ததிகாரம் (பக்.405) ரூ 40/-

II. சொல்லதிகாரம் (பக்.460) ரூ 45/-

[பண்டித வித்துவான், பேராசிரியர் தி. வே. கோபாலையர் அவர்கள் இரு நூல்களுக்கும் முறையே 25, 28 பக்கங்களில் எழுதிய ஆய்வு அறிமுக உரையுடன்]

தாமரை வெளியீட்டகம், 367 மேலவீதி, தஞ்சாவூர்-9.

இலக்கணப்படிப்பும் இலக்கண அறிவும் குறைந்து வரும் இந்நாளில் இத்தகைய நூல் வெளிவருவது வரவேற்கத்தக்க ஒன்றாகும். பல ஆண்டுகள் தொல்காப்பியப் பெருநூலைப் புலவர் வகுப்புக்கும் பிற வகுப்புக்களுக்கும் கற்பித்த நிலையில் அவருடைய சிந்தனையில் உருவான பல எண்ணங்களையும், செய்திகளையும் இந்நூலில் தந்துள்ளார். முன்னுரை, எழுத்தியல் கோட்பாடுகள் என்ற தலைப்புக்களில் இவர் தரும் விளக்கங்கள் இவருடைய இலக்கணப் புலமையைக் காட்டுவதாக உள்ளன. தொல்காப்பியச் சூத்திரங்கள் பலவற்றுக்கு இவர் தரும் புதிய

விளக்கங்களும், உரையாசிரியர்கள் எழுதிய உரைகளை ஒப்புமைப்படுத்திச் சொல்லும் சில ஒப்புமைச் செய்திகளும் இந் நூலுக்கு அணி சேர்ப்பவையாக அமைகின்றன. மரபிலக்கண அறிவோடு தமிழ்ச் சிந்தனையில் எழும் இக்கால எண்ணங்களை யும் இவர் ஆங்காங்கே கொடுத்திருப்பது போற்றுதற்குரியதாகும். மரபிலக்கண அறிவு எங்கே மாய்ந்து விடுமோ என்று கவலைப் படுகின்ற உள்ளங்களுக்கு ஆறுதல் தரும் வகையில் இவருடைய நூல் அமைந்துள்ளது.

— தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் எழுத்ததி
கார உரைநாலுக்கு எழுதிய அணிந்துரையில் ...

"தலை சிறந்த தமிழறிஞரும் வடமொழிப் பேராசிரியருமான திரு மு. அருணாசலம் அவர்கள் இவருடைய புதிய கருத்துக் களைப் பாராட்டிக் கூறினார்கள். அதனால் இவர் உரை வெளிவரின் அது தமிழுக்குப் பயனுடையதாக இருக்கும் என எண்ணி எவ்வளவு விரைவாக எழுத முடியுமோ எழுதி அச்சிடக் கொடுங்கள் மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று விரைவு படுத்தி வந்தேன்."

— திரு யு. சுப்ரமணியன் இ. ஆ. ப. (ஓய்வு) அவர்
களின் — எழுத்ததிகார உரை நூலுக்கான —
வாழ்த்துரையில் ...

"தொல்காப்பியம் முழுமைக்கும் இன்று கிடைப்பது, 1000 ஆண்டுகட்கு முன் தோன்றிய இளம்பூரணரது உரையே, அதன் பின் நூல் முழுமைக்கும் நாம் பெறுவது ஆசிரியர் பாலசுந்தரனார் எழுதியுள்ள இப்புத்துரையேயாகும். இடையில் தோன்றிய பல சான்றோர் உரைகள் ஒவ்வோர் அதிகாரத்திற்கே உள. முழுமைக்கும் உரை எழுதியதாகக் கருதத் தகும் ஆசிரியர் நச்சினாக்கினியர் உரையுள் பொருளதிகாரத்தின் இறுதிப் பகுதிகள் கிடைக்கவில்லை. எனவே நூல் முழுமைக்கும் உரை வேண்டிய வேட்கையை நிறைவு செய்யும் முறையில் 1000 ஆண்டுகட்குப் பின் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வரைந்து தந்தவராக இவர் திகழ்கின்றார். இவருடன் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இனி எழுவராகின்றனர்."

— பேராசிரியர், மேஜர், அ. கிருட்டிணமூர்த்தி,
எம். ஏ., பி. எல்., அவர்கள் எழுத்ததிகாரவுரை
நூலுக் கெழுதிய 'உரை பெறு வாழ்த்தில் ...'

"உரை சுருக்கமாக வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல் முதலிய சிதைவுகளுக்கு இடனாகாது இனிய நடையில் அமைந்துள்ளது. மொழி நூற் கருத்துக்களும் சொற்களின் தொல்லுருவ ஆராய்ச்சி பற்றிய குறிப்புக்களும் தேவையான இடங்களின் சுட்டப்பட்டுள்ளன".

"ஒவ்வோரியலின் தொடக்கத்தும் அவ்வியலுக்கு வழங்கப் பட்டுள்ள பெயர்க்காரண விளக்கம் பண்டைய உரைகளைவிட இதன்கண் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றை ஊன்றி நோக்கி உளங்கொள்ளும் இயல்பினரே இவ்வுரையினை அரில் தபப் பயிலும் தகுதியை ஓரளவு பெறுதல் கூடும்."

— பண்டித வித்துவான் பேராசிரியர்
தி. வே. கோபாலையர் அவர்கள் எழுத்ததிகார
உரைநூலுக்கெழுதிய 'ஆய்வு அறிமுகவுரை'யில் ...

"திருவாய் மொழியின் பேருரையாகிய முப்பத்தாறாயிரப் படிக்கு மகாப்பிரவேசம் என்ற நுழைவாயில் அமைந்துள்ளமை போல இக்காண்டிகையுரைக்கும் "தொல்காப்பியச் சொல் லிலக்கணக்கோட்பாடுகள்" நுழைவாயிலாக அமைந்துள்ளது." பண்டித வித்துவான், பேராசிரியர் தி. வே. கோபாலையர் அவர்கள் சொல்லதிகாரவுரை நூலுக்கெழுதிய 'ஆராய்ச்சி முன் னுரை'யில்...

"தொல்காப்பிய ஆய்வு இந்த நூற்றாண்டில் பல புதிய நோக்குகளையும் போக்குகளையும் கொண்டு இலங்கும் போது மரபுவழி எழுத்தெண்ணிப்படித்த பேரா பாலசுந்தரம் போன்ற அறிஞர்கள் மரபுவழிப்புலமையைப் புதிய நோக்கோடு இணைத்துப்பார்த்துத் தம்முடைய கருத்தைத்தெரியமாகக்கூறும் திறன் பெற்றவர்கள்."

— முனைவர் செ. வை. சண்முகம், மொழியியற்
பேராசிரியர், அண்ணாமலைப்பல்கலைக் கழகம்
(15.11.88 ஆம் நாளிட்ட கடிதத்தில்...)

"தமிழ் வல்ல இலக்கணத் தெளிவு நிறைந்த புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் தமிழ் மொழிக்கு அரண் சேர்ப்பனவாகும்."

— முனைவர்சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.எம்.லிட்.,
பி.எச்.டி., பேராசிரியர்—தலைவர், தமிழ்மொழித்
துறை, சென்னைப் பல்கலைக் கழகம். (15-11-88
ஆம் நாளிட்ட கடிதத்தில் ...)

127043
சென்னை-600 008.

உரையாசிரியர் வேண்டுகோள்

"செந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் இன்றைய மொழி நூலார் கூறும் கோட்பாடுகளுக்கு முன்னோடி, தனித் தமிழ் மரபின் கண்ணாடி, தமிழர் பண்பாட்டுக் கருவூலம், பாணினீயம் முதலாய வடமொழி நூல்களுக்குவழிகாட்டி, என்னும் சிந்தனையாளர்க்குப்பல சான்றுகள் பெற வாய்ப்பளிக்கும் வாயுரை. உரையாசிரியன்மார் புனைந்து பூசியுள்ள ஆரிய ஒப்பனைகளைத் துடைத்துத் தமிழலக்கணத்தின் செம்மாந்த திருமுகத்தைக் காட்டும் தெளிவுரை. தமிழின் முன்மையினையும் தனித்தன்மையினையும் அறிவியற் செம்மையினையும் ஆராய்வார்க்குத் துணைபுரியும் ஆக்கவுரை. தமிழிலக்கணக் கோட்பாடுகளைத் தெரிந்தும், தெரியாதும் திரித்துப்போலிக் கருத்துக்களை உண்மை போல எழுதி மயக்கித் தமிழின் ஒண்மையினைத் திசைமாற்றியுள்ள தொல்லுரைகளையும், தமிழ் நெறியினைப் புறக்கணித்துத் தத்தமக்குத் தோன்றியவாறு நூல் புனைந்த நன்னூல் முதலாய பின்னூற் கருத்துக்களையும் மீட்டாய்வு செய்யத்தூண்டும் நெறியுரை. மொழியியற் சிந்தனையாளர் இலக்கணப் பேராசிரியர் ஆய்வாளர் ஆகியோரேயன்றி யாவரும் பயின்றறிய வேண்டிய பகுத்தறிவு உரை இவ் ஆராய்ச்சிக் காண்டிகையுரை" — என்று தமிழ் அறிஞர் பெருமக்கள் சாற்ற வேண்டும் என்பது என் விருப்பம். என் விருப்பம் நேர்மையுடையதா? வேணவாவின் பாற்பட்டதா? மேற்கூறிய கருத்துக்களைத் தரவல்ல நிறையுடையதா குறையுடையதா? அன்றிக் கறையுடையதா? என்பதை இவ்வுரையைச் சிலமுறை நோக்கித் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தெரிவிக்க வேண்டியது நல்லறிஞர் தம் பொறுப்பு போலிகள் நிற்க, தமிழுக்கு வேலியாகத் திகழும் ஆயிரமாயிரம் அறிஞர் பெருமக்கள் அதனைச் செய்யவேண்டுமென வணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்பன்,
ச. பாலசுந்தரம்

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]			
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TB/24.

அஞ்சல்

நூ



பெறுநர்

திருமிகு இயக்குநர் அவர்கள்

தமிழ்நாடு அரசு

ஆவணக்காப்பகம்

எழும்பூர்

சென்னை.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.